# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு. குலாம் முஹம்மது**

Volume-11
Issue-7

ஜூலை-2018 (ஷவ்வால்-துல்கஃதா 1439)

விலை ரூ. **20/-**






## 2018, மே-14 பாலஸ்தீன் யூதர்கள் செய்த படுகொலைகள்

## ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு வழக்கின் தீர்ப்பு ஒரு பார்வை...

## கொங்கு நாட்டில் ராவுத்தர் சாமி..?



بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹுக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


2018, மே-14 பாலஸ்தீன் யூதர்கள் செய்த படுகொலைகள் - 4
அல் அக்ஸா சிறு வரலாற்றுக் குறிப்பு..! - 11
சிலுவை யுத்தம் 2.0 - 14
முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) - 18
தலையங்கம் - 29
வி.சி.க. வழங்கிய காயிதே மில்லத் பிறை விருது - 32
ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு வழக்கின் தீர்ப்பு.... ஒரு பார்வை... - 41
இந்துத்துவாவை விமர்சிப்பவர்களை கொலை செய்ய சதி! - 49
பா.ஜ.க. அரசின் குருகுல கல்வி நடைமுறை அமல்..! - 51
நூல் மதிப்புரை - 53
நம்மை படைத்த இறைவன் ஒருவனே! - 54
எது முதலில்? - 56
கொங்கு நாட்டில் மத நல்லிணக்கக் குறியீடு! - 59
ஷாஃபாஸின் சாதனை! - 62



ஜூலை-2018

# வைகறை வெளிச்சம்

ஷவ்வால்-துல்கஃதா 1439

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham




# 2018, மே-14 பாலஸ்தீன்

# யூதர்கள் செய்த படுகொலைகள்

வரலாற்றைப் புரட்டிப் போடும் முடிவுகளை எடுப்பதில் வல்லவர், இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

ஆமாம், அறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அல்லாஹ்வின் வழிகாட்டுதல்கள், அரபுக்களோடும், அரபுக்களின் நிலப்பரப்புகளோடும் முடங்கிப் போயிருக்கும், எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த முடிவை எடுக்காது இருந்திருந்தால். ஆமாம், அரபுக்களின் ஆத்திரங்களையும் ஆணவங்களையும் ஒன்றாய் ஒடுக்கிடும் அளவில் ஹுதைபிய்யா ஒப்பந்தத்தைச் செய்தார்கள்.

அன்றளவும், அரபுக்களோடு பிரச்சாரம் செய்வதையும், அவர்களின் சூழ்ச்சிகள், சுழன்றுவரும் வாள்கள், நயவஞ்சகத்தனம் ஆகியவற்றையே எதிர்கொண்டு வருவதில் மிகையான நேரத்தையும், கிடைத்ததற்கரிய தோழர்களின் உயிர்களையும் தந்து கொண்டிருந்த பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா உடன் படிக்கைக்குப் பின் தனது பார்வையை உலகின் இதரப்பாகங்களை நோக்கித் திருப்பினார்கள்.

உலகெங்கிலும் ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர்களுக்கெல்லாம் கடிதங்களை எழுதினார்கள். அல்லாஹ்வின் பக்கம் அவர்களை அழைத்தார்கள். இந்த அழைப்புகளுள் ஒன்று ரோமப் பேரரசின் வல்லமை பெற்ற ஆட்சியாளனுக்கு சென்றது.

அவன் அந்தக் கடிதத்தை ஊதாசீனப்படுத்தியதோடு அல்லாமல், பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பிய தூதரைக் கொலையும் செய்து விட்டான்.

இந்தக் கொலைக்குப் பழிவாங்கிட இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உசாமா (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு படையை ரோமப் பேரரசை நோக்கி அனுப்பிட வேண்டியதாயிற்று. இதில் மூண்ட பகையின் பின்னணியில்தான். ஷாம் தேசம் என்று அன்றும், சிரியா என்றும் இன்றும் அழைக்கப்படும் பகுதியை வென்றார்கள் முஸ்லிம்கள். இது இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா குடியரசு தலைவர், உமர் அல் ஃபாரூக் (ரழி) அவர்களின் காலத்தில் கி.பி. 637-இல் நடைபெற்றது.

இந்த ஷாம் பிரதேசத்தின் ஒரு பகுதிதான் இன்றைய பாலஸ்தீன்.

இதே ஷாம் பிரதேசத்தில் வீற்றிலிருந்தது தான் "ஜெருசலம்" பைத்துல் முகத்திஸ்.

ஜெருசலம் ; கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், முக்கியமான பகுதி. முஸ்லிம்கள்

தொழுகையில் முன்னோக்கும் திசையாகவும் (கிப்லா) முதலில் இதுவே இருந்தது.

இதுவே முஹம்மத் (ஸல்) அவர்களின் விண்ணேற்றத்தின் தளமாக அமைந்தது. இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய இடம்.

அன்றைய காலத்தில் இந்தப் பகுதியை கிருஸ்தவர்களின் பாதிரிகள், தாங்கள் கைகளில் வைத்திருந்தார்கள். இவர்கள் தாமாகவே முன் வந்து இந்தப் பகுதியை கலீபா உமர் (ரழி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

கிருஸ்தவ தலைமை பாதிரியார் அவர்களின் வேண்டுகோளின்படி இஸ்லாமிய குடியரசின் ஆட்சித் தலைவர் உமர் பாரூக் (ரழி) அவர்களே நேரில் சென்று அந்தப் பகுதியை கைப்பற்றினார்கள். அதைச்சுற்றிப்பார்த்தார்கள். அல் அக்ஸா பள்ளிவாசலை நிர்மானித்தார்கள்.

ஜெருசலத்தில் கிருஸ்தவர்களின் வழிபாட்டு உரிமைகளை கலீபா உமர் (ரழி) அவர்கள் உறுதி செய்தார்கள். முஸ்லிம்களின் பராமரிப்பின் கீழ் மொத்த "ஷாம்" பகுதி (பாலஸ்தீன் உள்ளிட்ட பகுதிகள்) வந்து விட்டதால், முஸ்லிம்களின் உரிமைகளும் நிலை நாட்டப்பட்டன.

ஆனால்யூதர்களுக்கு, வழிபாட்டு உரிமைகள் எதையும் வழங்கிடக் கூடாது என்பதில் கிருஸ்தவர்கள் கவனமாக இருந்தார்கள். யூதர்களை அங்கிருந்து வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தார்கள்.

கிருஸ்தவர்களை சமாதானப்படுத்தி யூதர் களுக்கும் வழிபாட்டு உரிமைகளைப் பெற்றுத் தந்தார்கள். கலீபா உமர் அல் பாரூக் (ரழி) அவர்கள்.

ஆனால் யூதர்கள் நன்றி கெட்டவர்கள் என்பதை வரலாறு முழுவதும் நிரூபித்துக் கொண்டே இருந்தார்கள். தங்களுக்கு எல்லா விதத்திலேயும் ஆதரவைத் தந்த முஸ்லிம்களுக்கு தொடர்ந்து தொந்திரவுகளையும், நயவஞ்சகத் தையுமே தந்து வந்தார்கள். அதுவே இன்றும் தொடர்கின்றது.

**கான்ஸ்டான்டிநோபுள் 1453, மே 29**

கான்ஸ்டான்டிநோபுள் என்கிற இடம் அன்றைய உலகின் மையப்பகுதியாக கருதப் பட்டது. இது முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டது.

அந்த நாள் 1453, மே-29 (புதன்), இந்த நாள் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அளித்த வாக்குறுதிகளில் ஒன்று நிறைவேறிய நாள். அன்றைய கான்ஸ்டான்டி நோபுள்தான் இன்றைய இஸ்தான்புல். துருக்கி யின் மிக முக்கியமான நகரங்களுள் ஒன்று.

பெருமானார் (ஸல்) அவர்களின் அந்த அறிவிப்பு வரலாற்றில் இப்படிப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி) அவர்கள் அறிவித்ததாக இமாம் அஹ்மத் பின்வரும் ஹதீசைப் பதிவு செய்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்களிடம், கான்ஸ்டாண்டி நோபுள், ரோம் ஆகிய நகரங்களில் எது முதலில் வெற்றி கொள்ளப்படும் என வினவப்பட்ட போது, ஹிர்கில் மன்னரது, நகரம் தான் (கான்ஸ்டாண்டி நோபுள்) முதலில் வெற்றி கொள்ளப்படும் என பதிலளித்தார்கள்". (நபிமொழி ஆதாரம் : முஸ்னத் அஹ்மத், பாகம்-6, ஹதீஸ்-4, தபாரானி 20:61, இப்னு ஹிப்பான் 6699, 6701, ஹாக்கிம் 4:30 இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் ஆகியோரின் நிபந்தனைகளின் படி இந்த ஹதீஸ் ஸஹீஹானது என ஹாகிம் குறிப்பிடுகின்றார்கள்)

இந்த நபிமொழியின் செயலாக்கத்தை மே-29, 1453-இல் கொண்டு வந்தவர்கள். சுல்தான் முஹம்மத் பின் முராத் அவர்கள். இவர்கள் வரலாற்றில் முஹம்மத் அல் ஃபாத்திஹ் (வெற்றியாளர்) என அழைக்கப்படுகிறார்கள்.

இவர்களின் காலத்தில் நிலை நிறுத்தப்பட்ட உதுமானிய கிலாபத்-ஐ தான் (முஸ்லிம்களின் ஒட்டு மொத்தமான தலைமையைத் தான்) பிப்ரவரி-22, 1924-இல் மேலை நாட்டவர்கள் செய்த சதியில் முஸ்லிம் உலகம் இழந்தது. இந்த சதியில் யூதர்கள் மிகையாக ஈடுபட்டார்கள்.

இந்த நயவஞ்சகத் தனத்தில் யூதர்களுக்கு மிக முக்கியமான உதவிகளைச் செய்தவர்கள் ஆங்கிலேயர்கள்.

இந்த ஆங்கிலேயர்களுக்கு முதல் உலகப் போரில் உளவு பார்க்கும் வேலைகளைச் செய்த வர்கள் யூதர்கள். இந்த யூதர்கள் தாங்கள் வாழ்ந்த ஐரோப்பிய நாட்டில் உள்ள ஆட்சியாளர்

களுக்குச் செய்த துரோகங்களுக்கு கூலியாக தந்த வாக்குறுதிதான் பால்பர் பிரகடனம் என்பது. இது *1917*-இல் செய்யப்பட்ட பிரகடனம்.

இந்த பால்பர் பிரகடனத்தில், முக்கிய பகுதி, யூதர்களுக்கு ஒரு தனி நாடு அமைய ஆங்கில நாட்டின் தலைமையிலான கூட்டுப்படைகள் எல்லா விதமான உதவிகளையும் செய்யும் என்பதாகும்.

இந்த பால்பிரகடனம் செய்யப்பட்டு *100* ஆண்டுகள் *2017*-இல் முடிந்தது. அதுபோது யூத நாடு ஒன்று உருவாக்கப்பட்டு விட்டது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான பாலஸ்தீன் பகுதியை இரண்டாகப் பிரித்து இஸ்ரேல் என்ற யூத நாடு மே-*15, 1948* இல் நடந்தது. இதற்கு எல்லா வகையான தீவிரவாதத் தாக்குதல் களையும் யூதர்களின் இரண்டு தீவிரவாத அமைப்புகளான இர்ஹம், ஹாகனம் என்ற தீவிரவாத அமைப்புகள் நடத்தின. இவர்கள் பாலஸ்தீன மக்கள் வாழ்ந்த பகுதிகளில் வெடி குண்டுகளை வீசி, அந்த மக்களை கொலை செய்தனர். எஞ்சியோர் பீதிவயப்பட்டு ஓடினார்கள்.

இந்த தீவிரவாத தாக்குதலின் *8* லட்சம் பாலஸ்தீன் முஸ்லிம்கள் அகதிகளாக ஆக்கப்பட் டார்கள். *1948*-இல் அகதிகளாக ஆக்கப்பட்ட வர்கள் இன்றளவும், அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

இதனால் இந்த நாளை முஸ்லிம்கள் பேரழிவு நாள் எனப் பொருள்படும். நக்பா நாள் என அறிவிக்கின்றார்கள்.

இந்த நாளிலிருந்து (மே-*15, 1948*) யூதர்கள் ஜெருசலம் அதில் அமைந்துள்ள அல் அக்ஸா மஸ்ஜித் இவற்றை கையகப்படுத்திட சில கட்டுக் கதைகளைக் கட்டி விட்டனர்.

அதில் அல் அக்ஸா மஸ்ஜித்-இன் கீழ், சலோமன் ஆலயம் ஒன்றிருந்ததாகக் கூறி வருகின்றார்கள்.

இந்த சாலோமன் ஆலயத்தை இடித்து விட்டுத்தான் அல் அக்ஸா மஸ்ஜித் கட்டப் பட்டது என கதைக் கட்டிக் கொண்டிருக் கின்றார்கள். இத்தோடு நில்லாமல், அல் அக்ஸா மஸ்ஜித்-இன் கீழ் சுரங்கப்பாதைகளைத் தோண்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

*1967*-இல் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக் குமிடையே நடந்த போரில், ஜெருசலேம் வீற்றிருக்கும் அல் அக்ஸா யூதர்களின் கைகளிலிருந்து சென்றது.

*1973*-இல் இஸ்ரேலுக்கும் - எகிப்திற்கு மிடையே நடந்த போரில் இஸ்ரேல் எதிர்பாராத தோல்வியைத் தழுவியது. உடனேயே ஐக்கிய நாடுகள் சபையின் வழி சமாதான ஒப்பந்தம் ஒன்றை செய்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல் அக்ஸா வளாகம் (*35* ஏக்கர்) முஸ்லிம் வஃக்ப்-இன் கீழ் இருக்கும் என்றும், அதன் பாதுகாப்பு - இஸ்ரேலின் கைகளிலிருக்கும் என்றும் ஒப்பந்தமானது. இந்தப் பாதுகாப்பு அதிகாரத்தைப் பயன் படுத்தி அல் அக்ஸா மஸ்ஜித்துக்குள் பல ஆக்கிரமிப்புகளை நடத்தி விட்டது இஸ்ரேல் - அத்தோடு அல் அக்ஸா மஸ்ஜித்-இன் அஸ்திவாரத்தின் கீழ் ஒரு சுரங் கத்தை தோண்டும் வேலையையும் செய்தது.

இந்த பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அதிலிருக்கும் அல் அக்ஸா மஸ்ஜித்-ஐ பாது காத்திட, அவற்றை யூதர்களின் கைகளிலிருந்து முற்றாகப் விடுவித்திட வேண்டும். இதற்காகவே கடைசி ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமையை அல் குத்ஸ் தினம் என அறிவித்துள்ளார்கள் உலக முஸ்லிம்கள். இதன்மூலம் உலக மக்களின் பார்வையை இந்த பிரச்சனையின் பக்கம் திருப்பி விடுகின்றார்கள்.

### இந்த வருடம் 2018

இந்த வருடம் யூத நாடு பிறந்து *70* ஆண்டுகள் முடிவடைந்தன என இஸ்ரேல் அறிவித்தது. முஸ்லிம்கள் நக்பா-வின் பேரழிவு நடந்து *70* வருடங்கள் முடிந்தன என்றும், பாலஸ்தீனிலிருந்து யூத தீவிரவாத செயல்களின் வழி வெளியேற்றப்பட்ட மக்கள் பூர்வீகப் பூமிக்குத் திரும்பிட வழி வகுக்க வேண்டும் எனப் போராட்டங்களைத் தொடங்கினார்கள்.

எரிகின்ற தீயில் எண்ணெய்யை ஊற்றிட வேண்டும் என்பதற்காக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தார். அத்தோடு நில்லாமல் அமெரிக்காவின்

இஸ்ரேல் நாட்டு தூதரகத்தை ஜெருசலத்திற்கு மாற்றப் போவதாக அறிவித்து மாற்றிடவும் செய்தார். இதைத் தொடர்ந்து "பிரேகுவே' என்ற நாடும் தனது இஸ்ரேலிய தூதரகத்தை ஜெருசலத்திற்கு மாற்றியது.

இவற்றையெல்லாம் பாலஸ்தீன முஸ்லிம்கள் எதிர்த்தார்கள். இஸ்ரேல் தன்னுடைய மிருக பலத்தைப் பயன்படுத்தி நூறுக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்துள்ளது.

நோன்புகளும் தொடங்கின. ஜெருசலம் வீற்றிருக்கும் பாலஸ்தீன மேற்கு கடற்கரைப் பகுதி இஸ்ரேலிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி. அதனை அது காலி செய்திட வேண்டும் என்பதே இஸ்ரேல் செய்து கொண்ட பல்வேறு சர்வதேச ஒப்பந்தங்களும் வலியுறுத்துகின்றன.

ஆனால் இஸ்ரேலில் அடாவடியாகத்தான் ஆக்கிரமிப்புகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கின்றது. இப்போது ஜெரு



சலத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிப்பதன் மூலம் அமெரிக்கா இன்னொரு சர்வதேச குற்றத்தைச் செய்கின்றது.

இந்த வருடம் 2018, மே-14 அன்று மட்டும் காஸா எல்லைப் பகுதியில் 64 பேரை கொலை செய்தது. இவர்கள் தங்கள் சொந்த பூமிக்கு திரும்பிட அனுமதிக்கப்பட வேண்டும் என அமைதி வழியில் போராடியவர்கள்.

அதேபோல் ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ஆக்கிட அனுமதிக்க மாட்டோம் எனப் போராடிய பாலஸ்தீன் முஸ்லிம்கள் பலரையும் சுட்டுக் கொலை செய்தது இஸ்ரேல்.

இவர்கள் அனைவரையும் அதாவது இத்தனை ஷஹீதுகளையும் மே-15, 2018 அன்று நல்லடக்கம் செய்தனர். அவர்களின் ரமழான்

அதாவது இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளை அமெரிக்கா அங்கீகரிக்கின்றது. இஸ்ரேல் சர்வதேச ஒப்பந்தங்களை மீறியதையும் அங்கீகரிக்கின்றது என்றே பொருள்.

ஐக்கிய நாடுகள் சபையில் ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக அறிவிக்கக்கூடாது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னரும் அமெரிக்கா தன் அடாவடித் தனத்தை தொடர்கின்றது.

**அமெரிக்காவின் சட்டம்**

அமெரிக்காவின் இஸ்ரேல் நாட்டுத் தூதரகத்தை ஜெருசலத்திற்கு மாற்றிட வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு அமெரிக்காவில் வாழும் யூதர்கள், ஒரு பெரும் அழுத்தத்தை நீண்ட காலமாக அமெரிக்கா விற்கு கொடுத்து வருகின்றார்கள்.

இந்த அழுத்தங்களுக்கு ஆட்பட்டு இதை சிலபல அமெரிக்கா நாடாளு மன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள்.

இந்த அழுத்தங்களின் பின்னணியில் அமெரிக்காவின் நாடாளு மன்றத்தில் ஒரு சட்டம் *1995,* அக்டோபர் *30* ஆம் நாள் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்திற்கு "Jerusalem Embassy Act Oct 30, 1995" என்று பெயர். அதாவது ஜெருசலம் தூதரகச் சட்டம் அக்டோபர்*-30, 1995.*

இப்படி சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும் இந்தச் சட்டத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த அமெரிக்க அதிபர்கள் புஷ், ஒபாமா உள்ளிட் டோர் இந்தச் சட்டத்தைக் கண்டு கொள்ள வில்லை, அதைச் செயல்படுத்திட முன் வரவில்லை.

ஆனால் இப்போதைய அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் வர்வதேச விதிகளைப் பற்றிக் கவலைப்படாமல் இஸ்ரேலின் தலை நகராக ஜெருசலத்தை அறிவித்தார், செயல்படுத் தினார். அப்போது கிடப்பில் போடப்பட்டிருந்த இந்தச் சட்டத்தைதான் செயல்படுத்தி விட்ட தாக மார் தட்டினார்.

**மருத்துவ உதவியாளர்களைக் கொலை செய்யும் இஸ்ரேல்**

டிசம்பர்*-6, 2017*-இல் டிரம்ப் அமெரிக் காவின் இஸ்ரேல் நாட்டுத் தூதரகத்தை ஜெரு சலத்திற்கு மாற்றப் போவதாக அறிவித்தார். அன்றையிலிருந்தே உலக மக்களும், பாலஸ் தீனில் வாழும் மக்களும் தங்கள் எதிர்ப்பைக் காட்டி வருகின்றார்கள், அமைதி வழியில். அவர்கள் மீது கொத்துக் குண்டுகளைப் பாய்ச்சி வருகின்றது இஸ்ரேல் நாட்டு இராணுவம்.

இதனை 'Sniper Shooter' சினிப்பர்-வகை குண்டுகள் எனக் கூறுகின்றனர்.

இந்த சினிப்பர் குண்டுகள் உடலில் பட்ட வுடன் உள்ளே புகுந்து தெறிக்கும். இந்தத் தெறிப்பில் உடலின் உள் உறுப்புகள் அனைத்தும் சின்னா பின்னாமாகச் சிதறும்.

இந்தக் குண்டுகள் துளைக்கும் மனிதர்கள் வெறும் பிணமாக விழ மாட்டார்கள். அங்கே ஒரு மாமிச குவியலே கிடக்கும். அந்த அளவுக்கு உடல் உறுப்புக்கள் சிதறடிக்கப் பட்டிருக்கும்.

இந்தக் குண்டுகள் நேரடியாக மனிதர்கள் மீது படாமல் நிலத்திலோ, கல்லிலோ பட்டா லும் பட்டவுடன் பல கூறுகளாகப் பிரிந்து பரவி பக்கத்தில் இருப்பவர்களைத் தாக்கும். இதில் பலர் காயம்படுவார்கள், இப்படிக் காயம் படுபவர்களைக் காப்பாற்றிட பல பாலஸ்தீன இளம் பெண்கள் காஸா பகுதியில் உழைத்து வருகின்றார்கள். இவர் கள் "Para Medics" என்றழைக் கப்படும் மருத்துவத்திற்கு இணை யான படிப்புகளை படித்தவர்கள்.



இவர்கள் தங்கள் வாழ்வின் இலட்சியமே, காயம்படும் பாலஸ் தீனர்களைக் காப்பாற்றுவது என ஆக்கிக் கொண்டார்கள். இவர் களையும் மருத்துவ உதவிகளைச் செய்பவர்களையும் யூதர்கள் கொலை செய்து வருகின்றார்கள். இவர்கள் இஸ்ரேலிய

இராணுவத்தின் தனி இலக்கு.

2018 மார்ச், திங்களில் தொடங்கி மே-15 வரைக்கும் இப்படி காயம் பட்டவர்களுக்கு உதவி செய்யும் இணை மருத்துவர்கள் 238 பேரைக் கொலை செய்திருக்கின்றன இஸ்ரேலின் இராணுவம்.

இதில் அண்மையில் இதேபோன்று மருத்துவ உதவிகளைச் செய்து வந்த Razan-al-Nijjar "ராஸான்-அல்-நிஜார்" என்ற 21 வயது பாலஸ்தீன முஸ்லிம் பெண், இணை மருத்துவரின் கொலை, உலக மக்களின் கவனத்தைப் பெரிதாகக் கவர்ந்தது.

21 வயதே ஆன இந்தப் பெண்மணி தனது ஈடு இணையற்ற உழைப்பால் (மருத்துவ உதவிகளால்) உலகத்தையே கவர்ந்திருந்தார். உலக ஊடகங்களில் அதிகமாகப் பேசப் பட்டவர்.

தினமும் 13 மணிநேரம், யூதர்களால் சுடப்பட்டு, காயமடைந்து கிடப்பவர்களை கவனித்து வர வேண்டும் என தனக்குள் ஓர் சங்கல் பத்தைச் செய்து கொண்டு உழைத்தார்.

இவர் ஆற்றிய பணிகளாலும், காப்பாற்றிய உயிர்களாலும் அல் ஜெஸீரா தொலைக்காட்சிக்குத் தந்த பேட்டியை மேற்கோள் காட்டி பேசாதவர்களே இல்லை. அந்த அளவுக்கு இந்தப் பேட்டி உலகமெல்லாம் பரவியது.

அதேபோல் அமெரிக்காவின் "நியூயார்க் டைம்ஸ்" என்ற பத்திரிகைக்கு தந்த பேட்டியும் உலக அளவில் மக்களின் மனதைக் கவர்ந்தது.

இந்த ஷஹீது ராஸான்-அல்-நிஜார் மங்கையின் உயிரை எப்படியும் குடித்தாக வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டது யூத இராணுவம். ஒரு நாள் பகல் 11 மணிக்கு அவள் காயம்பட்டவர்கள் "ஆம்புலன்ஸ்"-இல் ஏற்றிக் கொண்டிருக்கும் போது சுட்டுக் கொன்றார்கள். (ஆதாரம் FL : 06 July 2018)

இது உலகெங்கும் ஒரு பெரும் விவாத மானது. இப்படி அப்பாவிகளைக் கொலை செய்கின்றீர்களே? எனக் கேட்டபோது யூத இஸ்ரேலிய இராணுவத்தினர் இப்படிப் பதில் சொன்னார்கள், "There are no innocent people in Gaza" - "காஸா பகுதியில் அப்பாவி மக்கள் என்று யாருமில்லை"

"பாலஸ்தீன முஸ்லிம்கள் அனைவரும் எதிரி படைகள், அவர்களுடைய இரத்தத்தை ஓட்டியே திருவோம். (ஆதாரம் : Radiance, 6-12, May 2018)

இப்படி பேசுவது இஸ்ரேலின் இராணுவ வீரர்கள் மட்டுமல்ல, இஸ்ரேலின் அமைச்சர்களும், அரசியல் தலைவர்களுந்தான். அவர்கள் சுமார் 200 ஆண்டுகளாக நடத்தி வந்த தீவிரவாதம் இன்னும் தொடர்கின்றது.

**உலக முஸ்லிம்களுக்கு பாலஸ்தீன முஸ்லிம்களின் வேண்டுகோள்...**

உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் பாலஸ்தீனில் வீற்றிருக்கும் அல்குத்ஸ் வர வேண்டும். அவர்கள் அங்கு வீற்றிருக்கும் அல் அக்ஸா மஸ்ஜித்-இல் தொழ வேண்டும். இதன் மூலம் அல் அக்ஸா மஸ்ஜித் உலக முஸ்லிம் களுக்குச் சொந்தம் எனக் காட்டிட வேண்டும். இதுவே அந்த மக்களின் வேண்டுகோள்.

இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்...

"பைத்துல் முகத்திஸ் - அல் அக்ஸாவில் சென்று தொழுங்கள், இயலவில்லை என்றால் அங்கே எரியும் விளக்குகளுக்குப் பயன்பட கொஞ்சம் எண்ணெய்யை அனுப்புங்கள்" - (நபிமொழி - அஹ்மத்) இன்னும் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

"ஹஜ் அல்லது உம்ராவுக்குச் செல்லும் ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து பின்னர் புனித மஸ்ஜிதுக்கு (மக்காவிலுள்ள கஆபாவிற்கு) செல்லுவாரேயானால், அவருடைய முன் பாவங்களும், பின் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும்" (நபிமொழி-திர்மிதி, அஹ்மத்)

இன்றைய நாட்களில் பாலஸ்தீனுக்குப் பயணம் செய்வது அங்கு தியாகங்களைச் செய்து கொண்டிருக்கும் மக்களைப் பலப்படுத்தும்.

**அரபு நாடுகளின் நிலை...**

பாலஸ்தீனத்தில் வாழும் முஸ்லிம்கள் தங்கள் கோரிக்கையை வைத்துக்கொண்டே

இருக்கின்றனர். ஆனால் அரபு நாடுகள் - குறிப்பாக சவூதி அரேபியா இரகசிய உறவு ஒன்றை யூதர்களோடு, அதாவது இஸ்ரேலிய நாட்டினரோடு வைத்து வருகின்றது, என்கின்றது பிராண்ட் லைன் ஏடு July-6, 2018.

இதேபோன்று உறவுகளை ஐக்கிய அரபு நாடுகளும் பெஹ்ரைன் நாடும் (யூதர்களோடு) இஸ்ரேல் நாட்டோடு வைத்து வருகின்றன. எகிப்தும், இஸ்ரேலோடு தீவிரவாதம் - சம் மந்தப்பட்ட விஷயங்களில் ஒத்துழைத்து வருகின்றது. (எகிப்தில் அமெரிக்காவினால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட சிசி என்பவர் ஆட்சி செய்து வருகின்றார்)

இந்த அரபு நாடுகளிலுள்ள அறிஞர்கள் "பாலஸ்தீன் இன்னும்பேசிக் கொண்டிருக்க வேண்டிய ஓர் பிரச்சனையல்ல" எனக்கூறி உலக மக்களின் கவனத்தை அல் குத்ஸ்-இலிருந்து வேறு பக்கம் திருப்பி வருகிறார்கள். எகிப்தும்-சவூதி அரேபியாவும் பாலஸ்தீன் முஸ்லிம்களிடம் ஜெருசலத்தை மறந்துவிட்டு அமெரிக்கா சொல்வதைப் போல் ஒரு சின்ன இடத்தைப் பெற்றுக் கொண்டு அங்கே வாழ்ந்திடுங்கள் என பரிந்துரை செய்து வருகின்றன.

இந்த நாடுகளெல்லாம் பாலஸ்தீனின் விடுதலைக்காகப் போராடிவரும் "ஹமஸ்" இயக்கத்தை தீவிரவாத அமைப்பு எனப் பேசி வருகின்றன. (Front Line, July-6, 2018)

இந்த "ஹமஸ்" அமைப்புக்கு உதவி செய்வதாகக் குற்றம் சொல்லித்தான் "கத்தர்" நாட்டுக்கு நோன்பு நேரத்தில் உணவு கிடைக்காமல் செய்தார்கள் சவூதி அரேபியாவும், ஐக்கிய அரபு நாடுகளும்.

**யூதர்கள் மீதான வெற்றி முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது**

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்...

"உங்களுடன் யூதர்கள் போரிடுவார்கள். அதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அப்போது பாறைகள் கூட இப்படிக் கூறும்..

ஓ..! முஸ்லிமே!...

"எனக்குப் பின்னால் ஒரு யூதன் மறைந்திருக்கின்றான். அவனை கொன்றுவிடு" எனச் சொன்னார்கள்". (நபிமொழி- புகாரி, முஸ்லிம்)

"அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலை நாட்டிடும் குழு ஒன்று சமூகத்தில் தொடர்ந்தும் நிலைத்துமிருக்கும். யார் அவர்களை இந்தப் பணியில் கைவிட்டுச் சென்றாலும், அல்லது முரண்பட்டு ஒதுங்கினாலும் அது அவர்களுக்கு எந்தத் தீங்கையும் விளைவிக்காது. அவர்கள் என்றும் மனிதர்களை மிகைத்தே காணப்படுவர்" (நபிமொழி- புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

இறுதி வெற்றி உண்மையா அல்லாஹ்வின் அடியார்களுக்கே!... - MGM





# அல் அக்ஸா

## சிறு வரலாற்றுக் குறிப்பு..!

விண்ணேற்றம் (மிஹ்ராஜ்) என்ற வரலாற்று சிறப்புமிக்க பயணத்தின் மையப்பகுதி அல் அக்ஸா மஸ்ஜித்தான். (காண்க : அல்குர்ஆன் 17:1)

கி.பி 637 ஜெருசலத்தை கலீபா உமர் (ரழி) மீட்டு விண்ணேற்ற இடத்தில் மஸ்ஜிதுல் அக்ஸாவை கட்டினார்கள்.

*705* - அப்துல் அல் மாலிக் அவர்களாலும் தொடர்ந்து அவரது மகனாலும் விரிவாக்கம் செய்யப்பப்டது.

*746* - நில நடுக்கம் ஒன்று அதை இடித்து விட்டது.

*754* - அப்பாசி கலீபா அல்மன்சூர் அவர்கள் அதனை கட்டி எழுப்பினார்கள்.

*780* - அல்மஹ்தி அவர்கள் அதனை அழகு படுத்தினார்கள்.

*1033* - நிலநடுக்கம் ஒன்று அதனை மீண்டும் குலைத்தது.

*1035* - பாத்திமத்து கலீபா அல் அஸ்ஸாஹிர் மீண்டும் அக்ஸாவை கட்டினார்கள். அதுவே இப்போதும் நின்று கொண்டிருக்கிறது.

*1095* - சிலுவைப் போர்களை தொடங்கி னார்கள் கிறிஸ்தவர்கள், போப் அர்பன் II-இன் தலைமையில்

*1099* - பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) அல் அக்ஸா பள்ளிவாசல் இவை கிறிஸ்தவர்களின் கைகளுக்குச் சென்றது. 90 வருடங்கள் கிறிஸ்த வர்கள் அல் அக்ஸா பள்ளிவாசலை கிருஸ்தவ ஆலயமாகவும் உல்லாச மாளிகையாகவும் பயன்படுத்தினார்கள்.

*1187* - சுல்தான் சலாஹுதீன் அய்யூபி அவர்கள் ஜெருசலம் அல் அக்ஸா ஆகியவற்றை மீட்டார்கள். மனித மாண்பை நிலை நாட்டினார்கள்.

*1917* - கிலாஃபத் என்ற முஸ்லிம்களின் உலக தலைமை இராணுவ பலத்தை இழந்தது. அதே ஆண்டில் ஆங்கிலேயே கிறிஸ்தவர்கள், யூதர்களுக்கு ஒரு தனி நாடு ஒன்றை முஸ்லிம்களின் பாலஸ்தீனத்தில் உருவாக்கி தருவதாக உறுதி தந்தார்கள்.

*1918* - கிறிஸ்தவ நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த உலக நாடுகளின் சபை (லீக் ஆஃப் நேஷனல்) அல் அக்ஸா இருந்த பாலஸ்தீன நிலப்பரப்பை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தது. உலகெங்கிலும் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களை அழைத்து வந்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான பாலஸ்தீன பகுதிகளில் குடியமர்த்தினனார்கள்.

*1922* - உலக முஸ்லிம்கள் பாலஸ்தீன் "சுப்ரீம் கவுன்சில்" என்றொன்றை உருவாக்கி அல் அக்ஸா பள்ளிவாசலை புனரமைத்தார்கள். இதற்கு இந்திய முஸ்லிம்கள் பெரும் தொகையை தந்தார்கள் (விரிவான தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம் மாதஇதழ் செப்டம்பர் 2009)

*1931-1935* - ஆரிய கிறிஸ்தவரான ஹிட்லரால் துரத்தப்பட்ட யூதர்கள், பாலஸ்தீனத்தில் ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு குடியமர்த் தப்பட்டார்கள்.

*1948* - யூதர்களுக்கு ஒரு நாடு, தீவிரவாதங் களின் பழி "இஸ்ரேல்" உருவாக்கப்பட்டது. அப்போது (1948-இல்) 7,32,000 முஸ்லிம்கள் அகதிகளாக ஆக்கப்பட்டார்கள்.

*1967* - முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் நடந்த போரில் அல் அக்ஸா மஸ்ஜித் வீற்றிருக் கும் பைத்துல் முகத்திஸ் (ஜெருசலம்) ஜூலை 7-ஆம் நாள் யூதர்களின் கைகளில் சிக்கியது.

அன்று முதல் இன்று வரை பைத்துல் முகத்திஸ் நகருக்கும் நுழைவதை யூதர்கள் கட்டுப்படுத்தி வருகின்றார்கள். அல் அக்ஸா மஸ்ஜித் "அல் அக்ஸா வக்ப்" - கீழ் இருக்கின்றது. ஆனால் பைத்துல் முகத்திஸ்க்குள் நுழைவது யூதர்களின் கட்டுப்பாட்டிலிருக்கின்றது. அதே ஆண்டில் (ஆகஸ்ட்) ஸலோமாகோரன் என்ற யூத மத குரு 20 யூத இராணுவ வீரர்களோடு பூஜை செய்ய அல் அக்ஸா மஸ்ஜித்-இல் நுழைந்தான். முஸ்லிம்கள் அதை தடுத்தார்கள்.

*1969* - மஸ்ஜிதின் ஒரு பகுதியை யூதர்கள் எரித்தார்கள்.

*1982* - பால் லெஸ்ரார் என்ற யூதன் வெடி குண்டாக உள்ளே நுழைந்தான். முஸ்லிம்கள் அவனை தடுத்தார்கள், மஸ்ஜிதை காப்பாற்றினார்கள், பலர் ஷஹீதானார்கள்.

*1983* - 46 யூதர்கள் மனித வெடி குண்டாக மஸ்ஜிதுல் நுழைய முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் தடுத்து அல் அக்ஸாவை காப்பாற்றினார்கள்.

*1984* - ஆகஸ்ட் 7-ல் 130 கிலோ எடை கொண்ட வெடி குண்டு ஒன்று மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழ் வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் வெடிக்கும் முன் அகற்றினார்கள். அதே ஆண்டு டிசம்பரிலும் இதுவே நடந்தது.

*1986* - ஈகை பெருநாளின் போது யூதர்கள் உள்ளே நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள். அதனால் ஆயிரக்கணக்கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். அதே ஆண்டில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று அக்ஸாவில் கண்டுபிடிக்கப்பட்டு முஸ்லிம்களால் அகற்றப்பட்டது.

*1990* - ஆகஸ்ட் 20-ம் நாள் ஒரு யூதன் இரண்டு ஏவுகணைகளை பள்ளிவாசலை நோக்கி ஏவினான். பள்ளிவாசல் சிறிது சேதம் அடைந்தது. அதே ஆண்டு அக்டோபரில் சாலமோன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டிட யூதர்கள் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைந் தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள், ஷஹீதா னார்கள் பலர்.

*1991*- அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பள்ளிவாசலை தோண்டி அஸ்திவாரத்தை பலவீனப்படுத்தினார்கள்.

*1992* - அமெரிக்காவில் வாழ்ந்த யூதர்கள் (1990-ல் நாட்டிய) கல்லை பூஜை செய்ய உள்ளே புகுந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள், ஷஹீதானார்கள் பலர்.

*2000* - யூத தீவிரவாதி ஏரியல் ஷரோன் ஆயிரக்கணக்கான யூதர்களோடு பள்ளிவாச லுக்குள் நுழைந்தான் தடுத்தார்கள். முஸ்லிம்கள், ஷஹீதானார்கள் பலர். அது முதல் ஒவ்வொரு ஜூலை 31-ம் நாளும் சாலமோன் ஆலயத்தின் நினைவு நாள் என்று அல் அக்ஸா மஸ்ஜிதுக்குள் புகுந்து கபளீகரங்கள் செய்கின்றார்கள். முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் தடுக்கின்றார்கள், பலர் ஷஹீதானார்கள்.

*2008* - ஜூலை 31-ம் நாளும் இதேபோல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். ஒவ்வொரு முறை இவர்கள் புகும்போதும் முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரை தந்து இவர்களைத் தடுக்கின்றார்கள்.

*2010* - எகிப்தில் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சிக்கு பின் பாலஸ்தீனுக்கும், எகிப்திற்கும் இடையே எழுப்பப்பட்டிருக்கும் தடுப்புச் சுவர்கள் அகற்றப்பட்டன. இதனால் பாலஸ்தீன முஸ்லிம்களுக்கிருந்த நெருக்கடிகள் பெருமள வில் குறைந்தன. குறிப்பாக மருத்துவ வசதி களும், மருந்துகளும் கிடைத்தன. இப்போது உள்ள இராணுவ ஆட்சியில் இந்த நிவாரணம் தடை செய்யப்பட்டு விட்டது.

ஆனால் இஸ்ரேல் ஜெருசலத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து ஒரு தடுப்புச் சுவரை எழுப்பியுள்ளது. முஸ்லிம்களுக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமித்து அக்கிரமித்து, அங்கு யூதர்களை குடியமர்த்தி வருகின்றது. இதற்கு அமெரிக்கர்களும் ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து உதவி செய்கின்றன. ஆனால் இறுதி வெற்றியை அல்லாஹ் முஸ்லிம்களுக்கே என்று வாக்களித்துள்ளான். (அல்ஹம்துலில்லாஹ்)

37 ஆண்டுகளாக உலக முஸ்லிம்களின் கவனத்தை அல்குத்ஸ் இன் பக்கம் திருப்பி வருகின்றோம். இன்று உலகமெங்கும் இந்த தினம் பொதுமக்களின் கவனத்தை கவர்ந்து வருகின்றது. இதனால் இந்த நாளில் நடக்கும் நிகழ்ச்சிளை தடை செய்திட வேண்டும் என யூதர்கள் போராடி வருகின்றார்கள். - MGM

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்
51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,
Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**
**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.
and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.
**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in



# சிலுவை யுத்தம் 2.0

*அன்பார்ந்த வாசகர்களே!*

**சிலுவைப் போர்கள் 2.0 என்ற தொடருக்கு நீங்கள் காட்டி வரும் ஆதரவுக்கு நன்றிகள் பல...**

**இத்தொடரின் மூலம் 'இஸ்லாத்திற்கு எதிரான சூழ்ச்சிகள் அவற்றின் அரங்கேற்றம் இவற்றையும் நாங்கள் அறிந்து வருகின்றோம்' என வாசகர்கள் பலர் சுட்டிக் காட்டினார்கள். அல்ஹம்து லில்லாஹ்! உண்மையில், நாம் இந்தத் தொடரைத் தொடங்குவதற்கு காரணமாக அமைந்ததும் இதுவே. இந்த வகையில் இந்தத் தொடர் லட்சியத்தை நோக்கிப் பீடுநடை போடுகின்றது. - மாஷா அல்லாஹ்.**

**ஊடகங்களின் வழி ஊட்டப்படும் பொய்களை முஸ்லிம்கள் அப்படியே நம்பி தங்களைத் தாங்களே நொந்து கொள்கின்றார்கள்.**

**இந்த நிலையை மாற்றிட இந்தத் தொடர் பயன்படும் என நம்பு கின்றேன். இன்ஷா அல்லாஹ். .**

இப்போது ஜான் பெப்பர் சொல்வதை சென்ற இதழில் தொடர்ச்சியாகப் பார்ப்போம்...

"நாங்கள் ஏன் இத்தனை அழுத்தமான ஒரு போரை இஸ்லாத்தின் மீது தொடருகின்றோம் என்றால் ("What really keeps islamphobes upat night is the growing economic, political and global influence of modern mainstream Islam") Page-13. (பொதுவான பாமர மக்களின் இஸ்லாம் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உலகெங்கும் செலுத்தும் ஆதிக்கம் அதிகரித்து வருவதால்தான்"

ஒரு நிமிடம் நிறுத்தி மேலே ஜான் பெஃப்பர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நாம் சற்று விரிவாகப் பார்த்திட வேண்டும்.

அது, இஸ்லாத்தின் மேல் ஏன் மேலை நாடுகள் - இன்னும் சொன்னால் உலக நாடுகள் ஒரு பெரும், நீண்ட தாக்குதலை நடத்தி வருகின்றன என்பதற்கான காரணத்தை இங்கே குறிப்பிடுகின்றார்.

அந்தக் காரணம், முஸ்லிம் நாடுகளிடம், அணு ஆயுதங்கள் போன்ற (Weapon of Mass Destruction) பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என்பதனால் அல்ல. இஸ்லாம் பொருளாதார ரீதியாகவும் உலகில் தாக்கங்களை ஏற்படுத் திடத் தொடங்கியுள்ளது. அதன் பொருளாதார

ஆதிக்கம் வளர்ந்தும் வருகின்றது. அது அரசியல் ரீதியாக உலக அரசில் களத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

அந்த தாக்கங்கள், அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றன. அதன் தாக்கங்கள் வளர்ந்தும் வருகின்றது. உலக அரங்கில் இஸ்லாம் மிகப் பெரியதொரு விவதாப் பொருளாக மாறி யுள்ளது என்பதே உலக நாடுகள் இஸ்லாத்தை வெறுப்பதற்கான காரணம்.

வாசகர்கள் பலருக்கும் ஒரு ஐயம் எழலாம். உலக அரங்கில் இஸ்லாம் எங்கே பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது? என்பதே அந்த ஐயம்.

**பொருளாதாரத் தாக்கங்கள்**

இஸ்லாமியப் பொருளாதார முறை அல்லாத, பொருளாதார முறைகள் அனைத்தும் தோல்வியையே தழுவி வருகின்றன. ஏனெனில் அவை வட்டி, சுரண்டல் ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. இவற்றால் மக்கள் அழிந்து கொண்டிருக் கின்றார்கள்.

எடுத்துக்காட்டாக தினமும் அதிகரித்து வரும் விவசாய வட்டிக் கடன்கள், அதனைச் செலுத்திட முடியாமல் செத்து மடியும் விவசாயிகள். விவசாயிகளையும் விவசாயத் தையும் அழித்து விட்டார்கள். வங்கிகளே திவால் நிலையை நோக்கி விரைகின்றன.

(RBI. Statement & Editional - in- The Hindu, 28/6/2018)

சில பல ஆளுங்கட்சி பண முதலைகள் வங்கிகளைக் கொள்ளை அடித்துவிட்டு உல்லாச புரிகளை நோக்கி ஓடி விட்டனர். இதனால் இஸ்லாமியப் பொருளாதார முறையை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கின்றனர், பொருளாதார நிபுணர்கள்.

அதேபோல் இருபெரும் பொருளாதாரக் கொள்கைகளாகிய முதலாளித்துவமும், கம்யூனிசமும் அதல பாதாளத்தில் வீழ்ந்துக் கிடக்கின்றன.

முதலாளித்துவத்தின் கீழ் பண முதலை களின் கைகளில் மனித இனம் சிக்கிக் கொண்டது. இவர்கள் ஆட்சியாளர்களைக் கைகளில் போட்டுக் கொண்டு மக்கள் வாழ்வின் அனைத்து அசைவுகளையும், தங்கள் கிடுக்குப் பிடிக்குள் கொண்டு வந்து விட்டனர். கொடுமைகள் அன்றைய நிலமானிய முறையை மிஞ்சி விட்டன.

நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் வியாபார விதிகளாகவே மாறிப்போய் விட்டன. இவர்களுக்காக இயற்றப்படும் அரசின் பட்ஜெட்கள் நிதிநிலை அறிக்கைகள், அதாவது வரவு-செலவு மதிப்பீடுகள் இந்த பண முதலைகளுக்கு வரிச்சலுகைகளை வாரி வழங்குகின்றன. ஏழை, எளிய மக்கள் மீது ஏராளமான வரிகளை விதிக்கின்றன. திணிக்



கின்றன. திக்கு முக்காடுகின்றனர் பாமர மக்கள்.

இந்தப் பணமுதலைகள் அள்ளிக் கொட்டும் பணத்தில்தான் கட்சிகள் தேர்தலில் வெற்றிப் பெறுகின்றன. அதனால் "ஆட்சிகள்" இவர்களின் "முதலீடு"

இந்த கோட்பாடுகளிலிருந்தெல்லாம் மக்கள் வெளியே வந்திடத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எந்தக் கொள்கையைப் பின்பற்றுவது எனத் தெரியவில்லை. இதனால் இஸ்லாத்தை கூர்ந்து பார்த்திட தலைப்பட்டு விட்டார்கள்.

முதலாளிகளின் கைகளில் சிக்கிக்கொண்டு அனைத்து அரசியல் தத்துவங்களும் தோற்றுப் போய்விட்டன.

**கம்யூனிசம்**

உலகில் பெரும்பாலான கம்யூனிச நாடுகள் கம்யூனிசம், தங்களைக் காப்பாற்றாது என்ற முடிவுக்கு வந்து, கம்யூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தைக்கை கொண்டன. இதனால் அதுவும் அங்கேயும் மக்களைக் கவ்விக் கொண்டு ஏழை, எளிய மக்களை வாழ்வின் ஓரத்தில் தற்கொலைக்கும் தள்ளிவிட்டது.

ஆக இவை போன்ற காரணங்களால் மக்கள் மாற்றத்தை நாடுகின்றார்கள். மாற்றுக் கொள்கைகளைத் தேடுகின்றார்கள். இஸ்லாம் தென்படுகிறது.

**இஸ்லாத்தின் ஈர்ப்பு**

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. அதிகரிக்கின்றது என்பதை விட அதிக வேகத்தில் இஸ்லாம் பரவுகின்றது. "பாலஸ்தீன் கிரானிக்கிள்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்" ரம்ஸ் பரோவ்டி கூறுகின்றார்,

உலகில் மக்கள் தொகை எவ்வளவு வேகத்தில் பரவுகின்றதோ அதைவிட அதிகமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை பரவுகின்றது.

ஆக இஸ்லாம் தாக்கப்படுகின்றது என்றால் அது உலகில் ஒரு மாற்றாக வளர்ந்து வருவதால்தான்.

**முஸ்லிம்கள்**

முஸ்லிம்கள் இதனை உணர்ந்துகொண்டு எதிர் வரும், எதிர்ப்புகளையும், தடைகளையும், ஹிக்மத்துடன் எதிர்கொண்டு இஸ்லாத்தை மக்கள் மன்றத்தில் சமர்பிக்க வேண்டும்.

இஸ்லாத்தை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும், என்பதன் பொருள் இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களையும் மக்கள் முன்



விளக்கிச் சொல்லிட வேண்டும் என்பதே!

அனைத்து அம்சங்கள் என்பதன் பொருள், இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு முறை. வறுமையை ஒழிக்க இஸ்லாம் காட்டிய வழி முறைகள் (இஸ்லாமிய ஆட்சியில் இரண்டு முறை வறுமை முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது)

ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் நிரந்தர நிவாரணத்தை தந்திட இஸ்லாம் ஏற்படுத்தித் தந்த நிரந்தர நிறுவனங்கள், கிடைப்பதையெல்லாம் தனக்கென வைத்துக் கொள்ளாமல் பிறருக்கு அள்ளித் தந்திடுவது, அல்லாஹ்வுக்கு தந்திடும் அழகியக் கடன் என மக்களில் மன நிலையில் பொருள்.

செல்வம் இவற்றைப் பற்றி மக்களின் மனதில் கொண்டு வந்த மகத்தான மாற்றங்கள். அதற்காக அது தந்த ஆன்மீக வழிகாட்டுதல். அங்காடியில் கொள்வினை - கொடுப்பினைகளில் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என இஸ்லாம் வகுத்துத் தந்த விதிகள், ஏற்றுக்கொள்வோர் கொடுப்பவை அனைத்தையும் விலா வாரியாக விரித்துரைத் திட வேண்டும். (இந்தியாவில் அவ்ரங்ஜேப் - அலாவுதீன் கில்ஜி ஆகியோர் இவற்றைச் செயல்படுத்தி, இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக மாற்றிக் காட்டினார். இதனை ஆய்வாளர்கள் அனைவரும் சுட்டிக் காட்டி யுள்ளார்கள் என்பதை நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

### அரசியல் கொள்கை

இஸ்லாத்தின் அரசியல் கொள்கைகளையும் விளக்கிச் சொல்லியாக வேண்டும். இஸ்லாம் ஒழுக்கம் பற்றி தந்த கோட்பாடுகளையும் விரித்துரைத்தாக வேண்டும், இவையன்னியில், கல்வி அனைவருக்கும் கிடைத்திட இஸ்லாம் தந்த வழிகாட்டுதல்கள், அவற்றை செயல்படுத்திய முறை.

மொத்த ஐரோப்பாவும் இருளில் மூழ்கிக் கிடந்தபோது, இஸ்லாம் உலகுக்கே அறிவை வழங்கிய ஒப்பற்ற கல்விக் கேந்திரங்களை நடத்தியது, கல்வியை வியாபாரமாக அல்லாமல் ஒப்பற்ற சேவையாக மக்களுக்குத் தந்த வரலாறுகளையும் அனைவரும் அறிந்திட செய்திட வேண்டும்.

### முதல் சிலுவைப் போர் VS இரண்டாம் சிலுவைப் போர்

ஜான் பெஃப்பர் இந்தத் தொடரின் தொடக்கத்தில் ஓர் உண்மையைச் சொன் னார்கள். அது, முதல் சிலுவைப் போருக்கும் இரண்டாவது சிலுவைப் போருக்குமிடையே ஒரு பெரிய வேறுபாடு. அது முதல் சிலுவைப் போரின்போது 1095-1247 கிருஸ்தவ உலகில் முஸ்லிம்கள் அவ்வளவாக வாழவில்லை. ஆனால் இன்று இரண்டாம் சிலுவைப் போரின் போது முஸ்லிம்கள் இல்லாத கிருஸ்தவ நாடுகளே இல்ல என்கின்ற அளவுக்கு இஸ்லாம் பரவி இருக்கின்றது என்பதே!

இதன்பொருள் அன்று கிருஸ்தவர்களை முஸ்லிம்களுக்கெதிராக திருப்பிட பரப்பப் பட்ட பொய்களை வரலாற்றுத் திரிபுகளை மக்கள் கிருஸ்தவர்கள் அப்படியே நம்பினார்கள்.

ஆனால் இன்று அவ்வாறல்ல. இஸ்லாத்தின் எதிரிகள் கிளப்பிவிடும் பொய்களையும், வரலாற்றுத் திரிபுகளையும், எதிர்க்கவும், விளக்கங்கள் தந்திடவும் முஸ்லிம்கள் ஆங்காங்கே வாழுகின்றார்கள் என்பது மட்டுமல்ல. அவர்கள் எல்லா இழப்புகளையும், இன்னல்களையும் தாங்கிக் கொண்டு, இந்தப் பொய்களையும் வரலாற்றுத் திரிபுகளையும் மறுத்துரைக்கவே செய்கின்றார்கள்.

ஊடகங்களின் சாடல், வேகமாகவும் விறு விறுப்பாகவும் இருக்கின்றன. உண்மைதான். ஆனால், முஸ்லிம்கள் அவற்றை நிதானத்துடன் எதிர்கொண்டு வருகின்றார்கள். இதனை நாம் சென்ற இதழ்களில் சுட்டிக் காட்டினோம். இதில் ஒவ்வொரு முஸ்லிமும் தன்னால் இயன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும்.

இங்கே முஸ்லிம்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது, இஸ்லாம் தாக்கப்படும் போதெல்லாம் இஸ்லாத்தை எடுதததச் சொல்லிடும் வாய்ப்பொன்று திறக்கின்றது.

இந்த விளக்கங்களுடன் ஜான் பெஃப்பபர் அவர்களை அடுத்த இதழில் சந்திப்போம். இன்ஷா அல்லாஹ்.

- இங்கே ஜான் பெஃப்பர், Mainstrream Islam என்றொரு சொற்றொடரைப் பயன் படுத்துகின்றார் கவனியுங்கள்.

- அபூ அஃப்ரஹ்



# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்)

சென்ற இதழின் தொடர்ச்சி...

## நீதிமன்றத்திற்கு வர பயந்த இளவரசர்

நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் சில ஆண்டுகள் டமாஸ்கசில் தன்னுடைய இளவரசர்களுடன் தங்கி இருந்தார்கள்.

அவர்களில் அசதுதீன் ஷிர்கு என்பவர் முக்கியமானவர். இவர் சலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களின் மாமா.

இவர் எந்த அளவிற்கு நூருத்தீனுக்கு முக்கியமானவர் என்றால் இவரை நூருத்தீன் ஸங்கி அவர்களின் கூட்டாளி, ஆட்சியின் பங்குதாரர் என்று மக்கள் நினைக்கும் அளவிற்கு மிக முக்கியமானவராக கருதப்பட்டார்.

மற்ற இளவரசர்கள் எல்லாம் பணத்துடன் பகட்டாக இருந்து வந்தனர். சொத்துக்களை குவித்து வந்தனர்.

ஒரு கட்டத்தில் ஒருவரின் சொத்தை மற்றவர்கள் பறிக்கும் அளவிற்கு சென்று விட்டனர். அதுவும் முற்றி பொதுமக்களின் சொத்துக்களிலும் கைவைக்க ஆரம்பித்து விட்டனர்.

இது மெல்ல மெல்ல நூருத்தீன் அவர்களின் காதுகளை எட்டியது.

எனவே, நூருத்தீன் அவர்கள் இது குறித்து விசாரிக்க கமாலுத்தீன் என்பவரை நியமித்தார்.

கமாலுத்தீன் அவர்கள் தன் விசாரணையை ஆரம்பித்த போது ஏகப்பட்ட புகார்கள் மற்ற இளவரசர்கள் மீது பெறப்பட்டன. ஆனால் அசதுதீன் ஷிர்கு அவர்களின் மீது எந்த ஒரு புகாரும் பெறப்படவில்லை. இது அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இது குறித்து கமாலுத்தீன் அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் தன் அறிக்கையை அளித்தார். விரைவில் புதிதாக நீதிமன்றம் துவங்கப்பட்டு இவை அனைத்தும் விசாரிக்கப்பட வேண்டும் என்று நூருத்தீன் ஸங்கி அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த விவரங்கள் எல்லாம் அசதுத்தீன் அவர்களுக்கு தெரிய வந்தது. எந்த ஒரு புகாரும் அவர் மீது இல்லாத நிலையிலும் அவர் தன்னுடைய அரச பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்தார்.

அவர்களிடம், "இங்கே பாருங்கள், நூருத்தீன் ஸங்கி அவர்கள் இந்த நீதிமன்றத்தை எனக்காகத்தான் ஏற்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனெனில் நான் மட்டும் தான் கமாலுத்தீன் அவர்களால் குற்றச்சாட்டு முன் வைக்கப்படாதவன்.

எனவே, அல்லாஹ்வின் மீது சத்தியமாக கூறுகிறேன், உங்களில் யாருடைய செய்கைக்காவாவது நான் நீதிமன்றம் சென்று பதில் சொல்லவேண்டி வந்தால் உங்களை உயிருடன் விடமாட்டேன். நிச்சயமாக உங்களை கொன்று விடுவேன்.

எனவே, யாரிடமாவது உங்களுக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தால் எப்பாடு பட்டாவது அந்த கருத்து வேறுபாடுகளை களைந்து விடுங்கள்.

உங்கள் அதிகாரத்தைக் கொண்டு யாருக் காவது அநீதி இழைத்திருந்தால் அதை சரி செய்து விடுங்கள். அதற்காக என் சொத்துக்கள் முழுவதையும் கேட்டாலும் அவர்களுக்கு கொடுத்து விடுங்கள்.

ஆனால் யாரும் என்னை நீதிமன்ற படி ஏறும் படி வைத்து விடக்கூடாது. அதற்கு முன்னரே அதை நாம் சரி செய்து விட வேண்டும். இதை அனைவருக்கும் அறிவித்து விடுங்கள்" என்று கூறினார்.

இதை கேட்ட அசதுதீன் அவர்களின் பிரதி நிதிகள், "இந்த அறிவிப்பு மக்களுக்கு தெரிய வந்தால் அவர்கள் உங்களுடைய சொத்துக்களை பறித்து சென்று விடுவார்கள் என்று நாங்கள் அஞ்சுகிறோம்" என்று தெரிவித்தனர்.

"நீங்கள் என்ன நூருத்தீன் அவர்களின் விசாரணையை சாதாரணமாக எடுத்துக் கொண்டீர்களா? நூருத்தீன் ஸங்கி அவர்கள் முன்னால் ஓர் அடக்குமுறையாளனாக ஒரு குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டு நிற்பதை விட என் சொத்துக்கள் அனைத்தையும் இழப்பதே எனக்கு இலகுவானது", என்று பதிலளித்தார் அசதுதீன்.

இதன் பின்னர் பதிலேதும் கூற இயலாதவர் களாக அவர்களுடைய பிரதிநிதிகள் கலைந்து சென்று அசதுதீன் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றினர். அவர்களின் பகையாளிகளின் தேவைகளையும் நிறைவேற்றி அவர்களையும் திருப்திப் படுத்தினார்கள்.

நீதிமன்றம் கட்டப்பட்டது. நூருத்தீன் அவர்கள் வாரத்திற்கு இரண்டு நாட்கள் நீதிபதிகளுடனும், ஃபகீஹ்களுடனும் (ஃபிக்ஸ் கலை நிபுணர்கள்) நீதிமன்றத்திற்கு புகார்களை எதிர்பார்த்து வந்து விடுவார்கள்.

ஆனால் ஆச்சரியப்படும் விதமாக அசதுதீன் அவர்களுக்கு எதிராக எந்த புகாரும் வரவில்லை.

இது அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதற்கான காரணம் என்னவென்பதை அறிய நூருத்தீன் தலைப்பட்டார்.

"ஷிர்குவுக்கு எதிராக ஒருவரும் புகார் அளிக்க முன்வரவில்லையே ஏன்?" என கமாலுத்தீன் அவர்களிடம் நூருத்தீன் கேட்டார்கள்.

நீதிமன்றத்தின் படியேறக்கூடாது என்பதற்காக அசதுதீன் அவர்கள் செய்தவற்றையெல்லாம் கமாலுத்தீன் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் எடுத்துரைத்தார்கள்.

இதை கேட்டமாத்திரத்தில் அப்படியே நெகிழ்ந்தவர்களாக கண்ணீருடன் தொப்பென்று ஸஜ்தாவில் விழுந்தார்கள் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

பின்னர் அல்லாஹ்வை புகழ்ந்தவர்களாக இவ்வாறு கூறினார்கள், "என் முன்னால் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவதற்கு முன்னரே நீதி செலுத்தும்படி அவர்களை மனமாற்றம் செய்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்"

நீதியை நிலைநாட்ட முயற்சி கடும் முயற்சி மேற்கொண்ட ஆட்சியாளர் ஒருபுறம். அவர் முன்னால் குற்றம் சாட்டப்பட்டு நிற்பதைக்கூட விரும்பாத அவருடைய சக ஆட்சியாளர் இன்னொரு புறம் என உணர்ச்சிகரமான இந்த காட்சிகள் நம்மை இறையச்சத்தின் உச்சிக்கே கொண்டு செல்லும்.

இப்படிப்பட்ட காட்சிகளை வரலாற்றின் சுவடுகளில் எந்த மன்னராட்சியிலாவது நீங்கள் காண முடியுமா?

இது தான் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர் களின் கண்ணியம். எந்த விதமான கடுமையான அபராதமோ அல்லது கடுமையான தண்டனை களோ இன்றி தன்னுடைய கண்ணியத்தை மட்டும் தண்டிக்கும் சாட்டையாகக் கொண்டு மற்றவர்களை நீதிவான்களாக மாற்றுவது ஒரு சிலரால் மட்டுமே முடியும்.

அல்லாஹ் ஒரு சிலருக்கு மட்டுமே அந்த அந்தஸ்தை அளிக்கிறான். அவர்களில் நூருத்தீனும் ஒருவர்.

நூருத்தீன் அவர்கள் இருண்ட வீட்டிற்கு ஓர் அகல்விளக்கை போன்றவர்.




சொன்னார்கள், "நூருத்தீன் அவர்களே, நான் அல்லாஹ்வை முன்னிருத்தி உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து நீங்கள் உங்கள் உயிரை பணயம் வைக்காதீர்கள்.

நீங்கள் உங்கள் உயிரை பணயம் வைப்பது முஸ்லிம் களையும் அவர்ளுடைய உடைமைகளையும் எதிரிகளி டம் பணயம் வைப்பதற்கு ஒப்பானது. நீங்கள் இஸ்லாத் திற்கும் முஸ்லிம்களுக்கும் முதுகெலும்பாக உள்ளீர்கள்.

இதற்கு முன்னரே நீங்கள் போர் களத்தில் கொல்லப்பட்டிருந்தால் இந்நேரம் முஸ்லிம்கள் அவர்களுடைய சொந்த நிலங்களில் கொன்று குவிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்."

இதை சொன்னவர் இஸ்லாத்தை நன் கறிந்தவர் தான். இருப்பினும் நூருத்துன் ஸங்கி அவர்கள் மீதுள்ள அன்பின் காரணத்தாலும் எதிரிகள் மீதான அச்சத்தின் காரணத்தாலும் இவ்வாறு கூறி விட்டார்கள்.

இதை கேட்டவுடன் நூருத்தீன் ஸங்கி அவர்கள் கடுங்கோபம் கொண்டு இப்படி பதிலளித்தார்கள், "இதெல்லாம் என்ன? நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கும் அளவிற்கு நான் யார்?**

**நான் இல்லாவிட்டால் இஸ்லாம் பாதுகாக்கப்படாதா?**

**முஸ்லிம்கள் பாதுகாக்கப்பட மாட்டார்களா?**

எனக்கு முன்னரே ஒருவன் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அவர்களுடைய நிலங் களையும் பாதுகாத்து வந்திருக்கிறான், இனியும் அவனே அனைத்தையும் பாதுகாப்பான்.

அவன் தான் எல்லாம் வல்ல அல்லாஹ், அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் கிடையாது.

### போர்களம் புகுமுன் நூருத்தீன்

நூருத்தீன் அவர்களின் அறிவாற்றலும் அவர்களுடைய துணிவும் நேர்மறை உணர்வும் ஈடு இணையில்லாதது. அவர்களின் போர் தந்திரங்கள் தனித்துவம் வாய்ந்தது.

அவரை விட சிறந்த போர் வீரரை நாம் காண இயலாது. அவர் போலோ விளையாட்டு வீரர் என்பதை ஏற்கனவே நாம் சொல்லி யுள்ளோம்.

மிக வேகமாக போர் குதிரையில் பயணித்த படியே மிகத்துல்லியமாக பந்தை தன் கையில் உள்ள குச்சியால் தாக்கி மிகத்தூரத்தில் உள்ள தன் இலக்கை நோக்கி சரியாக அனுப்புவார் நூருத்தீன் அவர்கள்.

இந்த பயிற்சி பல நேரங்களில் போர்களத்தில் எதிரிகளின் தலைகளை கொய்ய அவருக்கு பயன்பட்டது.

பொதுவாக ஒவ்வொரு போர்களத்திலும் நூருத்தீன் அவர்கள், " நான் பல போர்களில் சண்டையிட்டு விட்டேன். ஒவ்வொரு முறையும் ஷஹீதாக வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அல்லாஹ் இதுவரை அந்த பாக்கியத்தை எனக்கு அளிக்கவில்லை. நான் என் குறிக்கோளை அடையமுடியவில்லை" என்று வருத்தப்பட்டு கூறுவார்கள். பின்னர் ஷஹீதுடைய அந்தஸ்தை வேண்டி துவா செய்த வண்ணம் போர்களம் புகுவார்கள்.

இதை ஒரு முறை செவிமடுத்தார் இமாம் குத்புதீன் அந்நைஸாபுரி என்பவர். அவர் நூருத்தீன் அவர்களிடம்

நான் உயிருடன் இருந்தாலும் இல்லா விட்டாலும் இஸ்லாம் பாதுகாக்கப்படும். எனவே, இனி ஒருமுறை இவ்வாறு கூற வேண்டாம்".

எவ்வளவு அற்புதமான பதில். அல்லாஹ்வும் இஸ்லாமும் யார் ஒருவரைக் கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை.

ஒருவேளை இஸ்லாத்தில் சிறப்பு மிக்க ஒருவர் நம்மை விட்டு பிரிந்தாலும் அல்லாஹ் நம்மை வாழ வைப்பான், நம்மை சிறப்பாக்கு வான் என்ற நம்பிக்கையை ஊட்டும் பதில்.

**இராஜதந்திரம்**

நூருத்தீன் அவர்கள் மிகச்சிறந்த இராஜ தந்திரி. நுணுக்கமான அரசியல் அனுபவம் மிக்கவர்.

ஃபிரான்க்ஸ் எனப்படும் ஜெர்மானியர் களுக்கு எதிரான அவருடைய இராஜதந்திரங்கள் மிகச்சிறந்தவை. நூருத்தீன் ஃபிரான்க்ஸ்களு டைய பல பகுதிகளை தன்னுடைய இராஜ தந்திரத்தாலேயே வெற்றி கொண்டார்.

அவருடைய இராஜதந்திரங்களில் முக்கிய மானது அர்மேனிய மன்னர் மாலிஹ் இன்னு லியூம் அவர்களை தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டது.

அர்மேனிய மன்னரின் நீதிமன்றத்திற்குள் நுழைந்து அவரை கவர்ந்து தன்னுடைய நம்பிக்கையான தோழனாக மாற்றிக்கொண்டார் நூருத்தீன் அவர்கள்.

இதன் மூலம் ஃபிரான்க்ஸ் எனப்படும் ஜெர்மானியர்களுக்கு எதிராக அர்மேனிய மன்னரையும் போரில் பயன்படுத்திக் கொண்டார். ஃபிரான்க்ஸ்களை வென்றார்.

அவருக்கு கொஞ்சம் செல்வங்களையும் அன்பளிப்பாக அளித்திருந்தார் நூருத்தீன்.

நூருத்தீனிடம் இது குறித்து கேட்கப்பட்ட போது அவர் தன்னுடைய நிலையை இவ்வாறு நியாயப்படுத்தினார் "என்னை அர்மேனிய மன்னரிடம் இவ்வாறு நடக்க வைத்தது என்ன வெனில் சமதளமான சாலைகளையும் வெற்றி கொள்ள முடியாத உறுதியான கோட்டை களையும் கொண்ட அவருடைய நாட்டின் அமைப்பு தான்.

அவர் நினைத்தால் நம்மை தாக்கக்கூடும், முஸ்லிம்களின் பகுதிகளை ஆபத்துக்குள்ளாக்கக் கூடும். பதிலுக்கு நாம் அவரிடம் போர் செய்ய விரும்பினால், அவர் தன்னுடைய கோட்டைக் குள்ளேயே பதுங்கிக்கொள்வார். யாரும் அவரை நெருங்க முடியாது.

இதன் காரணமாகவே, நான் கொஞ்சம் சொத்துக்களையும் பணத்தையும் அவருக்கு விட்டுக்கொடுத்து அவரை நம் பக்கம் வைத்துக் கொள்ள விரும்பினேன்.

நம்முடைய நிபந்தனைகளை ஏற்று, போரில் ஃபிரான்க்ஸ்களுக்கு எதிராக நமக்கு ஆதரவளிக் கும் வரை என்னுடைய இந்த நிலை நீடிக்கும்" என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

வீரம் செறிந்த மன்னரான நூருத்தீன் ஸங்கி அவர்களின் இந்த முடிவு சிலருக்கு ஆச்சரி யத்தை அளித்தது.

ஆனாலும் அர்மேனிய மன்னரைக்குறித்தான அவருடைய இந்த இராஜதந்திரம் மிகச்சரியா னது என்பதை அவருக்கு அடுத்து வந்தவர்களின் வரலாறு நமக்கு எடுத்து காட்டியது.

நூருத்தீன் அவர்களுக்கு பிறகு வந்த ஆட்சி யாளர்கள் அவருடைய முடிவுக்கு மாற்றமான கொள்கையை கைக்கொண்டார்கள்.

இதன் காரணமாக, அர்மேனியாவை அடுத்து ஆளவந்த அல்முத்தவல்லி முஸ்லிம் களின் மீது போர் தொடுத்து முஸ்லிம்களின் இராஜியத்தில் பெரும் பகுதிகளையும் கோட்டைகளையும் வெற்றி கொண்டு விட்டார்.

நூருத்தீன் அவர்கள் கணித்தது போலவே முஸ்லிம்களுக்கு பெரிய ஆபத்தாக விளங்கினார்.

எனவே, நூருத்தீன் அவர்களின் அரசியல் பார்வையும் இராஜதந்திரமும் மிகச் சரியானதே. அதன் காரணமாகவே அவர் ஃபிரான்க்ஸ்களை வெற்றி கொள்ள முடிந்தது.

**படைவீரர்களின் மீது அக்கறை**

தன்னுடைய படைவீரர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்களாக நூருத்தீன்



அவர்கள் இருந்தார்கள். இதன் காரணமாக படை வீரர்கள் அவருக்கு மிக நம்பிக்கையாக பணியாற்றினார்கள்.

போர் வீரர்களில் ஒருவர் கொல்லப்பட்டால் அவருடைய சொத்துக்கள் சரியாக பங்கிடப் பட்டு அவருடைய வாரிசுகளுக்கு கொடுக்கப் பட்டது.

ஒருவேளை கொல்லப்பட்ட போர்வீரனின் வாரிசுகள் முதிர்ச்சியடையாத வயதில் இருந் தால் அவர்களுக்கு ஒரு பாதுகாவலர் ஏற்படுத் தப்பட்டு அந்த சொத்துக்கள் பாதுகாக்கப் பட்டது.

பின்னர் தகுந்த வயதை அடைந்தவுடன் அவர்களிடம் அந்த சொத்துக்கள் ஒப்படைக்கப் பட்டன.

இதன் காரணமாக படைவீரர்கள் மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தனர். இது அவர்களை உற்சாகப்படுத்தியது. நூருத்தீன் அவர்களுடன் உறுதியுடன் நின்று களம் காண உதவியது.

"இந்த நாடு நம்முடையது நமக்கு பின்னால் நம்முடைய நிலம் நிச்சயம் பாதுகாக்கப்பட்டு நம்முடைய வாரிசுகளுக்கு செல்லும்" என்ற எண்ணம் அவர்களை உறுதியுடன் போர் செய்ய வைத்தது.

**படை வீரர்கள், ஆயுதங்கள்**

சில பொறுப்பற்ற இளவரசர்கள் போர் காலங்களில் தங்களிடம் உள்ள படை பலத் தையும் ஆயுத பலத்தையும் பற்றிய தகவல்களை நூருத்தீன் அவர்களிடம் சரியாக அளிக்க இயலாமல் இருந்து வந்தார்கள்.

இதன் காரணமாக நூருத்தீன் அவர்கள் படைவீரர்கள் பற்றிய பதிவேடுகளை பராமரித்து வந்தார்கள். அதில் ஒவ்வொரு இளவரசருக்கு கீழ் உள்ள படைவீரர்களின் பெயர்கள் அவர்களிடம் தயாராக உள்ள ஆயுதங்கள் இவற்றை பற்றிய தகவல்களை குறித்து வைத்திருந்தார்கள். இது குறித்து நூருத்தீன் அவர்களிடம் கேட்கப்பட்டது.

அதற்கு நூருத்தீன்," நாம் எப்போதும் போர்களத்தில் இருக்கிறோம். ஒவ்வொரு இளவரசரிடமும் உள்ள படைவீரர்கள் எண்ணிக்கையிலும் ஆயுதங்களிலும் தயாராக இல்லை என்றால் முஸ்லிம்கள் தோற்கடிக்கப் பட்டு விடுவார்கள். எனவே நம்முடைய படை வீரர்களின் எண்ணிக்கை மற்றும் ஆயுத பலம் குறித்த விவரங்கள் அவசியம்" என்று பதிலளித் தார்கள்.

போர்களம் பற்றிய நூருத்தீன் அவர்களின் பார்வை தெளிவாகவே இருந்தது.

இறை நம்பிக்கைக் கொண்ட போராளிகளின் தலைவர்கள் ஏனோ தானோவென்று இருந்து விடாமல் தனக்கு கீழே உள்ள படை வீரர்களின் எண்ணிக்கையையும் ஆயுத பலம் குறித்தும் விரல் நுணியில் தகவல்களை வைத்துக்கொள்ள வேண்டும்.

அப்போது தான் எதிரிகளை வீழ்த்த முடியும் என்பது நூருத்தீன் ஸங்கி அவர்கள் நமக்கு கற்றுக் கொடுத்துள்ள பாடம்.

நூருத்தீன் அவர்கள் இதைத் தாண்டி முஸ்லிம்களின் நிலங்களை பாதுகாக்க பல கோட்டைகளையும் மதில் சுவர்களையும் எழுப்பினார்கள். லெவான்தில் உள்ள அலெப்போ, ஹமாஹ்,ஹிம்ஸ், டமாஸ்கஸ், பரின், ஷிராஸ், மன்பிஜ் போன்ற பகுதிகளில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண் டார்கள். இதற்காக பெரும் பொருளாதாரத்தை செலவளித்தார்கள்.

### மஸ்ஜித் கட்ட இவரா?

நாட்டின் பல்வேறு நகரங்களில் ஷாஃபி, ஹனஃபி சட்டப் பள்ளிக்கூடங்களை நூருத்தீன் அவர்கள் உருவாக்கினார்கள். குறிப்பாக அலெப்போ, ஹமாஹ், டமாஸ்கஸ் போன்ற பகுதிகளில் இத்தகைய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன. முஸ்லிம்களின் பகுதிகள் அனைத்திலும் மஸ்ஜித்களை நிர்மானம் செய்தார்கள்.



மொசூலில் இவர் கட்டிய மஸ்ஜித் கட்டிட கலைக்கொரு சான்றாக விளங்குகிறது.

இந்த மஸ்ஜிதை கட்ட மேற்பார்வையாளராக இறையச்சம் கொண்ட ஷேக் உமருல் மல்லா என்பவரை நூருத்தீன் நியமித்திருந்தார்கள். அவர் ஒரு பக்திமான்.

உமருல் மல்லா அவர்கள் இந்தப்பணிக்கு தகுதியானவர் அல்ல என்று நூருத்தீன் அவர்களிடம் சிலர் கூறினார்கள்.

அதற்கவர், "நான் இந்தப் பணியை சக வீரர்களிடமோ அல்லது வேறு யாரிடமோ கொடுத்தால் அவர்கள் அடக்குமுறையை ஏவி அவ்வப்போது அநீதி இழைக்கக்கூடும் என நினைக்கிறேன். ஆனால் உமரைப்பற்றி நான் உயர்வாக எண்ணம் கொண்டுள்ளேன். அவர் யாருக்கும் எந்த தீங்கும் இழைக்க மாட்டார், எந்த அநீதியும் இழைக்க மாட்டார். இதற்கு பின் ஒருவேளை அவர் அப்படி அநீதி இழைத்தால் அவர் தான் அந்த பாவத்திற்கு பதில் சொல்ல வேண்டும். நான் அல்ல" என்று கூறிவிட்டார்.

உமருல் மல்லா அவர்களும் நூருத்தீன் அவர்களின் நம்பிக்கையை நிறைவேற்றி னார்கள். அந்த மஸ்ஜிதை கட்டும் பணியின் போது யாருக்கும் எந்த அநீதியும் இழைக்கப் படவில்லை.

இப்படித்தான் நூருத்தீன் அவர்கள் எந்த காலகட்டத்திலும் யார் மீதும் அநீதி இழைக்கப் படாமல் பார்த்துக்கொண்டார்கள்.

ஹமாஹ்வில் அவர் அழகான மஸ்ஜித் ஒன்றை நிர்மாணித்தார். அல் அஸீ ஆற்றங்கரை யில் அந்த பள்ளிவாசல் அமைந்தது. இதைத் தவிர்த்து அவர் பூகம்பத்தால் சேதமுற்ற பல மஸ்ஜித்களை சீரமைத்தார்.

### கொலையா? மீட்புத் தொகையா?

அவர் பல மருத்துவ மனைகளையும் கட்டினார். அதில் மிக சிறந்ததொன்று டமாஸ்கசில் கட்டப்பட்டது. இதில் மருத்துவம் இலவசமாக வழங்கப்பட்டது. இதில் செல்வம் பெருமளவு செலவானது. ஆனாலும் நூருத்தீன் அவர்கள் அதற்காக கவலைப்படவில்லை. அதை தொடர்ந்து செய்து வந்தார்கள். குறிப்

பாக அந்த மருத்துவமனையில் ஏழைகளுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் மானியம் வழங்கப்பட்டது.

அவர் இந்த மருத்துவமனையை கட்டிய தற்கான காரணம் ஆச்சரியமானது.

நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் ஒரு போரில் ஃபிரான்க்ஸ் மன்னர்களில் முக்கியமான ஒருவரை வெற்றி கொண்டு அவரை கைது செய்தார்கள்.

அவர் தன்னுடைய விடுதலைக்காக பெரிய தொரு தொகையை மீட்புத்தொகையாக தர முன்வந்தார். அதைப்பெற்றுக் கொண்டுஅவரை விடுதலை செய்யலாமா என அவருடைய நண்பர்கள் மற்றும் இளவரசர்களுடன் நூருத்தீன் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

ஆனால் ஒருவருக்கும் அந்த மன்னரை விட விருப்பமில்லை. காரணம் அந்த மன்னரால் இதுவரை அவர்கள் அடைந்த ஆபத்துகள், அவரை விடுதலை செய்தால் ஏற்படப்போகும் ஆபத்துகள் ஆகியவற்றை எடுத்துக்கூறி அவர்கள் அந்த மன்னரை விடுதலை செய்ய கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நூருத்தீனுக்கு இந்த விஷயத்தில் பெரும் குழப்பம். கடைசியில் அவர் இஸ்திகாரா தொழுகையை தொழுது (உள்ளச்சத்துடன் இறைவனை தொழுது அவனிடத்தில் முடிவை வேண்டி படுத்து உறங்கினால் தூக்கத்தில் இறைவன் கனவு வாயிலாக முடிவுகளை அறிவிப்பது இஸ்திகாரா தொழுகை) இறைவனி டத்திலேயே முடிவைத்தேடினார். அதில் அந்த மன்னரை விடுதலை செய்வதற்கான உத்தர வையே அவர் இறைவனிடத்தில் பெற்றார்.

எனவே, அவர் அந்த மன்னரிடத்தில் மீட்புத்தொகையை பெற்றுக்கொண்டு அவரை யாருக்கும் தெரியாமல் இரவு நேரத்தில் விடுதலை செய்தார். ஏனெனில் அப்போது தான் அவருடைய இளவரசர்களும் அறிவுரை கூறும் நண்பர்களும் இந்த செய்கையை எதிர்க்க இருக்கமாட்டார்கள்.

ஆனால் இந்த விஷயம் பின்னர் தெரிந்த வுடன் இளவரசர்களும் நண்பர்களும் இந்த முடிவு சரியானதல்ல என புலம்பத் தொடங்கினர். ஆனால் இறைவனின் ஏற்பாடோ வேறு விதமாக இருந்தது.

அந்த மன்னன் தன்னுடைய இடத்தை அடைந்தவுடன் இறந்து போனான். இந்த முடிவு ஏற்கனவே நூருத்தீன் அவர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்கள் தன்னுடைய இளவரசர்களிடமும் நண்பர்களிடமும் இதனை எடுத்துக் கூறினார்கள்.

முஸ்லிம்கள் விரும்பிய இரண்டையுமே அளித்த இறைவனை நினைத்து இளவரசர்களும் நண்பர்களும் ஆச்சரியப்பட்டு போயினர்.

பெரும் மீட்புத்தொகையும் அவர்களுக்கு கிடைத்தது.

ஆபத்தான அந்த மன்னனின் இறப்பும் நிகழ்ந்தது.

ஆக முஸ்லிம்களில் இரண்டு சாரார் விரும்பிய படி இரண்டும் நூருத்தீன் எடுத்த இந்த முடிவின் காரணமாக நடந்தது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற பணயத் தொகையிலிருந்து ஒற்றை பைசாவைக்கூட இளவரசர்களுக்கோ ஆலோசகர்களுக்கோ நூருத்தீன் அவர்கள் வழங்கவில்லை. பொதுவாக இவ்வாறு கைதிகளின் மீட்புத்தொகையை போரில் பங்கேற்றவர்களுக்கு பங்கிடுவது வழக்கம்.


ஆனால் இளவரசர்களும் ஆலோசகர்களும் மீட்புத்தொகை பெற்று விடுதலை செய்ய எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவர் களுக்கு இந்த பணத்தை தர நூருத்தீன் அவர்கள் முன்வரவில்லை.

நீங்கள் விரும்பியது அந்த மன்னரின் மரணம். அது உங்களுக்கு கிடைத்து விட்ட தல்லவா. அவ்வளவு தான் என்று கூறி விட்டார்.

எனவே, மீட்புப் பணத்தை அப்படியே மொத்தமாக செலவழித்து இந்த மிகச்சிறந்த மருத்துவமனையை அவர் கட்டி முடித்தார்.

**பயணிகள் விடுதிகள்**

நூருத்தீன் அவர்கள் சாலைகள் எங்கும் பயணிகள் விடுதிகள் பலவற்றை கட்டினார். இதன் மூலம் பிரயாணிகளின் உயிர்களும் உடைமைகளும் பாதுகாக்கப்பட்டன.





**கண்காணிப்பு கோபுரங்கள்**

நூருத்தீன் எல்லையெங்கும் கண்காணிப்பு கோபுரங்களை அமைத்தார். அதில் திறமையான போர்வீரர்களை கண்காணிப்பு பணிக்கு பணியமர்த்தினார்.

அவர்களிடம் தகவல் அனுப்ப பயிற்று விக்கப்பட்ட புறாக்கள் வழங்கப்பட்டன.

எதிரிகளை கண்டவுடன் அவர்கள் ஊருக்குள் இந்த புறாக்களின் மூலம் தகவல் களை அனுப்பி விடுவார்கள். மக்கள் உடனே தங்களை தற்காத்துக் கொள்ள தேவையான வற்றை செய்து கொள்வார்கள்.

தன் மக்களை பாதுகாப்பதற்கு நூருத்தீன் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள்.

**பொறாமை கொண்ட இளவரசர்**

நூருத்தீன் அவர்கள் மார்க்க அறிஞர்களையும் இறைநேசர்களையும் தன்னுடைய அவைக்கு நேரில் அழைத்து வந்து கண்ணியப்படுத்தும் வழமையை கொண்டிருந்தார்கள்.

அவர்கள் முன்னால் பணிந்து நடப்பது நூருத்தீன் அவர்களின் வழக்கம். அவர்களுக்கு பரிசுகளையும் வெகுமதிகளையும் நூருத்தீன் வழங்குவார்கள்.

அவர்களை எழுந்து சென்று வரவேற்பதும், அவர்களை கண்டவுடன் ஆரத்தழுவி முகமன் கூறுவதும் நூருத்தீன் அவர்களின் பொதுவான பண்பு.

அவர்களுடன் ஒரே விரிப்பில் அமர்ந்து அவர்கள் சொல்வதை கவனமாக செவி மடுப்பார்கள் நூருத்தீன் அவர்கள்.

எப்போதெல்லாம் ஆய்வும் அறிவுரையும் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் நாடெங்கிலும் உள்ள மார்க்க அறிஞர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்படும். அவர்கள் ஓரிடத்தில் கூட்டப்படுவார்கள். பின்னர் அவர்களின் ஆலோசனைப்படி முடிவு மேற்கொள்ளப்படும்.

மார்க்க அறிஞர்களை நூருத்தீன் அவர்கள் நடத்திய விதத்தின் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மிக தூரத் தொலைவிலிருந்தும் மார்க்க அறிஞர்கள் வந்து கலந்து கொள்வார்கள்.

நூருத்தீன் அவர்கள் மார்க்க அறிஞர்களை நடத்திய விதம் எந்த அளவிற்கு இருந்தது என்றால் நாட்டின் இளவரசர்கள் மார்க்க அறிஞர்களிடம் பொறாமை கொள்ளும் அளவிற்கு இருந்தது.

இப்படியொரு மார்க்க அறிஞர் ஒருவர் குரசான் பகுதியிலிருந்து நூருத்தீன் அவர்களின் அழைப்பினை ஏற்று அவரை சந்திக்க வந்திருந்தார்.

அவர் பெயர் குத்புதீன் அந்நைசாபுரி.

அவர் ஷாஃபி மத்ஹபை சேர்ந்த நீதியாளர். சட்ட நிபுணர்.

நூருத்தீன் அவர் மீது மிகுந்த அபிமானம் கொண்டிருந்தார்.

ஆனால் மிக முக்கியமான இளவரசர் ஒருவரோ குத்புதீன் மீது மிகுந்த பொறாமை கொண்டிருந்தார். தன்னை விட குத்புதீனுக்கு நூருத்தீன் ஸங்கி அவர்கள் முக்கியத்துவம் அளித்ததே இதற்கு காரணம். இதன் காரணமாக அந்த இளவரசர் நூருத்தீன் அவர்கள் முன்னி லையிலேயே குத்புதீனைப் பற்றி தவறாக பேச ஆரம்பித்து விட்டார்.

உடனே நூருத்தீன் ஸங்கி அவர்கள் கோபத்துடன், "ஓ, மனிதனே, நீ குத்புதீனை பற்றி கூறியது ஏதாவது சரியா?

அப்படியே அது சரியாக இருந்தாலும் அவரிடம் உள்ள இரண்டு பண்புகள் நீ கூறிய குற்றங்களை அழித்து விடும்.

ஒன்று அவருடைய அறிவு, மற்றொன்று அவருடைய இறை நம்பிக்கை.

எந்த குற்றமும் செய்யாதவர் யார் தெரியுமா? யாருடைய குற்றங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படவில்லையோ அவர்தான் குற்றமற்றவர். ஆகவே அனைவரும் குற்றவாளிகளே.

அதே நேரத்தில் ஒன்றுக்கு இரண்டாக அவரைப்பற்றி கூறும் உன்னிடமும் உன்னைப் போன்றோரிடமும் எந்த நல்ல பண்புகளும் எனக்கு தென்படக் காணோம்.


நீங்கள் அறிந்தவர்களாக இருந்திருந்தால் நீங்கள் உங்களுடைய குறைகளை ஆராயத் தலைப்பட்டிருப்பீர்கள்.

எந்த நல்லப்பண்புகளும் காணக்கிடைக்காத உங்களையே நான் சகித்துக்கொள்கிறேன் எனும் போது ஏகப்பட்ட நற்பண்புகளை கொண்ட குத்புதீன் அவர்களின் குறைகளை நான் சகித்துக்கொள்ள மாட்டேனா?

அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் கூறுவதை நான் நம்ப மாட்டேன்.

நீங்கள் ஏதாவது இவரைப் பற்றியோ அல்லது மற்ற மார்க்க அறிஞர்கள் பற்றியோ குறை கூறி திரிந்து கொண்டிருப்பீர்களானால் நான் உங்களை தண்டிக்கவும் தயங்க மாட்டேன்" என்று கூறிவிட்டார்.

நூருத்தீன் ஸங்கி அவர்கள் தவறான எண்ணங்களை ஊசலாட்டங்களை தன் மனதிற்குள் விதைத்து கொண்டதில்லை.



ஒருவரிடம் உள்ள கெட்டவற்றை கணக்கிடுவதற்கு பதிலாக அவரிடம் உள்ள நல்லவற்றை கணக்கிடும் நேர்மறை எண்ணம் கொண்டவர் நூருத்தீன். இதில் உலக மக்களுக்கு பாடம் உள்ளது.

### மாதம் ஒன்பதாயிரம் தினார்

டமாஸ்கசில் ஹதீஸ் ஆராய்சிக்கென்று தனியாக ஒரு நிறுவனத்தினை உருவாக்கினார் நூருத்தீன் ஸங்கி. அதற்கென பெரும் பணத்தை செலவளித்தார்.

அநாதைகளை ஆதரிக்கும் வண்ணம் பல அநாதை இல்லங்களை உருவாக்கினார். அதற்கும் பெரும் பணத்தை செலவளித்தார்.

குர்ஆனை மனனம் செய்யும் ஓதும் மாணவர்களை உருவாக்க மதரஸாக்களை உருவாக்கினார். அதற்கு மாதம் ஒன்பதாயிரம் தினார்களை செலவு செய்தார். கி.பி. 1211ம் வருடங்களில் இது மிகப்பெரிய தொகை.

### யாரும் அவர் முன் அமர முடியாது

நூருத்துன் ஸங்கி அவர்கள் கடினமாவனர், ஆனால் கடுமையானவர் அல்ல. அவர் சாந்தமானவர் ஆனால் பலஹீனமாவர் அல்ல.

எந்த இளவரசரும் அவர் உத்தரவிடாமல் அவர் முன் அமர மாட்டார்கள். ஸலாஹுத்தீன் யூசுப் அவர்களின் தந்தை நஜ்முதீன் அய்யூப் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

முக்கிய இளவரசர்களான அசதுதீன் ஷிர்கு, மஜ்ததீன் இப்னுத்தயா போன்றோரும் நூருத்தீன் சொல்லும் வரை அவர் முன் அமர மாட்டார்கள்.

ஆனால் ஆச்சரியப்படும் விதமாக யாராவது ஒரு சூஃபியோ (இறைநேசரோ), மார்க்க அறிஞரோ அல்லது ஓர் ஏழையோ வந்து விட்டால் நூருத்தீன் அவர்கள் விரைவாக எழுந்து நிற்பார்கள். அவர்களை தங்களுடைய அமருமிடத்திற்கு அழைத்து வருவார்கள். அருகில் அமர்த்தி அவர்களை கண்ணியமாக நடத்துவார்கள்.

பின்னர் அவர்களுக்கு கருவூலத்திலிருந்து தேவையான பொருட்களை தந்து அனுப்பு வார்கள். அப்போது சொல்வார்கள், "அந்த மக்களுக்கு இந்த கருவூலத்தில் என்ன உரிமை உண்டோ அதை பெற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு நாம் வழங்கிய இந்த சிறிய பொருட்களின் மூலம் அவர்கள் திருப்தி கொண்டால் அவர்களுக்கு நாம் நன்றியுள்ள வர்களாக இருப்போம்."

### ஷூராக்கள் நடத்திய விதம்

நூருத்தீன் அவர்கள் ஷூராக்கள் எனப்படும் கலந்தாலோசனைக் கூட்டங்களை நபி (ஸல்) அவர்கள் நடத்திய வகையிலேயே நடத்தி வந்தார்கள் என்றால் அது மிகையல்ல.

அங்கு கருத்து சொல்ல முழு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. முஸ்லிம்களின் நன்மைகள், மார்க்கம், அறிவியல் சம்பந்தமான பல்வேறு கலந்தாலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டன.

யாரும் அந்த கூட்டங்களில் முறை தவறி நடந்து கொண்டதில்லை.

பல நேரங்களில் ஜிஹாத் பற்றியும் எதிரிகளின் நிலங்கள் வெற்றி கொள்ளப்படுவது குறித்தும் மாற்றுக்கருத்துக்களும் முன் வைக்கப் பட்டன. ஆனால் அனைத்து கருத்துகளும் வரவேற்கப்பட்டன. அதற்கு மார்க்கத்தை முன் நிறுத்தியே பதில்கள் கூறப்பட்டன.

சலாஹூத்தீன் யூசுப் அவர்கள் டமாஸ்கசின் ஆட்சியாளராக இருந்த சமயம் அது. இப்னு அசாசிர் அத் திமாஷ்கி என்பவர் சலாஹூத்தீன் யூசுப் அவர்கள் நடத்திய சபையில் பங்கேற்க சென்றிருந்தார்.

அந்த சபை முறையற்று மிக அற்பமாக சண்டையிட்டு கூச்சலிட்டு கொண்டிருப்பதை இப்னு அசாகிர் அவர்கள் கண்டார்கள்.

நூருத்தீன் அவர்களின் சபையிலும் பங்கேற்றவர்கள் இப்னு அசாகிர் அவர்கள்.

நூருத்தீன் அவர்களின் சபையில் எப்படி நேரிடையாக நூருத்தீன் அவர்களிடம் குற்றங் களை சுட்டிக்காட்டுவார்களோ அதேப்போல் இப்போதும் சுட்டிக்காட்ட நினைத்து சலாஹூத்தீன் அவர்களிடம் இதைப்பற்றி கூற முற்பட்டார்.

ஆனால் கூச்சலும் குழப்பமும் அவரை

இவ்வாறு செய்ய அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் அவர் நீண்ட நெடுநாட்களாக சலாஹூத்தீன் அவர்களின் அவைக்கு செல்லவில்லை.

சலாஹூத்தீன் பலமுறை பல நபர்களை அனுப்பி இப்னு அசாகிர் அவர்களை அவைக்கு வரச்சொன்னார்.

கடைசியாக இப்னு அசாகிர் அவர்களும் வந்தார்கள்.

அவரை கண்டவுடன் ஸலாஹூத்தீன் அவர்கள் அவர் அவைக்கு வராததை சுட்டிக் காட்டி கடிந்து கொள்ள ஆரம்பித்தார்.

இப்னு அசாகிர் அவர்கள் பொறுமையாக சொன்னார்கள்," நான் இது போன்ற அவைகளில் விலகி இருக்கவே விரும்புகிறேன். இது பொதுமக்களின் கூட்டத்தை போன்றே உள்ளது. யாரும் அவைத் தலைவரின் பேச்சை கவனம் கொண்டு கேட்பதாகவும் இல்லை. யாரும் எந்த கேள்விக்கும் பதில் சொல்வதாகவும் தெரியவில்லை.

கடந்த காலங்களில் நூருத்தீன் அவர்களின் அவையிலும் நான் பங்கேற்று வந்துள்ளேன். அங்கு அமைதி இருக்கும். மரியாதை இருக்கும். அவர் பேசினால் நாங்கள் அதை செவிமடுத்து கேட்போம், அதேப்போல் நாங்கள் சொல்ல வருவதை நூருத்தீன் அவர்களும் காது கொடுத்து கேட்பார்."

இதை கேட்ட ஸலாஹூத்தீன் யூசுப் அவர்கள் தன் தவறை உணர்ந்து தன் நண்பர்களிடம் இனி இதுபோன்று அநாகரீகமாக முறையற்று நடக்கக்கூடாது என கட்டளையிட்டார். இப்னு அசாகிர் அவர்கள் இருக்கும் அவையில் கண்ணியம் காக்கும்படியும் உத்தரவிட்டார்.

மார்க்கத்தோடு விளையாடியவர்களை நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்




# குடியரசு தலைவருக்கும், குடிமக்களுக்கும்...?

பொதுவான ஊடகங்கள் அதைச் செய்தியை மறைத்தே ஆக வேண்டும் எனக் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டன.

ஆனால் சமூக நீதிக்காகப் போராடி வரும் பத்திரிகைகள் அந்தச் செய்தியை விடுவதாக இல்லை. அவை அந்தச் செய்தியைப் பெரிதுப் படுத்திக் கொண்டே இருந்தன. இதில் சமூக வலைத் தளங்கள் விட்டுக் கொடுக்க வில்லை.

சமூக நீதி வேண்டும் என்பதில் உறுதியாக நின்றன. இந்த சமூக வலைத்தளங்கள், சில பல பத்திரிகைகள் அதில் தமிழகத்தில் முன்னே நின்ற பத்திரிகை "விடுதலை" பின்னர் மெல்ல, மெல்ல இதர பத்திரிகைகளும், அதனைப் பற்றிப் பேசிடத் தொடங்கின. ஆனால் எத்துணை துரிதமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அந்தச் செய்தி எல்லாவற்றையும் ஊற்றி மூடிவிட்டார்கள்.

இந்திய நாட்டின் குடியரசு தலைவர் "ராம்நாத் கோவிந்த்" அவர்கள் மே 2018 திங்கட்கிழமை இராஜஸ்தானிலுள்ள அமைர் மாவட்டம், புஷ்கர் எனுமிடத்திலுள்ள "பிரம்மா" கோயிலுக்கு சாமிக் கும்பிடவும், பூஜா புனஸ்காரங்களைச் செய்திடவும் குடும்பத்துடன் சென்றிருக்கின்றார்.

50-க்கும் மேற்பட்ட படிக்கட்டுகளைக் கடந்து சென்றுதான் கருவறையை அடைய முடியும். அங்குள்ள விக்கிரகத்தை தரிசிக்க இயலும்.

ஏறத்தாழ அத்தனை படிக்கட்டுகளையும் கடந்து உள்ளே சென்றிட நெருங்கும்போது குடியரசு தலைவரும், அவருடைய குடும்பத்தினரும் தடுக்கப்பட்டு விட்டனர். மேலே செல்ல தடை விதிக்கப்பட்டது.

- ஆதாரம் TNN : 15/5/2018 (TOI), விடுதலை மே-30, 2018

குடியரசுத் தலைவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர் என்பதனால் உள்ளே அனுமதிக்க முடியாது என்பது அவர்களின் சித்தாந்தம். அது செயல்படுத்தப்பட்டது.

அதாவது மனுநீதி அங்கே பச்சையாக அரசோச்சியது. குடியரசு தலைவரும், அவரது குடும்பத்தினரும் தாங்கள் அவாவுற்ற பூஜா புனஸ்காரம் தரிசனம் இவற்றைச் செய்ய முடியாமல் திருப்பிவிடப்பட்டனர்.

**இது விவகாரமானது.**

உடனேயே குடியரசுத் தலைவர், ஒரு அறிக்கை மூலம் நிலைமையைச் சமாளிக்க முயற்சிகளை மேற்கொண்டார். அந்த அறிக்கையை குடியரசு தலைவருடைய, அலுவலகமே வெளியிட்டது.

அதில், குடியரசு தலைவருடைய மனைவிக்கு கால்வலி ஏற்பட்டதால் அவர் படிக்கட்டுகளில் ஏறிட முடியாமல் கோயில் படிக்கட்டில் இருந்துவிட்டு திரும்பிவிட்டார் எனக் குறிப்பிடப்பட்டி ருந்தது. (விடுதலை 31-5-2018)

ஆனால் சமூக நீதி போராளிகள், இந்த நிகழ்வையும் அது தந்த வேதனையையும், வலைத் தளங்களில் உலா வர விட்டார்கள்.

தமிழ்நாட்டில் திராவிடர் கழகம் இதனை பிரச்சாரமாகவே மேற்கொண்டது.

இங்கே கவனிக்க வேண்டியது என்னவெனில் இந்திய நாட்டின் குடியரசு தலைவரை, இந்திய அரசியல் சாசன சட்டத்தின் முழு முதற்பாதுகாவலர் "The Custodian of the Constitutuion of India" என்பார்கள்.

இந்திய அரசியல் சாசன சட்டம் "Equality" அனைவரும் சமமானவர்கள் என்பதை அடிப் படை உரிமைகளுள் ஒன்று என அறிவிக் கின்றது.

இத்தோடு நில்லாமல் அதே அடிப்படை உரிமைகளைப் பேசும், அரசியல் சாசனச் சட்டம் 17A தீண்டாமையைப் பாராட்டுவது. தீண்டாமையை செயல்படுத்துவது, இவையெல்லாம் ஒழிக்கப்பட்டு விட்டது. தீண்டாமையை நடைமுறைப்படுத்துவது குற்றம் எனவும் பிரகடனப் படுத்துகின்றது.

இந்த அடிப்படை உரிமைகளெல்லாம் எல்லா மக்களுக்கும் கிடைத்திடுவதை உறுதி செய்வது குடியரசு தலைவரின் பொறுப்பு.

ஆனால் அவருக்கே ஆலயப் பிரவேசம் மறுக்கப்படுகின்றது. நமது அரசியல் சட்டப்படி குடிரயசுத் தலைவரின் மனைவி முதன்மை பெண் குடிமகள். அவருக்கும் சமநீதி மறுக்கப் பட்டுள்ளது.

அவரிடமே தீண்டாமைப் பாராட்டப் படுகின்றது. கேட்பார் யாருமில்லை என்றாகி விட்டது.

இப்படி அரசியல் நிர்ணய உரிமைகளைக் குடியரசு தலைவருக்கே மறுக்கும் சட்டம் ஒன்று இங்கே செயல்பட்டுக் கொண்டிருக் கின்றது என்பதைத்தான் இராஜஸ்தானில் குடியரசு தலைவருக்கும் ஏற்பட்ட அவமானம் சுட்டிக்காட்டுகின்றது.

இதைத்தான் ஜாதிக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடி வருபவர்கள் இந்தியாவில் ஜாதியக் கட்டமைப்பு மிகவும் இறுக்க மாகவே இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டி வருகின்றார்கள்.

இந்தக் கட்டமைப்பை உடைப்பதற்கு எடுத்த எந்த முயற்சியும் இன்றளவும் பலன் தந்ததாகத் தெரியவில்லை. ஒரே ஒரு முயற்சியைத் தவிர. அது இஸ்லாம் என்ற வாழ்க்கை நெறியை அப்பிக் கொள்ளும் முயற்சி.

இந்த முயற்சியில் ஈடுபட்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஜாதிய கட்டமைப்பை உடைத்தெரிந்திருக் கிறார்கள். தங்கள் தலைமுறையை ஜாதிய அடுக்குமுறை, ஜாதியின் பெயரால் இழைக்கப்படும் அநீதிகள், இவற்றிலிருந்து நிரந்தரமாக விடுதலையடையச் செய்திருக் கின்றார்கள்.

அவர்களின் பேரப்பிள்ளைகள், இந்த ஜாதிக் கொடுமை எனப் பேசிக் கொள்கின் றார்களே, அது என்ன? என்று தங்கள் தாத் தாவைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆக இஸ்லாத்தை ஆரத்தழுவுவதே குடியரசுத் தலைவர், அவருடைய குடும்பம், அவருடைய ஜாதியைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கும் ஒரே வழி!

இங்கே இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். குடியரசு தலைவர் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சார்ந்தவர். ஆனால் ராஷ்டிரிய்ய சுயம் சேவக் என்ற அமைப்பைச் சார்ந்தவர். அதனால் இந்துத்துவா என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர். அவர் குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இஃதோர் முக்கியக் காரணம்.

இராஜஸ்தானில் குடியரசுத் தலைவருக்கு நேர்ந்த தலைகுனிவு, அவமானம் இவை இந்துத்துவா என்ற கொள்கை எந்த விதத்திலும் ஜாதிய கட்டமைப்பை உடைக்க உதவாது என்ற உண்மையும் வெட்ட வெளிச்சமாகின்றது.

இதில் இன்னும் அழுத்தம் தரும் உண்மை என்னவெனில் அந்த இராஜஸ்தான், இந்துத் துவாவின் ஆட்சியில் பிடியில் இருக்கின்றது.

ஆக, ஜாதீயை அடுக்குமுறை, கட்டமைப்பு இவற்றை உடைப்பதில், சகோதரத்துவத்தை யும், சமத்துவத்தையும், நிலை நாட்டுவதில் இஸ்லாத்தின் முன் இந்துத்துவா முற்றாகத் தோற்றுப் போனது.

இனி இந்தியாவை இந்த இஸ்லாம் மட்டுமே காப்பாற்றிட இயலும். இதனை அனைவரும் உணர்ந்திட வேண்டும். குறிப்பாக ஜாதிக் கொடுமைகளுக்கு ஆட்பட்டு அவமானப்பட்டு நிற்பவர்கள் தங்களுக்கு நடக்கும் நித்திய கொடுமை களிலிருந்து விடுபட்டிட இஸ்லாத்தை ஏற்கட்டும், விடுபடட்டும்.

ஜாதீயக் கொடுமைகளுக்கு ஆளாகி நிற்கிறவர்கள் அல்லாமல் இந்துத்துவா என்ற கொள்கையை ஏற்று நிற்பவர்களும் இஸ்லாத்தை இப்போதாவது ஆழ்ந்து ஆராய்ந்து ஏற்றிட முன் வந்திட வேண்டும்.

ஏனெனில், இந்த நான்கு வருடங்களாக இந்துத்துவா ஜாதிய கட்டமைப்பை, அடக்கு முறையை பலப்படுத்தியே இருக்கின்றது.

அதேபோல் எல்லா முனைகளிலும் தோல்வியையே சந்தித்திருக்கின்றது.

இதற்கு தகுந்த மாற்றாக இஸ்லாம் மட்டுமே இருந்திட இயலும்.

இஸ்லாம் மனித உறவுகளின் அடிப்படை களை இப்படி வலியுறுத்துகின்றது.


"மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்துகொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத் தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் வெளிப்படுத்தி, பரவச் செய்தான். என்று இறைவன் பிரகடனப் படுத்துகின்றான்." *அல்குர்அன் 4:1*

"மனிதர்கள் யாவரும், ஆதியிலே ஒரே இனத்தவராகவே அன்றிவேறில்லை. பின்னர் அவர்கள் மாறுபட்டுக் கொண்டனர். உமது இறைவனிடமிருந்து (இம்மையின் கூலி மறுமையில் பூரணமாகக் கொடுக்கப்படும் என்ற) ஒரு வார்த்தை முந்தி ஏற்கப்பட்டிருக்கா விட்டால், அவர்கள் எந்த விஷயத்தில் மாறுபட்டிருக்கின்றனரோ, அதைப்பற்றி அவர்களுக்கிடையே, (இதற்குள் முடிவு செய்யப்பட்டி ருக்கும்)" *அல்குர்ஆன் 10:19*

இப்படி கொள்கையைப் பிரகடனப்படுத்தி அதனை செயலில் நடைமுறைப்படுத்தி வரும் இந்த இஸ்லாம்தான் உலகெங்கும் கோடானு கோடி மக்களை அடிமைத் தளைகளிலிருந்து நிரந்தரமாக விடுதலையடையச் செய்திருக் கின்றது.

அதனை ஏற்போம்! இந்தியாவைக் காப்போம்!!

- இன்ஷா அல்லாஹ்.






# வி.சி.க. வழங்கிய காயிதே மில்லத் பிறை விருது

நான் வடக்குச் சூரன்குடி என்ற என் சொந்த ஊரில் இருந்தேன். அன்புச் சகோதரர், எல்லா நிலையிலும், நாம் ஏற்றுக் கொண்ட கொள்கையில் உறுதியாக நிலை யாக நின்று கொண்டிருப்பவர் - இல்யாஸ் ரியாஜி அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதில் என்னைப் பற்றிய - என் வாழ்க்கையைப் பற்றிய குறிப் பொன்று வேண்டும் எனக் கேட்டார்கள்.

ஏன் அவ்வளவு அவசரமா எனக் கேட்டேன். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சமூகநீதி பேராளிக்கான விருதை காயிதே மில்லத் விருதை உங்களுக்கு வழங்கிட இருப்பதாகத் தகவல் சொல்லி இருக்கின்றார் கள் என்றார். இரவே மின்னஞ்சலில் அனுப் பினால் நன்றாக இருக்கும் என்றார்கள்.

நான் என்னைப்பற்றிய அதிகமாகக் கவலைப்பட்டதில்லை. அதனால் அப்படி யொரு வாழ்க்கைக் குறிப்பை வைத்து கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒன்று நினைவுக்கு வந்தது.

அது, கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்கள் ஒருமுறை இப்படித்தான் என்னுடைய வாழ்க்கை குறிப்பைப் பற்றி கேட்டார்கள். அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாக ஒரு குறிப்பை தயார் செய்து அனுப்பினேன்.

கவிக்கோ அவர்கள் மேலும் தேவைப் பட்டத் தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் சார்பில், "இலக்கியச் சுடர்' என்ற விருதை 2009 ஆம் ஆண்டில் வழங்கினார்கள். கவிக்கோ அவர்கள் தந்த அங்கீகாரம் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அந்த விருதை முடிவு செய்வதற்கு பல நாட்களுக்கு கவிக்கோ அவர்கள், என்னிடம் உளவுத்துறையின் தொல்லைகளிலிருந்து விடு பட்டு விட்டாயா எனக் கேட்டார்கள்.

ஒரு 'தீவிரவாதி' என முத்திரை குத்தி அழிப்பதற்கு தங்களால் இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றேன்.

இத்தனை பெரிய வேலைகளை செய்து விட்டு அங்கீகாரம் இல்லாமல் இருக்கின் றாயே என ஆதங்கப்பட்டார்கள்.

இதன் பயனாக நான் இஸ்லாமிய தமிழ் கழகத்தின் சார்பில் 2009 ஆம் ஆண்டு இலக் கியச்சுடர் விருது பெற்றேன். அல்ஹம்து லில்லாஹ்.

அதன்பின் சீதக்காதி அறக்கட்டளையின் சார்பில், சதக்கத்துல்லாஹ் அப்பா இலக்கிய விருது 2015 ஆண்டில் வழங்கப்பட்டது.

இதிலும் கவிக்கோ, அ.மார்க்ஸ் ஆகியோர் பின்னணியில் நின்றார்கள் என அறிந்து மகிழ்ந்தேன்.

மாண்புமிகு கவிக்கோ அவர்களை சென்ற ரமழான் திங்களின் தொடக்கத்தில் அல்லாஹ். அழைத்துக் கொண்டான். அல்லாஹ் அவர் களுக்கு சுவர்க்கத்தின் உயர்ந்த படித்தரங்களை நல்கிடுவானாக!

இந்த ரமழானின் தலைநாளில் இருந்திருந் தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார் (இறைவனிடமிருந்தே வந்தோம், அவனிடமே மீளுவோம்)

ஆக கவிக்கோ அவர்களுக்கு அனுப்பிய தகவல்களையே அப்படியே அனுப்பினோம்.

சிலநாட்களுக்குப் பிறகு விடுதலை சிறுத் தைகள், விடுதலை சிறுத்தைகளின் கட்சி இவற்றின் படைக்களாய் இருக்கும் அன்புத் தம்பி யூசுஃப் அவர்களும், தம்பி ஷா நாவாஸ் தம்பி அப்துல்ரஹ்மான் ஆகியோர் அதனை உறுதி செய்தார்கள்.

பின்னர் புதிய தலைமுறை தொலைக் காட்சியைப் பார்த்த வைகறை வெளிச்சம் வாசகர் ஒருவர் எனக்குத் தொலைபேசியில் சொன்னார். உடனேயே பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களைத் தொடர்பு கொண்டேன். அவர்கள் ரமழான் நிகழ்ச்சி களுக்காக, ஒளி, ஒலிப்பதிவில் இருந்தார்கள். எனினும் தொலைபேசியை எடுத்து எனக்கும் இன்று (பிரஸ்மீட்) பத்திரிகையாளர்கள் சந்திப்பு இருக்கின்றது என்றார்கள். - என செய்தியை உறுதிபடுத்தினார்கள்.

அதன்பின் என்னையும் தொடர்பு கொண்டு செய்திகளைச் சொன்னார்கள். அகம் மகிழ்ந்தேன். மாஷாஅல்லாஹ்.



தொடர்ந்து வெளிச்சம் தொலைக்காட்சி சார்பில், என்னைப் பேட்டிக் கண்டார்கள். அழைப்பையும், தந்தார்கள்.

நிகழ்ச்சியை **15-05-2018** அன்று சென்னை, காமராஜர் அரங்கில் பாங்குற நடத்தினார்கள்.

இது என்னுடைய மூன்றாவது விருது என்றாலும் இந்த விருதுக்கு உலகெங்கிலு மிருந்து வாழ்த்துகள் வந்து குவிந்தன. துஆக்கள் வந்து குவிந்தன. அல்ஹம்துலில்லாஹ்.

பல அன்பு உள்ளங்களின் வாழ்த்துக் களை - பதிவுகளைப் பார்த்து நெஞ்சம் நெகிழ்ந்தேன். உலகெங்குமிருந்து பலர் தங்கள் உள்ளக்கிடக்கையை அப்படியே கொட்டி இருந்தார்கள்.

பல சிக்கலான நேரங்களையும், பீதியையும், பதற்றங்களையும் சந்தித்தே வாழ்க்கையை ஓட்டிய நான் இதுபோன்ற விருதுகளால், குறிப்பாக இந்த விருதால் உற்சாகமடைந் தேன். சற்று இளைப்பாறினேன் - வந்து குவிந்த பாராட்டுகளாலும் இதயத்தை வருடும் வாகான வார்த்தைகளாலும் நெஞ்சம் நெகிழ்ந் தேன். தொடக்க காலத்தில் எனக்கு எல்லா விதத்திலும் தோள்கொடுத்த சகோதரர்கள், இப்போதும் என்னோடு இந்த இலட்சியப் பயணத்தில்துணை நிற்கும் சகோதரர்களுக்கும் சேர்த்தே இவ்விருது என நான் கருதுகிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

ஒருவிருதை எப்படி வழங்கிட வேண்டும் என்பதன் எடுத்துக்காட்டாக விடுதலை சிறுத்தைகளின் விருது வழங்கும் நிகழ்ச்சி அமைந்தது. அதில் **2.5** நிமிடங்கள் ஓடிய காட்சிகள் உலகெங்கும் பரவி பாராட்டுகளாக என்னை அடுத்த நாளே வந்து ஆறத்தழுவியது.

அரபு நாடுகள், அமெரிக்க, கனடா. பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் வாழ்த்துக்கள் குவிந்தன. ஒரு விருதை அரசு தந்திருந்தால் கூட வேண்டாம் எனச் சொல்லி இருப்பேன். நீங்கள் தருவதால் வாங்கிக் கொள் கிறேன் என்று நான் சொன்னதை அதைத் தம்பி வி.சி.க. யூசுப் சுட்டிக்காட்டியதும் எவ்வளவு பொருத்தமானது.

எனக்கு வாழ்த்துக்களும் விடுதலை சிறுத்தைகளுக்கு நன்றியும் வந்து குவிந்து கொண்டே இருந்தன. (அல்ஹம்துலில்லாஹ்) வாழ்த்தியவர்களுக்கு நன்றி!

ஆக விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு நன்றி!


இந்த விருதுக்கு என் பெயரை பரிந்துரைத் தவர்கள் யார், யார் என்பது தெரியவில்லை. அந்த நல்ல உள்ளங்களுக்கு நன்றிகள் பல...

விடுதலை சிறுத்தை கட்சியின் படைக் கலன்களாக விளங்கும் தம்பிமார்கள், ஹாஜி முஹம்மத் யூசுஃப், தம்பி அப்துல் ரஹ்மான், தம்பி ஷாநாவாஸ் ஆகியோருக்கும் நன்றி!

தமிழகமெங்குமிருந்து தாமாகவே வந்து நான் விருது பெறுவதைக் கண்ணுற்ற அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றி! உலகெங்கிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்புச் சகோதரர்களுக்கும் நன்றி!

அனைத்திற்கும் மேலாக, தன் அருளை என்மேல் அள்ளிச் சொறிந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வுக்கும் நன்றி! நன்றி! **- எம்.ஜி.எம்.**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரு. 30 மட்டுமே


**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# ஆசிரியருக்கு வாழ்த்துகள்!

2018ஆம் ஆண்டிற்கான காயிதே மில்லத் விருதுக்காக என்னுடைய ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். எல்லாப்புகழும் இறைவனுக்கே!

2013ஆம் ஆண்டு அவரது கரங்களைப் பற்றி அவரது இல்லத்தில் கலிமா மொழிந்து இஸ்லாத்தை ஏற்றுகொண்டேன்.



இரண்டு ஆண்டுகள் அவருடனே இருந்து பயணித்திருக்கிறேன்.

எழுத்தாளராக பத்திரிக்கையாளராக சமூக ஆர்வலராக இல்லாமல் சாதாரண மனிதனாக அவரை எனக்கு நன்றாகவே தெரியும்.

ஒருமுறை நானும் அவரும் அவருடைய புத்தக அறையில் ஒரு பழைய கட்டுரையை தேடிக் கொண்டிருந்தோம் அந்த அறை முழுக்க ஆங்கிலம் தமிழ் என பல புத்தகங்கள் கொட்டி கிடந்தன. சுமார் இரண்டாயிரம் புத்தகங்கள் இருக்கும். நான் அவரிடம் இவ்ளோ புத்தகங் களை வாங்கி வைத்திருக்கிறீர்களே இவையெல் லாவற்றையும் எப்போது படித்து முடிப்பீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "படித்து முடித்த புத்தகங்கள் தான் தம்பி இது" என்று கூறினார்.

★ **சமூகத்தின் மீட்சிக்கான ஏக்கம் நிறைந்தவர்.**

★ **காஷ்மீர் பாதி விதவைகள்**

★ **மால்கம் எக்ஸ்**

★ **சிறையில் எனது நாட்கள்**

★ **நாடாளுமன்ற தாக்குதல்கள் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்**

★ **ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**

★ **பாலஸ்தீன முஸ்லிகள் அகதிகளான வரலாறு**

போன்ற

இவரது புத்தகங்கள் நம் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் ஏராளம்.

உடல் ரீதியான பல சிரமங்கள் இருந்தாலும் மனதளவில் இன்னும் இளைஞராகத்தான் உள்ளார்.

எல்லாம் வல்ல அர்ரஹ்மான் இவருக்கு நீண்ட ஆயுளையும் மறுமையில் சுகமான வாழ்வை யும் தந்தருள் புரிவானாக.

**குறிப்பு:** ஒவ்வொரு மனித னுக்கும் ஒரு புத்தகம் தனிப் பட்ட முறையில் முன்னோடி யாக இருக்கும்.

அந்த வகையில் என்னு டைய பேவரட் புத்தகம் எப்போதும் என் பையில் இருக்கும் புத்தகம் இவரது எழுத்தோட்டத்தில் வெளிவந்த தாலிபான் பிடியில் என்ற புத்தகம் தான்.

கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வுடன் எனக்கு அந்த புத்தகத்தை அன்பளிப்பாக தந்தார்.

அன்று முதல் இன்று வரை நூறுக்கும் அதிகமான முறை அந்த புத்தகத்தை வாசித்து விட்டேன். சகோதரி யுவான்னி ரிட்லியின் தாலிபான் பிடியில் புத்தகம் எனக்கு ஒரு முன்மாதிரியாகி விட்டது.

அதே போல ஒரு புத்தகத்தை ஒரே தடவை யில் மூடி விடாமல் படித்து விடமுடியுமா என்றால்

அது எழுத்தாளனுடைய எழுத்தோட்டத்தை பொருத்தது.

ஆனால் உங்களுக்கு ஒரு சவால் நீங்கள் குலாம் முஹம்மத் அவர்கள் எழுதிய

**மால்கம்-X**

தாலிபான் பிடியில் புத்தகங்களை எடுத்து படித்து பாருங்கள்.

எழுத்தோட்டத்தில் உங்களை மறந்து அந்த புத்தகத்துக்குள்ளேயே பயணித்து விடுவீர்கள். எல்லாப்புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே.

**- த.அஷ்ரஃப் இஸ்லாம்**




# காயிதே மில்லத் விருது பெறும் போராளிக்கு வாழ்த்துக்கள்

**அண்ணன் குலாம் முஹம்மதுக்கு விருது வழங்கும் விசிக வுக்கு நன்றி.**


விடியல் வெள்ளி பத்திரிக்கையின் நிறுவன ஆசிரியராக இருந்து, தற்போது வைகறை வெளிச்சம் பத்திரிக்கையின் ஆசிரியருமான குலாம் முஹம்மதுக்கு காயிதே மில்லத் விருது வழங்குவது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்விருதுக்கு முழு தகுதியுடையவர்.

அதிகார வர்க்கத்தின் கொடுங்கோன்மையை தன் எழுத்து, பேச்சு, அமைப்பின் மூலம் அறிவுப்பூர்வமாக தட்டிக்கேட்டதால், தான் பணியாற்றி வந்த மத்திய அரசு வேலையான ரயில் டிக்கட் பரிசோதக அதிகார பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் தொடர்ந்து மனித உரிமையை நிலைநாட்டும் பணிகளை செய்து வருகிறார்.

அவரது பணி சிறக்க இறைவனிடம் பிரார்த்திக் கிறேன். பொது வாழ்க்கையிலுள்ள நாம் அனைவரும் இறைவனின் விருதுக்காக இறைஞ்சுவோம்.

**- என்.ஏ. தைமிய்யா**
**மனிதநேய ஜனநாயக கட்சி**












குலாம் முகம்மது அவர்களின் புத்தகங்கள் தூங்க விடாமல் விழிப்புணர்வு ஏற்படுத்தும். அவரின் அயராத உழைப்பை அல்லாஹ் பொருந்தி கொள்வானாக. போட்டியும் ,பொறாமையும் மிகுந்த இந்த காலகட்டத்தில் இந்த காயிதே மில்லத் விருது பெறுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் .

அவருக்கு அல்லாஹ் இம்மை மறுமை இரண்டிலும் வெற்றி பெற செய்வானாக. ஆமீன் என்று வாழ்த்தும்

இஸ்லாமிய அழைப்பாளர்
**M.M.C.MOHAMMED ENAYAM**



# மு.குலாம் முஹம்மத்

# சமூகம் பயன்படுத்த தவறிய மிகச் சிறந்த ஆளுமை

## 40 ஆண்டுகளுக்கு மேலாக சமூகப்பணியில் தனனை ஈடுபடுத்திக் கொன்டவர் தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளாத தலைவர்! !!

இஸ்லாத்தில் எந்த விசயத்திலும் சமரசம் செய்து கொள்ளாதவர். இஸ்லாத்தின் முக்கிய பணியான பிற மதத்தவருக்கு இஸ்லாத்தை எடுத்து சொல்லும் தாவா பணியை நீலப்புலிகள் தலித் விடுதலை இயக்கத்தின் நிறுவுனர். T.M மணி என்கிற உமர் ஃபாருக், கொடிக்கால் சேக் அப்துல்லா, ஹிதாயத்துல்லா, மைலாடுதுரை ரவூஃப் இவர்களோடு சேர்ந்து கிராமம் கிராமமாக போய் பிரச்சாரம் செய்து வந்தார். இதனால் இஸ்லாத்தை ஏற்றுக் கொன்டவர்களுக்கு முறையான மார்க்க கல்வி கொடுக்க நினைத்து *1989* ஆண்டு திருப்பளந் தாளில் அறிவகம் என்கிற கல்வி கூடத்தை ஆரம்பித்தார்.

காவல்துறையின் அச்சுறுத்தலால் அங்கு தொடர்ந்து நடத்த முடியாமல் *1991-92* களில் தேனி மாவட்டம் முத்துதேவன்பட்டியில் அரசாங்கத்தால் தலித்களுக்கு கொடுக்கப்பட்ட இடத்தை ஹிதாயத்துல்லா சாரின் உதவியோடு விலைக்கி வாங்கி கல்விகூடம் நடத்தி வந்தார். அதன் முதல் பொருளாதார உதவியை வழங்கி யவர் மைலாடுதுரை ரவூஃப் அண்ணனின் மாமியார் அவர்கள். தற்போது குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு தமிழகத்தில் பிராமணர்கள் அதிகமாக வாழும் கும்பகோணத்தில் " அன்பகம் " என்னும் கல்வி நிறுவனத்தை நடத்தி வருகிறார்...

சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகளை பொது மக்களுக்கு தெறியப்படுத்தும் நோக்கில் சமரசத்தில் கட்டுரை எழுதி வந்தார். பின்பு *1992* ஆண்டில் "விடியல் வெள்ளி " என்னும் பத்திரிக்கையை தன்னுடைய சொந்த பெயரில் பப்ளிசிட்டி வாங்கி நடத்தி வந்தார். இது பத்திரிக்கை துறையில் பெறும் வரவேற்பை பெற்று மாற்றத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக கிலாபத் பற்றிய கட்டுரையும் பாலஸ்தீன் பற்றிய கட்டுரையும் பெறும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தற்போது " வைகறை வெளிச்சம் " என்னும் மாத இதழை நடத்தி வருகிறார்.

*1998* கோவை கலவரத்தில் பாதிக்கப்பட்டு சிறையில் இருந்த அப்பாவி இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாசர் அர்களின் உதவியோடு சட்டம் பயின்ற சகோதரர்களை வைத்து சட்ட உதவி மையம் ஒன்றை ஏற்படுத்தி பாதிக்கப்

பட்டவர்களுக்கு உதவி செய்தார். குறிப்பாக 97 கலவரத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் 98 குண்டு வெடிப்பு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறையில் உள்ள பாதிக்கப்பட்ட சகோதரர்களின் சந்ததிகளும் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்கு கல்வி பயில வழிவகை செய்தார். இதை நாசர் அவர்கள் தனது புத்தகமான கோவை கலவரத்தில் எனது சாட்சியம் என்னும் நூலில் எழுதி உள்ளார்.

இதனால் இவர் உளவுத்துறையால் கண் காணிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டார். இதுவரை 18 முறை அவருடைய வீடு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பெரிய நிறுவனமான இரயில்வே துறையில் பணி செய்து வந்த இவர் (Seat travaling inspector) 2000-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பணியில் இருந்து விலக்கப்பட்டார். அந்த வழக்கை இன்று வரை உச்ச நீதிமன்றத்தில் தானே வாதாடி நடத்தி வருகிறார்.

தான் பணியிலிருந்து விலக்கப்பட்டதையும் கவலைபடாமல் தொடர்து சமூகப் பணி செய்து வந்தார் இவர் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து சண்டையிட்டவர்களும் உண்டு அப்போது கூட அவர் சொன்ன வார்த்தை தம்பி முஸ்லிம் களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம் ஆனால் அது ஜென்ம பகையாக மாறக் கூடாது ஏனென்றால் அவர்களும் ஈமான் கொண்ட வர்கள். அதனால் இதுபோன்ற எதிர்ப்புகளை பற்றி நாம் கவலைப் படக்கூடாது.

எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் அதற்கு சரியான ஒரு தீர்வைத்தந்து எங்களை வழி நடத்துபவர். சமூக போராளிக்கான காயிதே மில்லத் பிறை விருது வழங்க முடிவு செய்யப்பட்டு விசிக-ன் பொருளாளர் யூசுப் அவர்கள் தொலைபேசியில் தெரிவித்தபோது அவர் தம்பி அரசாங்கம் தருவதாக இருந்தால் நான் மறுத்திருப்பேன் தம்பி திருமாவளவன் தரும் விருதை ஏற்றுக்கொள்கிறேன் என கூறி நன்றி தெரிவித்தார்.

அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளை கொடுத்து இன்னும் இந்த சமூகத்திற்கு பணி செய்ய உடல் ஆரோக்கியத்தை கொடுப்பானாக!

# எல்லாப் புகழும் இறைவனுக்கே!

அஸ்ஸலாமு அலைக்கும்.

என் அன்புச் சகோதரர் மு.குலாம் முஹம்மது அவர்களுக்கு!

தங்களுடைய இந்த சுயநலமில்லா உழைப்பிற்க்கு இங்கே கிடைத்தது இந்தப் பரிசு.இன்னும் நீங்கள் செய்த பல தியாகங்களுக்கும்,தாங்கிக் கொண்ட துரோகங்களுக்கும், உடல் அளவிலும், மன அளவிலும் பல இன்னல்கள், நெருக்கடிகள் வந்து சூழ்ந்த போதும் உங்களிடம் நாங்கள் கண்ட நிலை குலையா உறுதிக்கும், ஆரவாரங்களும் ஆர்ப்பாட்டங்களும் இல்லாமல் நீங்கள் அமைதியாக சமுதாயத்திற்கு செய்த எத்தனையோ நன்மைகளை இறைவன் மட்டுமே அறிந்தவனாக இருக்கிறான். தாங்கள் மரணத்தின் விழும்பு வரை சென்ற நிலையிலும் என் மக்களை அல்லாஹ் காப்பாற்றட்டும் என்று கூறிய அந்த சமூக துடிப்பிற்கும்,இன்னும் பல பல சிறந்த பரிசுகளை என் ரப்பு நாளை சொர்க்கத்திலும் தங்களுக்கு தர வேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறேன்.

எளிமையும் தன்னடக்கமும் நிறைந்த தங்களை போன்ற சிறந்த தலைவர்களே இன்றைய சமூகத்திற்கு தேவை. அதனால் இறைவன் உங்களின் ஆரோக்கியத்தை அதிகமாக்கி, ஆயுளையும் நீளமாக்க வாழ்த்தி, துஆவும் செய்கிறேன்.

இன்னும் மார்க்கத்தைக் கற்றவர்களே உலக ஆதாயம் ஒன்றிற்க்காக மார்க்கத்தை இழுத்தும் வளைத்தும் பேசும் போது உள்ளதை சொல்வோம் என்ற வழிமுறை நீங்கள் அல்லவோ மார்க்க அறிஞர் என்ற எண்ணம் தோன்றுகிறது. இவ்வளவு இருந்தும் உங்களுக்குக்காக துஆ மட்டுமே செய்ய தெரிந்தது எங்களுக்கு.

ஆனால் உண்மையை பேசும் உமக்கு எதற்கு முன்னுரிமை என்று உலகமே உங்களை ஒதுக்கி வைத்த போதும்.உங்கள் உண்மையான சமூக உழைப்பால் கவரப்பட்டு அதற்கு விருதும் வழங்கி கௌரவித்த விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கு நன்றி. அவர்களுக்கும் இறைவன் நேர்வழி காட்டுவானாக.

**- நாதிரா அஷ்ரஃபியா**

# அண்ணனுக்கு வாழ்த்துகள்!



அண்ணன் மு. குலாம் முஹம்மது அவருக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் காயிதே மில்லத் பிறை விருது.

அண்ணன் மு.குலாம் முஹம்மது பற்றி நிறைய எழுதலாம். அவர் ஒரு இலட்சிய வீரர். வாழும் வரலாறு. எனினும் ஒரே ஒரு தகவலை மட்டும் கூறுகிறேன்.

டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி எழுதி, நான் மொழிபெயர்த்து மண்ணடி சாஜிதா புக் சென்டர் வெளியீட்டில் வெளிவந்த "நாம் தேடும் புதிய தலைமுறை" நூலை வாங்கிப் படித்த பின்பு, தேடி வந்து என்னைச் சந்தித்தவர் அண்ணன் மு.குலாம் முஹம்மது.

ஒவ்வொரு இலட்சிய வீரர்களிடம் அவசியம் இருக்க வேண்டிய இந்நூலை நாங்கள் வெளி யிட்டிருக்க வேண்டும் என்று ஆதங்கப்பட்டார்.

அதன்பின்பு வைகறை வெளிச்சம் மாத இதழில் எழுதுங்கள் என்றார். அவரின் பேச்சை மறுக்காமல் "நான் ஏன் முஸ்லிம் ஆனேன்" என்ற தொடரை எழுதினேன்.

வைகறையில் மத்திய கிழக்கு குறித்து எழுதுங்கள் என்றார். கவர்ஸ்டோரி கட்டுரை களை எழுதத் தொடங்கினேன்.

2014 ஆம் ஆண்டு காசா - இஸ்ரேல் போர் சமயம். காசா - இஸ்ரேல் யுத்தம் முடிந்த பின்பு பத்திரிக்கையை வெளியிடலாம் என்றேன். ஒத்துக் கொண்டார். யுத்தம் முடிந்தபாடில்லை.

ரமழான் மாதம். தராவீஹ் தொழுகையில் திருக்குர்ஆன் ஓதி தராவீஹ் தொழுகை நடத்துதல், தினமும் பயான் செய்தல், பிந்திய பத்து இரவுகளில் இரவுத் தொழுகையை முழு குர்ஆன் ஓதி நடத்துதல் என இரவு முழுவதும் விழித்த நிலையில், ஆகிய கடினமான வேலைகளுக்கிடையில் காசா - இஸ்ரேல் யுத்தத்தின் உண்மை நிலையை அறிய தினமும் 50 அரபு - ஆங்கில பத்திரிக்கைகளை படித்து விஷயங்களை புரிய வேண்டியதிருந்தது.

காசா - இஸ்ரேல் போர் தகவல்களில் என்ன செய்திகள் ? நடப்புகள் என்ன? என்று விவாதிப்பதற்காக வந்தார் அண்ணன் மு.குலாம் முஹம்மது.

யுத்தம் முடிவடையாததினால் பெரு நாளுக்கு ஊருக்கும் செல்ல முடியவில்லை. பெருநாள் அன்று கூட துளி நேரம் ஓய்வில்லா மல் செய்திகளை சேகரிக்க வேண்டியிருந்தது. இரவிலும்- பகலிலும் ஓய்வே இல்லை என்றேன் அவரிடம்.

அவர் சொன்ன வாசகம் எனது உள்ளத்தில் இன்றும் அப்படியே ஆணி அறைந்தார் போன்று உள்ளது.

"ஆலிம்சா , ஒரு முஃமினுக்கு கப்ரில் தான் ஓய்வு; தூக்கம் எல்லாம்" என்றார்.

இவ்வுலக வாழ்க்கையையும், நேரங்களை யும் மார்க்கத்திற்காக அர்ப்பணித்து வாழ்பவர் களுக்கு இவ்வார்த்தை நிச்சயம் வழிகாட்டும்.

அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக..

**-அபுல் ஹசன் பாஃசி**



# ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு வழக்கின் தீர்ப்பு ஒரு பார்வை...

இந்தியாவில் இதுவரை நடைபெற்ற அனைத்து தீவிரவாதத் தாக்குதல் வழக்கு களிலும், மெக்கா மசூதி குண்டுவெடிப்பு வழக்கு தனிப்பட்ட ஒரு தன்மை உடைய தாகும். மறுபடியும் ஒரு முறை அச்சுறுத்தப் பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதே இதன் காரணம். ஒரு மசூதியில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது; அங்கு உயிரிழந்த மக்கள் முஸ்லிம்கள் ; மசூதிக்கு வெளியே காவல்துறையால்சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் முஸ்லிம்கள்; குண்டு வெடிப்புக்கு குறை கூறப்பட்டவர்கள் முஸ்லிம்களே ; இதற்காக கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப் பட்டவர்கள் முஸ்லிம் இளைஞர்களே; இப்போது வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பும் முஸ்லிம்களுக்கு எதிராகவே அமைந் திருக்கிறது. இது நீதி வழங்கிய தீர்ப்பு அல்ல; நீதியை கேலி செய்யும் ஒரு தீர்ப்புதான் இது என்று சமூக உரிமைகளைக் கண் காணிக்கும் குழுவின் பொதுச் செயலாளர் லத்தீப் மகமத் கான் அய்தராபாதிலிருந்து எங்களிடம் தொலை பேசியில் பேசினார்.

ஹைதராபாத் நகரின் சார்மினார் இரட்டை கோபுரத்துக்கு அருகில் உள்ள, 400 ஆண்டு கால பழைமை வாய்ந்த மெக்கா மசூதி வளா கத்தில், 2007 மே 18 அன்று ஒரு குண்டு வெடித்து 9 பேரைக் கொன்று, 60 பேரை படுகாயப்படுத்தியதற்கு பதினோரு ஆண்டு காலம் கழிந்த பிறகு, தேசிய புலனாய்வுத் துறையின் சிறப்பு நீதி மன்றம் ஒன்று, இந்த குண்டு வெடிப்புக்குப் பின் மூளையாக விளங்கி யவர் என்று கூறப்பட்ட அசீமானந்த் உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் குற்றமற்றவர்கள் என்று கூறி விடுதலை செய்து விட்டது. விடுதலை செய்யப்பட்ட மற்றவர் களில் தேவேந்திர குப்தா, லோகேஷ் சர்மா, பரத் மனோகர் ரத்தேஷ்வர், ராஜேந்திர சவுத்திரி ஆகியோரும் அடங்குவர். உள்நாட்டில் தயாரிக் கப்பட்ட ஒரு குண்டினைக் கொண்டு இந்த தாக்குதல் நடத்துவதற்கான சதித் திட்டம் தீட்டி, குண்டு வெடிப்பு நிகழ்த்தியதாக தேசிய புலனாய்வு அமைப்பு 10 பேர் மீது முதலில் குற்றம் சாட்டியது. அரசு தரப்பு பிராசிகியூஷன் தரப்பே தனது வழக்கைத் தோற்கடித்துக் கொண்டது போலவே இந்தத் தீர்ப்பி லிருந்து தோன்றுகிறது.

இந்திய குற்றவியல் நடைமுறை சட்ட 164 ஆவது பிரிவின் கீழ் டில்லியில் உள்ள ஒரு பெருநகர மாஜிஸ்டிரேட்டு முன் அசீமானந்த் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாத நம்பள்ளி நீதிமன்றம், குற்றத்தை மெய்ப்பிப்பதற்குப் போதிய சாட்சியம் இல்லை என்று கூறி அய்ந்து முக்கிய குற்றவாளிகளையும் விடுதலை செய்தது.

மேலும் வழக்கில் சாட்சியம் அளித்த 266 சாட்சியங்களில் 66 பேர் பிறழ் சாட்சி யங்களாக மாறிவிட்டனர். 2010 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய அசீமானந்தின் ஒப்புதல் வாக்குமூலம், இந்த வழக்கு அதன் நியாயமான முடிவை எட்டும்

என்ற நம்பிக்கையை அளித்திருந்தது. இந்து கோயில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களால் தான் மனம் புண்பட்டு இருந்தபடியால், மற்றவர்களுடன் சேர்ந்து திட்டமிட்டு, முஸ்லிம்களுக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்காக, ஹைதராபாத் குண்டு வெடிப்பு உள்ளிட்ட பல தாக்குதல்களை தான் நடத்தி யதாக அவர் ஒப்புக் கொண்டிருந்தார்.

சங்பரிவாரத்தின் பல தலைவர்களது ஆதரவு பெற்ற இந்துத்துவ தீவிரவாதக் குழுக்கள் பலவற்றைக் கொண்ட ஒரு வலைப் பின்னல் தொடர் அமைப்பு இருந்தது என்பதை அவர் வெளிப்படுத்தினார். ஹைதராபாத் மத்திய சிறையில் அப்போது இருந்த, மெக்கா மசூதியில் குண்டு வைத்த தீவிரவாதிகளுக்கு ஆர்டிஎக்ஸ் வெடி மருந்து கொண்டு வந்து கொடுத்தும், சிம் கார்டுகள் கொடுத்தும் உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்ட கலீம் என்ற தனது சக கைதியுடன் அசீமானந்த் சதி திட்டத்திலும், குண்டு வெடிப்பிலும் தனக்கு பங்கு இருப்பதை ஒப்புக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

கலீமின் கதையைக் கேட்ட பிறகு, வீட்டில் இருந்து தனக்கு வந்த உணவைத் தன்னுடன் பகிர்ந்து கொண்ட அவரது பெருந்தன்மை காரணமாக தான் செய்த குற்றத்துக்கு வருந்தி அதனை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனாலும், அசீமானந்த் இருந்த சிறையிலேயே கலீமும் இருந்தார் என்பதை தேசிய புலனாய்வுத் துறை முடிவாக மெய்ப்பிக்கவில்லை.

2011 ஆம் ஆண்டில் இதற்கு முன்பு தான் அளித்த வாக்குமூலங்களையெல்லாம் அசீமா னந்த் மறுத்தார். பெரும்பாலான வழக்குகளில், இந்திய குற்றவியல் நடைமுறை சட்ட 164 ஆவது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. என்றாலும், அது போன்றதொரு ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் தானே முன்வந்து தன்சொந்த விருப்பத்தின் பெயரில் தூக்கி எறிவது என்பது அரிதினும் அரிதான நிகழ்ச்சி யாகும் என்று நூலாசிரியரும், சமூகத் தொண்ட ருமான மனீஷா சேதி கூறினார். "2014 ஆம் ஆண்டில் மத்தியில் அரசு மாற்றம் ஏற்பட்டது முதற்கொண்டு, இந்த வழக்கு எந்த வழியில் முடியும் என்பது நன்றாகத் தெரி வதாகவே ஆகிவிட்டது" என்று கூறும் அவர், "தீவிரவாத வழக்குகளில் தீர்ப்பு வழங்கும்போது, நீதித் துறையில், குறிப்பாக கீழ்நிலை நீதிமன்றங்களில், எப்போதுமே அமைப்பு ரீதியிலான பாகுபாடு காட்டப்பட்டு வந் துள்ளது" என்றும் கூறினார். "ஆனால் அதற்கு முன்பிருந்த நீதிபதிகள், சாட்சியங்களை விசாரிக்கும் நடைமுறையை மட்டுமாவது செய்து முடித்திருந்தார்கள்" என்று மேலும் அவர் கூறினார்.

"தேச பாதுகாப்பு அடங்கியுள்ளது என்பதன் பெயரில், ஒரு சிறிய சாட்சியம் இருந்தால் கூட, குற்றமே இழைக்காத அப்பாவியும் கூட தண்டிக்கப்பட்டு விடுகிறார். ஆனால், இந்த வழக்கில் இருக்கும் சாட்சியத்தையே இல்லை என்று கூறி குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்" என்று மனீஷா சேதி கூறுகிறார்.

நீதிபதி லோயாவின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது என்ற செய்தி வெளி வந்த பிறகு, மெக்கா மசூதி குண்டு வெடிப்பு வழக்கின் தீர்ப்பு கவலை தரும் ஒன்றாகவே மாறி இருந்தது என்று அவர் கூறினார். பா.ஜ.க. தலைவர் அமீத் ஷா முக்கிய குற்றவாளியாக இருந்த ஷொராபுதீன் போலி என்கவுன்டர் வழக்கை விசாரித்து வந்த நீதிபதி லோயா 2014 இல் இறந்தது மர்மம் சூழ்ந்ததாக இருந்தது. மெக்கா மசூதி வழக்கில் மற்றொரு குற்றம் சாட்டப் பட்டவரான மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த, கொலை செய்யப்பட்ட, முன்னாள் ஆர்.எஸ்.எஸ். பிரசாரகர் சுனில் ஜோஷியின் மீதான மெக்கா மசூதி குண்டு வெடிப்பு வழக்கில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு, அவரது குடும்பத்தினர் அக்குற்றத்திற்காக அவரது நண்பர்களைப் பற்றி குறை கூறியபோதிலும், புலன் விசாரணை செய்யப்படாமலேயே இருந் தது. அவரது கொலைக்கான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டிருந் தாலோ அல்லது அவர் இப்போது உயிருடன் இருந்திருந்தாலோ, மெக்கா மசூதி குண்டு வெடிப்பு வழக்கு வேறொரு திசையில் பயணித் திருக்கக் கூடும் என்றும் அவர் உணர்ந்து கூறினார்.

"இந்த கதைக்கு முடிச்சு போன்ற ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், தேசிய

புலனாய்வுத் துறை சிறப்பு நீதிபதி, மெக்கா மசூதி வழக்கில் தீர்ப்பளித்த சில மணி நேரங்கள் கழித்து தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவுக்கு சொந்த காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மெக்கா மசூதி வழக்குடன் அது தொடர்புடையது என்ற ஊகம் பொதுமக்களிடம் பரவலாக நிலவியது. "அவர் ராஜினாமா செய்வதற்கு விரும்பியிருந் தால், அவர் மெக்கா மசூதி குண்டு வெடிப்பு வழக்கில் தீர்ப்பளித் திருக்கவே தேவையில்லை. உணர்ச்சி மிகுந்த வழக்கில் ஒரு முரண்பட்ட தீர்ப்பை வழங்கிய பிறகு அவர் ராஜினாமா செய்துள்ளார் என்ற உண்மை, மக்களின் மனதில் சந்தேகத்தின் விதைகளை விதைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார் என்ற பொருளைத் தருவதாகவே இருக்கிறது. எங்களை விட அத்தீர்ப்பின் மீது அந்த நீதிபதிதான் ஒரு பெரிய கேள்விக் குறியை எழுப்பியுள்ளார்.

வலதுசாரி அமைப்புகளிடமிருந்து அவருக்கு ஏராளமான அழுத்தமும் நெருக்கடியும் அளிக்கப்பட்டன என்ற பேச்சு அடிபடுகிறது. ஹைதராபாத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பிய பிறகும், அவர் தனது வீட்டை விட்டு வெளியேறவில்லை. இப்போது அவரது வீட்டுக்குக் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. லஞ்சம் வாங்கியதாக அவரைப் பற்றிய வதந்திப் பேச்சுகள் எழத் தொடங்கிவிட்டன. இவையெல்லாம் எதனைச் சுட்டிக் காட்டுகிறது?" என்று கேட்கும் லத்தீப் கான், இந்த மசூதி குண்டு வெடிப்பு வழக்கில் முன் எப்போதும் வேறு எந்த வழக்கிலும் இல்லாத அளவில் சூழ்நிலை நிலவுவதால், அவரது தீர்ப்பு உயர்நீதி மன்றத்தால் நிறுத்தி வைக்கப்படுமா என்பது ஆராயப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதற்கிடையில், நீதிபதி ரெட்டியின் ராஜி னாமாவை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதுடன், 15 நாட்கள் விடுப்பு கோரிய மனுவையும் நிராகரித்துவிட்டது. அடுத்த நாளன்றே அவர் பணியில் சேர்ந்துவிட்டார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மாணவர் பிரிவான அகில பாரத வித்யா பரிஷத்துடன் அரசு வழக்குரைஞர் என். அரிநாத் கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்புகள் பற்றி வெளிவந்து கொண்டிருக்கும் அறிக்கைகளும், இந்த வழக்கு சரியாகக் கையாளப்படவில்லை என்பது பற்றிய தீவிரமான கேள்விகளை எழுப்பு கின்றன. ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த வரும், பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்க மானவர் என்று கருதப்படுபவருமான, குற்றம் சாட்டப்பட்ட அசீமானந்துக்கு எதிராக முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக, அகில பாரதிய வித்யா பரீஷத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை, தேசிய புலனாய்வு அமைப்பு இந்த வழக்கில் வழக்குரைஞராக நியமித்திருக்குமா? இது அரசியல் மேட்ச் பிக்சிங் போலத் தோன்றவில்லையா?

காங்கிரசு கட்சி குற்றம் சாட்டும் இந்துத்துவ தீவிரவாதம் என்பது ஒரு கற்பனையிலான பொய் என்று பா.ஜ.க. எப்போதுமே கூறி வந்திருக்கிறது. தீவிரவாத தாக்குதல்களில் தங்களில் ஒருவர் மிகுந்த திறமை பெற்றவர் என்பதை மெய்ப்பித்துக் கொள் வதையும் அது விரும்பவில்லை. இத்தகைய சூழ்நிலை களில், தொடக்க காலம் முதல் இந்த வழக்கை ஒன்றுமில்லாததாக செய்து விடுவதற்கு தனது ஆற்றலால் என்னவெல்லாம் முடியுமோ அவற்றையெல்லாம் செய்து வந்த ஆளுங்கட்சி யான பா.ஜ.கட்சியின் அரசியல் செல்வாக்கின் மீது பெரும் பாதிப்பை இந்தத் தீர்ப்பு ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

விசாரணை அமைப்புகளின் பங்கு, நோக்கங்கள் மற்றும் அவற்றின் சுதந்திரம் பற்றிய கவலை தரும் பல கேள்விகளை இந்த வழக்கு விசாரணை நிகழ்ச்சிகள் எழுப்பின.

இந்து தீவிரவாதிகளால் மேற்கொள்ளப் பட்டவை என்று 2006 முதல் 2008 வரை நடைபெற்ற பல்வேறு தாக்குதல்கள் கருதப் பட்டன. மாலேகான் குண்டுவெடிப்பு (30 பேர் இறந்தனர்); சம்ஜவுதா எக்ஸ்பிரஸ் (60 பேர் இறந்தனர்); மெக்கா மசூதி (காவல்துறை துப்பாக்கி சூட்டில் இறந்தவர்கள் உள்ளிட்ட 15 பேர் இறந்தனர்; அஜ்மீர் தர்கா (3 பேர் இறந்தனர்); மாலேகான் மற்றும் மோடேசாவில் வெடித்த இரட்டை வெடிகுண்டு (7 பேர் இறந்தனர்); சிறுபான்மையின மக்களுக்கு எதிரான பலமான உணர்வுகள், இந்து

கோயில்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் ஏற்பட்ட கோபமே இத்தகைய அனைத்து வழக்குகளிலும் இந்து தீவிரவாத அமைப்புகள், இணைப்புகளாக செயல்படக் காரணமாக அமைந்தன என்று தேசிய புலனாய்வு அமைப்பு கூறுகிறது. செயல்பாட்டின் தன்மை மற்றும் பயன்படுத்தப் பட்ட வெடிப் பொருள்களின் அடிப்படையில் அஜ்மீர், மெக்கா மசூதி, மாலேகான் குண்டு வெடிப்புகளிடையே ஒரு பொதுவான தொடர்பு இருந்தது காணப்பட்டதாக மத்திய குற்றவியல் புலனாய்வுத் துறையின் முன்னாள் தலைவர் அஸ்வின் குமார் கூறுகிறார்.





இத்தகைய வழக்குகளில் அனைத்திலும் முக்கிய குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்ட சந்தீப் டாங்கேயும், ராம்ஜி கல்சரங் காவும் புலனாய்வுத் துறை அமைப்புகளின் கைகளில் சிக்காமல் தப்பித்துக் கொண்டே வந்தனர். 2015 ஆம் ஆண்டில் மோடாசா வெடிகுண்டு வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பு மூடிவிட்ட போது, அஜ்மிர் குண்டுவெடிப்பு வழக்கில் ஒரு சிலருக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டிருந்தது. 2008 செப்டம்பரில் மகாராஷ்டிர மாநில தீவிரவாத எதிர்ப்புப் படையின் தலைவராக இருந்த ஹேமந்த் கர்கரே (பின்னர் 2008 இல் நடைபெற்ற மும்பை தீவிரவாத தாக்குதலின் போது இவர் கொல்லப்பட்டார்.) மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கின் குற்றவாளி சாத்வி பிரக்யா சிங் தாகூர்தான் என்று இறுதி முடிவெடுத்தார். ஆனால், 2016 இல் தேசிய புலனாய்வு அமைப்பு இந்த வழக்கில் சாத்வி பிரக்யா சிங்குக்கு தொடர்பு இல்லை என்று கூறி வழக்கில் இருந்து அவரை விடுவித்து விட்டது.

"இன்றுவரை 21 தேசிய புலனாய்வு அமைப்பின் வழக்குகள் முடிவுக்கு வந்துள்ளன. இரண்டு வழக்குகளில் மட்டும் குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டனர். இந்த இரண்டு வழக்குகளும் இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள் மீதான வழக்குகள் ஆகும். பெரும்பாலான வழக்குகளின் மய்யத்தில் இருந்தவர் அசீமானந்த் என்று அழைக்கப்படும் நபா குமார் சர்கார் என்பவரே ஆவார். மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபோது, உடனே 2014 ஆகஸ்ட் மாதத்தில் பஞ்சாப், அரியானா உயர்நீதி மன்றத்தால் இவருக்கு பிணை வழங்கப் பட்டது."

"கடந்த ஆண்டு மார்ச் 8 அன்று அஜ்மிர் குண்டு வெடிப்பு வழக்கில் அசீமா னந்தையும் மற்றும் குற்றம் சாட் டப்பட்ட ஆறு பேரை யும் ஜெய்ப்பூர் சிறப்பு நீதி மன்றம் விடுதலை செய்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதத் தில் அய்தரா பாத் நீதிமன்றம் ஒன்று அசீமானந்துக்கு பிணை வழங்கியது. மற்ற அய்ந்து பேருடன் சேர்த்து இவர் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த சம்ஜூதா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு வழக்கு மட்டும் இப்போதும் நிலுவையில் உள்ளது. அடுத்த பொதுத் தேர்தலில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வர முடியாமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதால், தங்கள் ஆட்களின் மீது உள்ள குற்றச்சாட்டுகள் அனைத்திலிருந்தும் அவர்களை விடுவித்து வெளியே கொண்டு வருவதற்கு அனைத்து வகைகளிலும் அவர்கள் முயன்று வருகின்றனர்" என்று லத்தீப் கான் கூறுகிறார்.

2015 ஆம் ஆண்டில் மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் சிறப்பு அரசு வழக்குரைஞர் ரோஹினி சலியன் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வழக்குகளில் மென்மையாக நடந்து கொள்ளும்படி தனது தேசிய புலனாய்வு அமைப்பு மேலதிகாரிகளிடமிருந்து எவ்வாறு தகவல் வந்தது என்பதை வெளிப்படுத்தினார். நீதி நடை முறையையே சிதைக்கும் வகையில் தேசிய புலனாய்வு அமைப்பு நடந்து கொண்டதற்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றினைத் தொடங்குவதற்காக பிரமாண பத்திரம் ஒன்றை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இது பிராசிகியூஷன் தரப்பு வழக்கை பலவீனமானதாக ஆக்கிவிட்டது. நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர், இந்து தீவிரவாதிகளின் பெரிய திட்டங் களை எல்லாம் வெளிப்படுத்தினார். "உண்மை யான கதை என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மத்திய ஹிந்து ராஷ்டிரா அவர்களுக்கு வேண்டும். இந்திய அரசமைப்பு சட்டத்தை அவர்கள் மதிப்ப தில்லை. அவர்களது கொடியையும் உருவாக்கி வைத்துள்ளனர். ஆயுதம் ஏந்திய அவர்களது பாரதமாதாவையும் அவர்கள் தயார் செய்து வைத்துள்ளனர்" என்று அவர் கூறினார். மெக்கா மசூதி உள்ளிட்ட இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு எதிரான வழக்குகள் எவ்வாறு முடியும் என்பதை அவர் முன்கூட்டியே உணர்ந்து கூறியிருக்கிறார்.

மெக்கா மசூதியில் 10,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்தபோது குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. கைகால்கள் சுத்தம் செய்யும் குளத்துக்கு அருகே வெடிக்காத வெடிகுண்டு ஒன்று பின்னர் கண்டெடுக்கப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதத்தில், மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கின் மாலேகான் பகுதியில் குண்டு வெடித்தது போன்ற அதே நிகழ்ச்சிதான் இங்கு மெக்கா மசூதியிலும் நடைபெற்றது.

மாலேகான் கல்லறையில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த போது வெடித்த குண்டினால் 38 பேர் இறந்தனர். படுகாயம் அடைந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைத் தீவிர மாக செய்து கொண்டிருந்தபோது, மசூதியில் இருந்து கூட்ட நெரிசலில் மக்கள் வெளியேறிக்



கொண்டிருந்தபோது, காவல்துறை அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 6 பேர் உயிரிழந்தனர்; 21 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த குண்டு வெடிப்புக்குப் பிறகு, நகரத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 300 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 39 பேர் மீது நான்கு வெவ்வேறு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டது. ஓராண்டு காலத்திற்கு மேல் காவலில் கழித்த அவர்கள் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் கடுமையாக சித்திரவதை செய்யப் பட்டுள்ளனர்.

சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தால் நியமிக்கப்பட்ட, சில காவல் துறை அதிகாரிகள் விசாரணைக் கைதிகள் மீது இழைத்த சித்திரவதைகளைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை ஒன்றை அளிப்பதற்காக வழக்குரைஞர் ரவிச்சந்திரன் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு விசாரணைக் குழுவின் அறிக்கையில் சில காவல்துறை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வில்லை. இந்தக் காவல்துறை அதிகாரிகள் அனைவரும் பின்னர் பதவி உயர்வு பெற்று சென்றுவிட்டனர். பாதிக்கப்பட்டவர் களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்தபோது, அப்பாவி இளைஞர்கள் காவல் துறையினரால் சித்திரவதை செய்யப்பட்டதை ஆந்திர மாநில அரசு ஒப்புக் கொண்டு, அதற்காக மன்னிப்பும் கோரியது.

விசாரணை தொடங்கப்பட்ட நாள் முதல் விசாரணை அரைகுறையாக மேற்கொள்ளப் பட்டது. குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன் ஹைதராபாத் காவல்துறை அந்த வழக்கைக் கையாண்டது. கலவரக் கும்பல் ஒன்று அருகில் இருந்த பெட்ரோல் பங்கிற்கு தீ வைக்க முயன்

றது என்று கூறி, துப்பாக்கிச் சூடு மேற்கொள் ளப்பட்டதை காவல்துறை நியாயப்படுத்த முயன்றது. கலவரக் கும்பல் பற்றிய இந்தக் குற்றச்சாட்டு தவறானது என்று உண்மை அறியும் அறிக்கைகள் மெய்ப்பித்துள்ளன. "பெட்ரோல் பங்கும், அருகில் இருந்த வீடுகளும், வியாபார நிறுவனங்களும் முஸ்லிம்களுக்கு சொந்தமானவையாகும்.

அவர்களது உடமைகளை அவர்களே தீயிட்டுக் கொளுத்துவார்களா? என்று லத்தீப் கான் கேட்கிறார். அப்படியானால், எந்த ஒரு நியாயமான காரணமும் இன்றி காவல்துறை இரண்டு முதல் தகவல் அறிக் கைகளை பதிவு செய்துள்ளது. வெடித்த குண்டு ஒன்றுக்கும், வெடிக்காத குண்டு ஒன்றுக்கும் முதல் தகவல் அறிக்கைகள். அய்ந்து நிமிடத்திற்குள் ஹர்கத்-ஜிஹாட்-அல்-இஸ்லாமி என்ற அமைப்புடன் தொடர் புடைய ஷஹீத் பிலால் தான் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய குற்றவாளி என்று தொலைக்காட்சியினர் முன் நிறுத்தப்படு கிறான். பின்னர் அந்த பிலால் ஒரு போலி என்கவுன்ட்டரில் கொல்லப் பட்டுவிட்டான்.

"மத்திய புலனாய்வுத் துறை இந்த வழக்கு விசாரணையை ஏற்றுக் கொண்டது. ஆனால் அதற்கு குண்டு வெடிப்பு பற்றிய முதல் தகவல் அறிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டது. வெடிக் காத குண்டின் முதல் தகவல் அறிக்கையை ஹைதராபாத் காவல் துறை தன்னிடமே வைத்துக் கொண்டது. அத்துடன் ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை நியமித்தும், பின்னர் சிறப்பு விசாரணை செல் ஒன்றை அமைத்தும், இந்த வழக்கை ஒன்றுமில்லாமல் செய்வதற்கு என்னவெல்லாம் தேவையோ அவற்றையெல் லாம் காவல் துறை செய்து வழக்கை நீர்த்துப் போகச் செய்தது. நாள் செல்லச் செல்ல அப்பாவிகள் எல்லாம் இலக்காக்கப்பட்டனர். குற்ற மிழைத்தவர்கள் தப்பித்துச் சென்று சாட்சியங்களை எல்லாம் அழித்துவிடுவதற்கு போதிய கால அவகாசத்தை குற்றவாளிகளுக்கு சாதகமாக காவல்துறை அளித்தது" என்று லத்தீப் கான் கூறுகிறார்.

தேசிய புலன்விசாரணை அமைப்பு இந்த வழக்கை ஏற்றுக் கொண்டபோது, துவக்கத்தில் அது நன்றாகவே பணியாற்றியது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் விசாரணை அமைப்பும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. தேசிய புலனாய்வுத் துறை அமைப்பின் மேம்போக்கான, அலட்சியம் நிறைந்த அணுகுமுறை காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வதைத் தவிர நீதிமன்றத்துக்கு வேறு வழியில்லை என்று டில்லி உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ஷபாப் அஹகமத் கூறினார். "தேசிய புலனாய்வு அமைப்பு பிராசிகியூஷன் கதையை ஆதரித்தனர். ஆனால் இழப்புக் கேடாக, எந்த ஒரு குற்றவியல் வழக்கிலும் எதிரிடையாக சாட்சியம் சொல்பவர்களின் பட்டியல் ஒன்று இருக்கும். அவர்கள் வழக்கின் ஏதேனும் ஓரி டத்தில் சாட்சியத்தின் பொய்மையை வெளிப் படுத்தி விடுவார்கள். அதனால் நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்ட வருக்கு அளிக்க நேர்கிறது. சந்தேகத்துக்கு இடமில்லாமல் குற்றத்தை பிராசிகியூஷன் தரப்பில் மெய்ப் பிக்கத் தவறிவிட்டால், எந்த ஒரு நீதிமன்ற மும், ஒரே மாதிரியாக, சாட்சியம் இல்லை என்று கூறி குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து விடும்" என்று அவர் கூறினார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து தேசிய புலனாய்வு அமைப்பு மேல் முறையீட்டுக்கு சட்டப்படி செல்ல முடியும். ஆனால், முந் தைய இந்துத்துவ தீவிரவாத வழக்குகளில் மேல்முறையீடு செய்யப்பட்ட அனுபவம் காரணமாக, இந்த மெக்கா மசூதி வெடிகுண்டு வழக்கில் மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்பே இல்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் மேல் முறை யீடு செய்யலாம். ஆனால் தற்போது அந்த சமூகமே அதிர்ச்சிக்கு உள்ளாகி நிற்கிறது. "நீதிமன்றத் தீர்ப்பு முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கை யையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி சிதைத்து விட்டது. இந்த வழக்கில் நீதித் துறை தனது மனதை செலுத்தி நீதி வழங்கத் தவறிவிட்டது என்பதால், இந்த சமூகத்தி னரிடையே அநீதி இழைக்கப்பட்டுவிட்டது போன்ற உணர்வே நிலவுகிறது என்று சிறுபான்மையினரின் சமூக உரிமைகளுக்கான குழு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நன்றி: "தி ஃப்ரண்ட் லைன்" 11-05-2018
தமிழில்: த.க.பாலகிருட்டிணன்
நன்றி: விடுதலை

# இஸ்லாம், அரசியல், அதிகாரம்

தொடர் 4

# அரபுலக எழுச்சி

இஸ்லாமிய மாண்புகளின் அடிப்படையில் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதும் ஒழுக்க விழுமியங்கள், சுய ஒழுக்கம் இவற்றை கொண்ட ஓர் உண்மையான முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்குவதுமே முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் அடிப்படை நோக்கங்களாக இருந்தது. இவ்வியக்கத்தை ஆரம்பித்த நேரத்தில் இமாம் பன்னா இப்படிக் கூறினார்.

"தங்களுடைய வாழ்கையை தியாகம் செய்ய முடிந்தவர்களால் மட்டுமே இவ்வியக்கத்தில் இணைந்து பணியாற்ற முடியும்".

இமாம் பன்னாவின் தலைமையின் கீழ் ஒரு சக்தி வாய்ந்த அரசியல் மற்றும் சமூக இயக்கமாக உருவெடுத்தது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம். இவ்வியக்கத்தின் வழி, எகிப்தில் இஸ்லாமிய கட்டளைகளை நிலை நிறுத்திட வேண்டும் என்றார். மேற்கு நவீனத் துவவாதிகளாலும் இஸ்லாமிய நவீனத்துவவாதிகளாலும் பரப்பப்பட்ட மதசார்பின்மையை ஒரு சாபம் என்றே அவர் கருதினார். இமாம் பன்னாவை பொறுத்தவரை இஸ்லாம் என்பது ஒரு நாகரீகம், வாழ்க்கை வழிமுறை, சித்தாந்தம்.

ஒரு சமயம் தன்னை சுற்றியிருந்த முஜாஹிதீன்களிடம் இப்படி உரையாற்றினார். "அல்லாஹ்வே நமது குறிக்கோள்; நபி (ஸல்) அவர்களே நமது தலைவர்; குர்ஆனே நமது அரசியலமைப்பு சட்டம்."

இஸ்லாமிய புரட்சிக்கும், முழுமையான மாற்றத்திற்கு வித்திடுவதிலும் இஸ்லாமிய ஆட்சியின் சின்னமாகவும் பள்ளிவாசல்கள் விளங்க வேண்டும் என்று கருதினார். ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது என்றார்.

இமாம் பன்னாவின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவந்த போது, தங்களின் அரசியல் சித்தாந்தங்களை நடைமுறைப் படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் அரசோடு எந்த மோதல் போக்கையும் கொண்டதில்லை. அவரின் தலைமையில் அவ்வியக்கம் அரசியல் அதிகாரத்தை அடைவதில் அதிக ஈடுபாடு காட்டிடாமல் சமூகப்பணி, கல்விப் பணிகளிலே அதிகமாக ஈடுபட்டு வந்தது.

*1949*-இல் இமாம் பன்னாவின் மறைவிற்கு பின், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஆசானாக சய்யித் குதுப் விளங்கினார். அதன் பின்னரே அரசோடு மோதல் போக்கு ஆரம்பித்தது. ஆரம்பத்தில், இலக்கிய விமர்சகராகவும், பத்திரிக்கையாளராகவும் பணியை தொடர்ந்த குதுப் அவர்கள், 20 ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த இஸ்லாமிய கொள்கை வாதியாக தன்னை மாற்றிக் கொண்டார்.



இமாம் பன்னா

இஸ்லாத்தின் அடிப்படையில் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் விழுமியங்களை உள்ளடக்கிய ஓர் இஸ்லாமிய அரசை நிறுவுவதும், அந்த அரசு இறை ஆட்சியின் அடிப்படையில் வழிநடத்தப்படுவதாகவும் ஷரியாவை நடைமுறைபடுத்துவதில் முன் மாதிரியாகவும் விளங்கிட வேண்டும் என்பதே குதுப் அவர்களின் இலட்சியமாக இருந்தது.

எகிப்திலும், முஸ்லிம் உலகின் இதர பாகங்களிலும் இயங்கும் இஸ்லாமிய இயக்கங்கள் குதுப்பின் எழுத்துகளையும், நூல்களையும் தங்கள் இயக்கத்தின் கையேடாக பயன் படுத்துகின்றன. இஸ்லாமிய கட்டமைப்பை மீட்டுருவாக்கம் செய்தல் தொடர்பாக வெளி வந்த அறிஞர்கள், அறிவு ஜீவிகள் எழுத்துகளின் மத்தியில் தனக்கென்று ஓர் இடத்தை பிடித்தார் குதுப் அவர்கள்.

எகிப்தியர்களும், அரபு அறிவு ஜீவிகளும் இஸ்லாத்தை ஓர் அரசியல் கொள்கையாக புரிந்து கொள்ளவும், அவ்வாறே அதை நடைமுறைப்படுத்தவும் முயன்றதில் குதுப்பின் பங்கை புரிந்து கொள்ளலாம். (Armstrong- A History of God)

நவீனமயமாக்கம் என்ற பெயரில் மேற்கு உலகம் தங்களுடைய கலாச்சாரம், அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை மற்ற நாடுகளின் மீது திணிக்கின்றது என்றே குதுப் கருதினார்.




எகிப்தில் *1952*- இல் ஏற்பட்ட சுதந்திர அதிகாரிகள் புரட்சியில் (Free Officer revolt) குதுப் முக்கிய பங்கு வகித்தார். மெய்யான புரட்சி இப்பொழுது தான் ஆரம்பித்துள்ளது. மக்கள் இனிமேல் சும்மா இருந்து விடக் கூடாது. மன்னராட்சியை அகற்றுவது மட்டும் புரட்சியின் நோக்கம் அல்ல. எகிப்திய சமூகங்கள் இஸ்லாமிய அடிப்படையில் வார்த்தெடுக்கப்படுவதும், இஸ்லாத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மீண்டும் கொண்டு வருவதே அதன் நோக்கம் என்று குதுப் கூறினார்.

*1953*- இல் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற தொடங்கிய பின் சுதந்திர அதிகாரிகள் உடனான நெருக்கத்தை குதுப் குறைத்து கொண்டார். நான் *1953*- இல் தான் பிறந்தேன் என்று வெளிப்படையாகவே குதுப் கூறினார்.

எகிப்து அரபுக்கள் எதிர் நோக்கும் பிரச்னைகளுக்கு குர்ஆனில் தீர்வை தேடினார் குதுப்.

*1960* மற்றும் *1970* களில் அரபு அரசியல் களத்தில் நாசரிசம் (நாசரின் கொள்கைகள்) வளர்ச்சி கண்ட நேரத்தில், அவர்களின் சோசலிச கொள்கைகளுக்கு முதல் எதிரியாக குதுப் உருவெடுத்தார். நாசரின் சோசலிச கொள்கைக்கு மாற்றாக இஸ்லாத்தை முன் வைத்த குதுப் இப்படிக் கூறினார்

"ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் நம்மை இணைக்கும் ஒரே காரணி இஸ்லாம் மட்டுமே. ஆனால் நம்மில் சிலர் அரபு தேசியவாதம் என்ற குடையின் கீழ் அணி திரள விரும்புகின்றனர் (இஸ்லாத்தை விட). இஸ்லாமிய அரசை நிறுவுவதற்கு ஒரு வேளை அரபு தேசிய வாதம் உதவும் என்று நீங்கள் நினைத்தால் அரபு தேசியவாதத்திற்கும் இஸ்லாத்திற்கும் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை தான்."

இஸ்லாமும் அமெரிக்காவும் என்ற குதுப் எழுதிய கட்டுரையில் அமெரிக்காவை இப்படி சாடினார். " கம்யூனிசத்தை எதிர்கொள்வதற்கு இஸ்லாத்தை பக்க துணையாக அமெரிக்கா பயன்படுத்தி கொள்கிறது."

இஸ்லாம் அரசாள வேண்டும் என்று அமெரிக்கர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் இஸ்லாம் அரசாளும் போது, அது யார் பகைவர்கள் என்பதை மக்களுக்கு முன் இனம் காட்டி விடும் என்பது அவர்களுக்கு தெரியும். கம்யூனிசமும், காலனியலிசமும் இஸ்லாத்தின் எதிரிகளே. அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் மத்திய கிழக்கில் அமெரிக்கர்களை தூக்கி பிடிக்கும் இஸ்லாமே (American Brand of Islam) வரவேண்டும் என்று விரும்புகின்றனர் என்று குதுப் கருதினார்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

- அபூ ஹாசின்



# இந்துத்துவாவை விமர்சிப்பவர்களை கொலை செய்ய சதி!

பத்திரிகையாளரும், சமூக ஆர்வலருமான கௌரி லங்கேஷ் கொலை செய்யப் பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியாக கைது செய்யப்பட்டுள்ளார் அமோல்கேல். இவர் பல இந்துத்துவா அமைப்புகளுடன் தொடர்பில் இருந்தவர்.

கோவா, கர்நாடகா எல்லையில் வைத்து 2018 மே 21-ம் தேதி காவல்துறை மூன்று பேரை கைது செய்துள்ளது. இதில் அமோல் கேலும் ஒருவர். இவர் புனே நகரின் மாநிக் காலனியில் அக்ஷய் பிளாஸாவில் வசித்து வந்துள்ளார். அவருடைய அக்கம் பக்கத்தில் வசித்து வருபவர்கள் அவர் ஒரு எளிமையான மனிதர். எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தவர் எப்படி இதுபோன்ற கொடூர குற்றங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதை நம்ப முடியவில்லை என்கின்றனர். அவர் எப்போதுமே சனாதன தர்மத்தை பற்றியே பேசுவார். அதுவே வாழ்க்கையின் வழி என்பார். (Source : TOI, June-4, 2018)

அமோல் கேலிடம் இருந்து டைரி ஒன்றையும் கைப்பற்றியுள்ளார். இதில் கர்நாடகாவை சார்ந்த எட்டு பேரின் பெயர்கள் கொலை பட்டியலில் இடம் பெற்றுள்ளது. கௌரி லங்கேஷின் பெயரும் அதில் உண்டு.

பேராசிரியர் பகவான் மற்றும் நிடுமாமிடி மடத்தின் குரு வீரபத்ரா சென்னமல்லா ஆகியோரின் பெயர்களும் அந்த டைரி குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளது.

வீரபத்ரா சென்னமல்லாவின் வீட்டிற்கு முன் பாதுகாப்பிற்காக காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மூன்று நாட்களாக நம்பர் பிளேட் இல்லாத ஸ்கூட்டர் ஒன்று அடிக்கடி இப்பகுதியை கடந்துச் செல்வதாக அந்த காவலர் தகவல் கொடுத்துள்ளார்.

கௌரி லங்கேஷின் கொலைக்குப் பின்னர், இந்துத்துவாவை விமர்சிப்பவர்கள், மூட நம்பிக்கைக்கு எதிரான மசோதாவுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மூட நம்பிக்கைக்கு எதிரான மசோதா உருவாகவும் அதற்கு ஆதரவாகவும் செயல்பட்டு வந்தவர் விரபத்ரா சென்னமல்லா. இதனால் இவருக்கு மிரட்டல்கள் அதிகரித்த

வண்ணம் உள்ளன.

"நான் ஒரு சந்நியாசி, மிரட்டல்களோ அல்லது பாதுகாப்புகளோ என்னை பாதிக்கப் போவதில்லை. என்னிடத்தில் எந்த மாற்றத் தையும் கொண்டு வரப்போவதில்லை" என்று கூறியுள்ளார் விரபத்ரா சென்னமல்ல.


விரபத்ரா சென்னமல்ல

வழக்கறிஞரான சி.எஸ்.துவாரக்நாத்தும் அந்த கொலை பட்டியில் உண்டு. ஒரு சமயம் கர்நாடாக செய்தி தொலைக்காட்சிகளில் அதிகமாக பங்கேற்று வந்த இவர், தற்போது இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதை தவிர்த்து வருகிறார்.

*2018* பிப்ரவரி-யில் பேராசிரியர் பகவானை கொலை செய்ய நடந்த முயற்சி, காவல் துறையால் தோற்கடிக்கப்பப்டது. இன்னும் அவருடைய வீட்டின் முன் பாதுகாப்பிற்காக காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காவல் துறையின் அறிவுரையின் பேரில் அவர் பொதுக் கூட்டங்களில் பங்கேற்பதை குறைத்துக் கொண்டுள்ளார். நான் முழுமை யாக பின் வாங்கவில்லை, என்னுடைய பணியை தொடர்வேன் என்று பகவான் கூறியுள்ளார்.

நீலா பட்டில் - பேராசிரியர் சந்திரசேகர் பட்டேலின் மனைவி, எழுத்தாளர், கல்புர்கி யின் நீண்டகால நண்பர் ஆவார்.

கல்புர்கி கொலை செய்யப்பட்ட பின் அரசின் விருதை திரும்பக் கொடுத்தவர்களின் முதலாமானவர். இவர் பெயரும் இந்த எட்டு பேர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதத்தைப் பற்றியோ, வகுப்பு வாதத்தை பற்றியோ இப்போது எதுவும் பேச வேண்டாம் என என்னுடைய உறவினர்கள் அறிவுறுத்துகின்றனர் என்கிறார் நீலா பட்டில்

தற்போது வெளிவந்துள்ள தகவல்கள் தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் கவலையில் ஆழ்த்தியுள்ளன என்கிறார் துவாரக் நாத்தின் மனைவியான கோமளா துவாரக்நாத். (The Hindu, June-23, 2018)

படுகொலைகள் மூலம் இந்துத்துவாவை விமர்சிப்பவர்களை மௌனமாக்குவதே இந்துத்துவா பாசிஸ்ட்டுகளின் திட்டம். அவர்களால் சர்வ சாதாரணமாக இயங்க முடிகிறது என்பதே இப்படுகொலைகள் நமக்கு உணர்த்துகின்றன.

- அபூஹாசின்





# பா.ஜ.க. அரசின் குருகுல கல்வி நடைமுறை அமல்..!

## சமஸ்கிருதம் படித்தால் 15-ம் வயதில் 10-ம் வகுப்பு எழுதலாம் புதுவிதி..!!

குருகுலக் கல்வியை பலப்படுத்துவது, பரவலாக்குவது தொடர்பாக உஜ்ஜயனியில் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற RSS நடத்திய மாநாட்டு முடிவுகளை மத்திய பா.ஜ.க. அரசு நடைமுறைப்படுத்திட தொடங்கியுள்ளது.

முதல் நடவடிக்கையாக குருகுல கல்விச் சாலையில் படித்த மாணவர்கள் 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பில் சேருவதற்கு தகுதி படைத்தவர்களாக சான்றிதழ் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 15 வயது நிரம்பிய எந்தவொரு மாணவரும் தனக்கு சமஸ்கிருதம் படிக்க, எழுதிடத் தெரியும் என தற்சான்று ( வேறு சான்று எதுவும் தேவையில்லை ) அளித்தால் 10 ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய திறந்த பள்ளி நிறுவனம் (National Institute of open schooling) 10ஆம் வகுப்பில் சேர அனுமதி அளித்துவிடும். அதற்கான அனுமதி சான்று பெறுவதற்கு முன்பாக மாணவர்கள் ஐந்து பாடங்களில் தேர்வு எழுதிட வேண்டும்.

அவை,

1) வேத அத்தியாயனம் (வேதம் கற்றல்)

2) பாரதீய தரிசனம் (இந்தியச் சிந்தனை)

3) சமஸ்கிருத வியாகரன (சமஸ்கிருத இலக்கணம்)

4) சமஸ்கிருத சாகித்ய (சமஸ்கிருத புலமை)

5) சமஸ்கிருத மொழி

ஆகிய ஐந்து பாடங்களில் தேர்வு எழுதி குறைந்தது 33% விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் 10ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வியினை தொடர சான்று அளிக்கப்படும்.

10ஆம் வகுப்பிற்கு முன்னர் முறையான கல்வித் திட்டத்தில் பிற மாணவர்கள் பயின்ற பல்வேறு பாடங்களான அறிவியல், கணிதம், வரலாறு, பூகோளம் பற்றி குருகுல கல்விக் கூடங்களில் பயின்ற மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இந்தியாவின் அறிவுப் பாரம்பரியத்தினை (Indian Knowledge Tradition) வளர்ப்பதாக கூறும் இந்த மத்திய அரசுத் திட்டம் உண்மையில் அடிப்படைக் கல்வி பயிலாத மாணவர்களும் 10ஆம் வகுப்பில் சேர்ந்திட சமஸ்கிருத கல்வி பயின்றிருந்தால் போதுமானது எனக் கூறுகிறது.

1952-இல் சி.இராஜகோபாலாச்சாரியார் முதல்வராக இருந்த பொழுது கொண்டு வந்த குலக்கல்வி திட்டத்தை விட மிக, மிக மோசமான பார்ப்பனரல்லாத பிள்ளைகளை மீளாப்படுகுழியில் தள்ளும் திட்டமாகும்! உஷார்... உஷார்...

சமஸ்கிருத திணிப்பினை முன்னிறுத்தி கல்வியின் தரம் சீரழிக்கப்படுவதற்கு மத்திய அரசால் இந்த புதிய கல்வித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் பயின்ற மாணவர்கள் குருகுலக் கல்வி முறையிலோ அல்லது அஞ்சல் வழிப் பள்ளியிலோ பயின்ற மாணவர்கள் முறையான கல்வித் திட்டத்தில் பள்ளிப் படிப்பினை முடித்திட ஏதுவான ஒரு வழிமுறையாக இந்த புதிய திட்டம் கொண்டு வரப்படுகிறது. கல்வியின் தரம் பற்றி கவலை இல்லை.

சமஸ்கிருதம் தெரிந்தால் போதும் எனும் சமஸ்கிருத கலாச்சாரத்தை திணிக்கும் நோக்கில் இந்த குருகுலக் கல்வி கொண்டு வரப்படுகிறது.

சமஸ்கிருத ஆதிக்க அணுகுமுறையில் RSS வலியுறுத்தும் பார்பனீய வருணாசிரம முறையை, குருகுலக் கல்வி என்ற போர்வையில் குருகுலக் கல்வித் திட்டத்தை கொண்டு வர முயற்சிக்கும், மத்திய பா.ஜ.க. ஆட்சியின் முயற்சியை அதன் தொடக்கத்திலேயே முறியடிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் கடமையுமாகும்.




மத்தியில் ஆட்சிக்கு வருவதற்கு முன் 2 லட்சம் பேருக்கு வேலை என கூறி ஆட்சிக்கு வந்தார்கள். இன்று 80 லட்சத்துக்கும் அதிகமான பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை இல்லை.

23 மருத்துவக் கல்லூரி உள்ள தமிழ்நாட்டில் தமிழர்கள் படிக்க முடியாமல் தடுக்க நீட் தேர்வை கொண்டு வந்தார்கள். இப்பொழுது சமஸ்கிருதம் படித்தால் போதும் 15 வயதில் 10 ஆம் வகுப்பு படிக்கலாம்.

நாளை அரசு வேலைகளில் சேர சமஸ்கிருதம் பாடம் படித்திருப்பது அவசியம் என்று கூட கூறுவார்கள்.

இஸ்லாமியர்கள் பேத மொழியான சமஸ்கிருதத்தை படிக்க நிர்பந்தப் படுத்துவார்கள். எனவே இதை எதிர்த்து பெரிய அளவில் போராட வேண்டியதும் அவசியமாகும்.

- முகமது இக்பால்

# நூல் மதிப்புரை

நூல் : ஹதீஸ் மறுப்பின் விபரீதங்கள்


வெளியீடு : ஸலாமத் பதிப்பகம்

பக்கங்கள் : 112

விலை : 85 ரூபாய்

ஆசிரியர் : பேரறிஞர் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி

மொழி பெயர்த்தவர் : பேராசிரியர் அபுல் ஹசன் ஃபாஸி




அகீதா எனும் கொள்கை நம்பிக்கை, ஃபிக்ஹ் எனும் சட்டத்துறை, அக்லாக் எனும் நற்பண்புகள் ஆகியவை இஸ்லாமிய மார்க்கத்தின் முக்கியமான அடிப்படைகள்.

இம்மூன்றும் முஸ்லிம்களாலேயே தவறாகப் புரிந்து கொள்ளப்படும் நிலை அண்மைக் காலமாக அதிகரித்துவிட்டது. யார் வேண்டுமானாலும் புகுந்து கருத்துக் கூறலாம் எனுமளவுக்கு அவை வேட்டைக் காடுகளாக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த சன்மார்க்கத்தினுடைய மூலாதாரங்களின் மொழியாம் அரபு மொழியைக் கற்றறியாதவர்கள் கூட மேதாவித்தனமாய் பேசி வருகின்றனர்.

இந்தச் சூழலில் சுன்னா எனும் நபிமொழியும், நபிவழியும் பெரும் சோதனைகளைச் சந்தித்து வருகிறது.

இறைவேதமாம் குர்ஆனை சரியான திசையில் புரிந்து கொள்ள நமக்கு உதவியாக இருப்பவற்றில் முதலிடம் பெறுவது சுன்னாவே.

இதை அறிவு ஏற்பவை, அறிவு நிராகரிப்பவை என இரண்டாகப் பிரிப்பது குர்ஆனிடம் இருந்து விலகிச் செல்வதின் முதல்படி. எவையெல்லாம் அறிவுக்கு முரணான சுன்னா என்பதைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து நிராகரிக்கின்றனர் சிலர்.

யாருடைய அறிவு சுன்னாவையே நிராகரிக்கும் திறனுள்ள அறிவு என்பதை எப்படித் தீர்மானிக்கிறார்கள்? என்பது புதிராகவே நீடிக்கின்றது.

இந்தச் சூழலில் குழம்பிக் கிடப்போருக்கு வழிகாட்ட விரும்பியிருக்கிறார் எழுத்தாளர் அபுல் ஹசன் ஃபாஸி.

இதற்காக கர்ளாவியின் " அல் மத்கலு ஃபீ மஅரிஃபதில் இஸ்லாம்" எனும் நூலின் ஒரு பகுதியையும், கர்ளாவியின் ஃபத்வாக்களில் சிலவற்றையும் மொழிபெயர்த்து, நூல் வெளியாகும் தமிழகத்தின் சூழலை கருத்தில் கொண்டு தேவையான சில அம்சங்களை இணைத்து இந்நூலைத் தந்துள்ளார்.

இஸ்லாமிய சட்டத்துறை, அதன் சிறப்பம்சங்கள், குர்ஆனுக்கு சுன்னா முரண்படுமா? ஹதீஸ்களை மறுப்பதால் ஏற்படும் விபரீதங்கள் ஆகியனவற்றை போதுமான அளவுக்கு நூல் விளக்குகிறது.

"சட்டத்துறையில் அன்னை ஆயிஷா (ரழி)" எனும் பதிமூன்றாவது பகுதி, ஒரு ஹதீசை

எப்படியெல்லாம் விளங்கியிருக்கின்றது அந்த முதல் தலைமுறை என்பதை புரிய வைக்கிறது. ஹதீஸ் மறுப்பாளர்கள் வாசிக்க வேண்டிய பகுதி இது.

அறிவும், நம்பிக்கையும் இஸ்லாத்தின் இரு கண்கள். அறிவு எனும் ஒற்றைக் கண் வழி யாகவே இஸ்லாத்தின் எல்லா பகுதிகளையும் பார்க்க விரும்புவோர் முடிவில் தஜ்ஜால்களாகி விடுகின்றனர்.

இதை நிறுவதில் இந்நூல் வெற்றி பெற்றிருக்கிறது. அந்த வகையில் இது பாராட்டுக்குரிய முயற்சி.

தமிழகத்தின் புகழ்மிக்க ஸலாமத் பதிப்பகம், கர்ளாவியின் நூலொன்றை வெளியிட்டு தீவிர வாசிப்பாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது

கர்ளாவியின் நூல்கள் தமிழக அறிஞர்களால் தமிழ் வடிவம் பெற்ற காரணத்தால் இங்கே இஸ்லாமிய இயக்கங்களும், போராளிகளும் உருவாயினர். இதனால் இங்கே இன்னும் 'தாகூத்' காலூன்ற இயலவில்லை.

கர்ளாவி ஓர் அறிஞர்; செயல்வீரர். 'தாகூத்' களுக்கு எதிரான படையணியின் தலைவர். அவரின் நூல்களால் போராளிகள் உருவாகுவதே நியாயம். அதை இந்நூலும் சிறப்பாகச் செய்யும்


இந்நூல் சுன்னா மறுப்புக்கு எதிரான போர் வாள் போன்றது. சுன்னா மறுப்பு என்ற தீமையை வேரோடு சாய்க்கவல்லது. ஆழமான வாசிப்பின் வாசலை திறக்கும் திறன்மிக்கது.

உண்மையைத் தேடுவோர் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

அன்புடன்

**இல்யாஸ் ரியாஜி**

# நம்மை படைத்த இறைவன் ஒருவனே!



வானங்களையும் அதில் இருக்கின்ற சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் போன்றவற்றையும்; பூமியையும் அதில் வசிக்கின்ற தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய அனைத்தையும் படைத்தது "இறைவன் ஒருவனே" என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

ஆனால் படைத்த "கடவுள் ஒருவன் மட்டுமே" இருக்க ஹிந்துக்கள், பௌத்தர்கள், கிருஸ்தவர்கள், யூதர்கள், முஸ்லிம்கள் என ஒவ்வொரு மதத்தை சார்ந்தவர்களும் வெவ்வேறு கடவுள்களை வணங்கி வருகிறார்கள். இது எப்படி சரியாக இருக்க முடியும்..???

நம்மை படைத்தவனும்; அனைத்து ஆற்றல்களையும் சக்திகளையும் தன்னகத்தே கொண்டு; அனைத்தையும் மிகைத்தவனாகிய இறைவனை எந்த இறைத்தூதரோ, மனிதரோ, தலைவரோ, பூசாரியோ, குருவோ பார்த்திராத பொழுது உயர்ந்தோனாகிய இறைவனை நாம் எப்படி ஆணாகவோ, பெண்ணாகவோ, சூரியனாகவோ, கிரகங்களாகவோ அல்லது விலங்குகளாகவோ சித்தரிக்க முடியும்..?

இவ்வாறு சித்தரிப்பது சாதரணமான விஷயமா..?

உதாரணமாக ஒரு நாட்டின் அமைச் சருடைய புகைப்படத்தில் அவருடைய கண்ணை பெரிதாகவும், மூக்கை நீளமாகவும், அவரை பெண்ணாகவும் சித்தரித்து ஓவியம் வரைந்தால்... அந்த அமைச்சர் இதை ஏற்று கொள்வாரா? நிச்சயமாக இல்லை. கண்டிப்பாக கடுமையான தண்டனைகளை விதிப்பார். ஒரு அமைச்சர் தன்னை இழிவு படுத்தியவனை கடுமையாக தண்டிக்கிறார் என்றால் அணைத்து சக்திகளையும் ஒருங்கே பெற்ற இறைவன், தன்னை ஒருவன் மனம் போன போக்கில் சித்தரித்தால் பொறுத்துக் கொள்வானா..? இதை பற்றி நாம் ஆழமாக சிந்திக்க வேண்டாமா..?? ப்ளீஸ் சிந்தியுங்கள்...!!!

எனவே, நம்மால் பார்க்க முடியாத உயர்ந் தோனாகிய நம்மை படைத்த இறைவனின் வல்லமைகளை சிந்தித்து... படைப்பினங்களை வணங்காமல் படைத்தவனை வணங்கு வோம்.! அற்ப மனிதர்களுக்கு அஞ்சாது, அடிபணியாது; வல்ல இறைவனை அஞ்சுவோம், அடிபணிவோம்...!!!

இதைத்தான் இஸ்லாம் போதிக்கின்றது,

அல்லாஹ் என்றால் அவர் ஒரு மதத்துடைய கடவுள் கிடையாது மாறாக தமிழில் “இறைவன்” என்றும்; ஆங்கிலத்தில் “காட்(GOD)” என்றும்; ஹிந்தியில் “பகவான்” என்றும்; உருதுவில் “பர்வர்திகார்” என்றும் அழைக்கபடுவது போல அரபி மொழியில்- எவரிடத்திலும் தேவையற்ற குறிப்பாக தாய், தந்தை, குழந்தைகள், உணவு, உறக்கம், போன்ற எந்த மனித தேவைகளும் அற்ற; அனைத்து சக்திகளையும் ஒருங்கே பெற்ற; வானம், பூமி என அனைத்தையும் தனது கட்டுபாட்டில் வைத்துள்ள, நிகரற்ற ஓர் இறைவனே “அல்லாஹ்” என்று அழைக்கப் படுகின்றது.

ஆகவே, மாணவர்களுக்கு புத்தகத்தில் உள்ள பாடத்தை கற்று கொடுக்கும் ஆசிரியரை போன்று நம்மை நேர்வழி படுத்த



இறைவனாகிய அல்லாஹ் அருளிய வேதங் களில் இறுதி வேதமான குர்ஆனை நமக்கு கற்று கொடுக்க வந்த இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வழி காட்டுதலின் அடிப்படையில் வாழ்ந்து இந்த உலகத்திலும் மரணத்திற்கு பிறகுள்ள நிரந்தர மான மறு உலக வாழக்கையிலும் வெற்றி பெறவும்; இறைவனின் அருள் பெறவும்; சுவனம் புகவும், நாம் கூறுவோம்:

**“அல்லாஹ்வை தவிர வேறு கடவுள் இல்லை, முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்வின் அடிமையும் தூதரும் ஆவார்”.**

**- அப்துல்லா, விருத்தாசலம்**



எது முதலில்?

# வேர்களுக்கே முதலிடம்! கிளைகளை விட!!

இஸ்லாம் என்ற சன்மார்க்கத்தின் கட்டளைகளுள் வேர்கள் போன்ற அடிப்படைகளும் உண்டு. கிளைகள் போன்ற பிரிவுகளும் உண்டு. கிளைகளை விட அடிப்படைகளுக்கே முதலிடம் தர வேண்டும்.


ஈமான் என்ற இறை நம்பிக்கை இறைவன் ஒருவனே என்ற நம்பிக்கை, வானவர்கள் என்ற மலக்குகள், இறைத்தூதர்கள், வேதங்கள், மரணத்துக்குப் பின்னர் மறுமை வாழ்வு உண்டு என்பனவெல்லாம் ஈமான் என்ற நம்பிக்கையின் தூண்களாகும்.

**இதோ திருக்குர்ஆன் தெளிவுபடுத்துவதைப் பாருங்கள் ;**

“புண்ணியம் என்பது உங்கள் முகங்களை கிழக்கிலோ மேற்கிலோ திருப்பிக் கொள்வதில் இல்லை. எனினும் புண்ணியம் என்பது அல்லாஹ்வையும் மறுமை நாளையும் வானவர்களையும் வேதத்தையும் இறைத்தூதர்களையும் நம்புவோர் (இடத்தில்) உள்ளது. (2:177)

இன்னொரு வசனம் இப்படி கூறுகிறது :

இந்த இறைத்தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு இறக்கியருளப்பட்டதை நம்பினார். இன்னும் இறை நம்பிக்கையாளர்களும் நம்பினர். அனைவரும்



இமாம் யூசுப் அல்கர்லாவி

அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் நம்பினர். அவனுடைய தூதர்களிடையே நாம் பாகுபாடு காட்டாமல் நம்பினோம் என்றனர். மேலும் அவர்கள் கேட்டோம், கட்டுப்பட்டோம். எங்கள் இறைவா!... எங்களை மன்னிப்பாயாக உன்னிடமே திரும்பி வர வேண்டியிருக்கிறது” என்றும் கூறினர். (2:285)

மற்றொரு வசனம் இப்படி கூறுகிறது :

“யார் அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் வேதங்களையும் தூதர்களையும் மறுமை நாளையும் நம்ப மறுக்கின்றனரோ அவர்கள் (பார)தூரமான வழிகேட்டில் இருக்கின்றனர். (4:136)

இவ்வசனங்களில் கூறப்பட்டிருப்பவை ஈமான் என்ற நம்பிக்கையின் அடிப்படைகளாகும். கவனியுங்கள் இந்த வசன ங்கள் விதியைப் பற்றிய நம்பிக்கையைக் கூறவில்லை. எனினும் அது வேர் போன்றதுதான். அல்லாஹ்வை நம்ப வேண்டும் என்பதிலேயே விதி மீதான நம்பிக்கையும் வந்து விடுகின்றது.

எப்படி என்றால் இறைவனுக்குரிய எல்லாப் பண்புகளும் நிறைவாக அல்லாஹ்விடம் இருக்கின்றன. அவன் எல்லாம் அறிந்தவன் அவனது நாட்டம் எல்லாவற்றிலும் நடக்கும். அவனுடைய ஆற்றல் எல்லா இடங்களிலும் (தடையின்றி) செல்லுபடியாகும் என்று நம்புவதில் விதிபற்றிய நம்பிக்கையும் சேர்ந்து விடுகிறது. எனவே விதி மீதான, நம்பிக்கை தனியாக கூறப்படவில்லை.

ஆக கொள்கைதான் வேர், ஷரீயத் என்ற வழிமுறைகள் அதன் கிளை, ஈமான் என்ற நம்பிக்கைதான் வேர், செயல்கள் (அமல்கள்) அதன் கிளை.

விவாதக்கலை வல்லுநர்கள் மத்தியில் சில விவாதங்கள் உண்டு. ஈமான் என்ற நம்பிக்கைக்கும் செயல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

நற்செயல்கள் என்பவை ஈமானின் ஒரு பகுதியா? அல்லது அதன் விளைவா? நற்செயல்கள் இருந்தால் மட்டும்தான் ஒருவன் இறை நம்பிக்கையுள்ளவனாக முடியுமா? ஒருவனிடம் ஈமான் இருப்பதற்கான அடையாளம் தான் நற்செயலா? இப்படிப்பட்ட விவாதங்களுக்குள் நாம் நுழையப்போவதில்லை.

நாம் சொல்வது இதுதான் "உண்மையான ஈமான் நற்செயல்களை கண்டிப்பாக வெளிப்படுத்தும். ஒருவரிடம் எந்த அளவுக்கு ஆழமான ஈமான் இருக்கிறதோ அந்த அளவுக்கு அவர் இறைக் கட்டளைகளை நிறைவேற்றுவார். தடைகளை மீறமாட்டார்".

ஆரோக்கியமான ஈமானின் அடிப்படையில் செய்யப்படாத எந்த நற்செயலுக்கும் அல்லாஹ்விடம் சிறிதளவு கூட மரியாதை கிடைக்காது.

"இறை நம்பிக்கையற்றவர்களின் நற்செயல்கள் பாலைவனத்தில் தெரியும் கானல் நீர் போன்றது. தாகித்தவன் அதை தண்ணீர் என்றே எண்ணுகிறான். அதனருகே அவன் வரும்போது எதையும் காண்பதில்லை. அல்லாஹ் அங்கு அவனுக்கு விதித்திருக்கும் முடிவையே காண்கிறான். அவன் கணக்கை அல்லாஹ் தீர்க்கிறான். அல்லாஹ் துரிதமான கணக்கு தீர்ப்பவன்". *(24:39)*

இறை நம்பிக்கையற்றவர்களின் நற்செயல்களை பற்றி திருக்குர்ஆன் இப்படி காட்சிப் படுத்துகிறது.

எனவேதான் நாம் சொல்கிறோம். எல்லாவற்றினும் மேலாக நாம் பேணிப்பாதுகாத்திட வேண்டியதும், முதலிடம் தர வேண்டியதும் எதற்கு என்றால் கொள்ளைத் தூய்மைக்கும் அப்பழுக்கற்ற ஏகத்துவத்துக்கும் தான்.

இணை வைப்பையும் கொள்கைக் குழப்பத்தையும் விரட்டித் துரத்தி விட்டு நம் உள்ளத்தில் ஈமானை ஆழமாகப் பதித்திட வேண்டும். இறைவனின் நாட்டப்படி அதன் நற்பலன்களை நாம் பெற வேண்டும்.

லாயிலாஹா இல்லல்லாஹ் வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, எதுவுமில்லை என்ற ஏகத்துவ முழக்கம் நம் உயிராய், வாழ்வின் ஒளியாய் மாறிவிட வேண்டும். குஃப்ர் என்னும் இறை மறுப்பின் இருள்களையும் வழிகேட்டின் இருள் களையும் இதை வைத்து நாம் விரட்ட வேண்டும். அந்த அளவுக்கு நாம் ஈமானை வலிமையாக வைத்திருக்க வேண்டும். இதுவே எல்லாவற்றிலும் முக்கியம்.

அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார்:

"ஈமான் என்பது ஒரு சுடர். அதற்கு ஒரு வெளிச்சம் உண்டு. அதன் மூலம் பாவப்பனி மூட்டம் விலகும். பாவ மேகம் கலைந்தோடும், ஈமானின் வலிமைக்கும் பலவீனத்துக்கும் ஏற்ப இது அமையும். ஒருவரின் ஈமான் வலிமையாக இருக்கிறதா? வலிமை குன்றி இருக்கிறதா? என்பதை அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

சிலர் தம் இதயத்தில் ஈமானை சூரியன் போல் பிரகாசிக்க வைத்துள்ளனர். சிலர் ஒளிரும் நட்சத்திரம் போல, சிலர் பெரும் சுடர் போல, சிலர் பிரகாசமான விளக்குபோல, சிலர் பலவீனமான விளக்குபோல வைத்திருக்கின்றனர். அதற்கேற்ப அவர்களின் இதயங்களில் கல்வியும், ஞானமும் நற்செயல்களும் புறச்சூழல்களும் அமைகின்றன. மறுமையில் அது ஒளியாய் அவர்களின் முன்னே நிற்கும்.

இந்த ஏகத்துவப் பேரொளி மேலும் மேலும் பெருகும் போது அது மன இச்சைகளையும் (ஈமானில் ஏற்படும்) சந்தேகங்களையும் பொசுக்கிவிடுகிறது. அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் அறவே இணை வைக்காத மெய்யான ஏகத்துவவாதிகளின் ஈமான் சந்தேகத்தையும் மன இச்சைகளையும் தன்னுடன் வைத்துக் கொள்வதில்லை, விரட்டியடித்து விடுகிறது.

பாவங்களையும் நெருங்கவிடுவதில்லை. இதை புரிந்துகொண்டால் பின்வரும் நபிமொழிகளின் கருத்தும் நன்றாகப் புரியும்.

"அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடி லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற ஏகத்துவப் பிரகடனத்தை ஒருவர் சொன்னால் அல்லாஹ் அவருக்கு நரகத்தைத் தடை செய்துவிட்டான்".

"லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறியவர் நரகம் செல்ல மாட்டார்".

இப்படிப்பட்ட நபிமொழிகள் ஏராளம் உள்ளன. இவற்றுக்கு பலர் பல விளக்கங்களைக் கூறியுள்ளனர். சிலர் "இந்த நபிமொழிகள் கூறும் சட்டம் மாற்றப்பட்டு விட்டது" என்கின்றனர்.

(அதாவது ஏகத்துவவாதி பாவம் செய்தால் நரகம் செல்வார் என்று சட்டம் வந்துவிட்டது) நரகம் செல்லமாட்டார் என்ற சட்டம் மாற்றப்பட்டு விட்டது என்கின்றனர்.

சிலர் "கட்டளைகளும் தடைகளும் அல்லாஹ்விடமிருந்து வருவதற்கு முன்னர் நபி (ஸல்) அவ்வாறு கூறியிருந்தார்கள். ஷரீஅத் எனும் வழிமுறைகள் வந்த பிறகு அதைப் பேணாத ஏகத்துவவாதி நரகம் செல்வார்" என்கின்றனர்.

பாவம் செய்திட அஞ்சுவாரல்லவா?

அதே நேரத்தில் யார் அந்த ஏகத்துவக் கலிமாவை வாயளவில் மட்டும் கூறினாரோ அதன் உள்ளார்ந்த பொருளைப் புரிந்திடாமல் வாய் வார்த்தையில் இருக்கும் அழுத்தம் மனதில் இல்லாமல் கூறினாரோ அதே நேரத்தில் கலிமாவை சொன்னதற்கு நன்மை உண்டு என்று நம்பினாரோ அதற்கேற்ப அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும்.



சிலர் "பாவம் செய்யும் ஏகத்துவவாதி நரகம் செல்வார், எனினும் இணை வைப்பவரும் இறைவனை மறுப்பவரும் செல்லும் கொடிய நரகத்துக்குச் செல்ல மாட்டார்" என்று விளக்கம் தருகின்றனர். சிலர் "பாவம் செய்யும் ஏகத்துவவாதி நரகம் செல்வார். எனினும் நிரந்தரமாக இருக்க மாட்டார்" என்கின்றனர்.

இப்படிப் பல விளக்கங்களை கூறியிருந்தாலும் சரியான விளக்கங்களல்ல இவை.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "ஏகத்துவக் கலிமாவை மொழிந்தவர்" என்று கூறியிருப்பது கவனத்துக்குரியது. மொழிதலில் இருவகை உண்டு. ஒன்று நாவால் மொழிதல், மற்றொன்று உள்ளத்தால் மொழிதல்.

உள்ளத்தால் உளப்பூர்வமாக ஏகத்துவ கலிமாவை ஒருவர் உணர்ந்துதெரிந்து கூறினால் அதன் உண்மையான அர்த்தம் அவரின் இதயத்தில் பதிந்து விட்டால் அது அவரை நரகம் செல்ல விடாது. (அதாவது பாவங்களில் வீழ்ந்து விடாமல் அது அவரைப் பாதுகாத்துவிடும். ஏனெனில் அல்லாஹ்வைப் பற்றி நன்கறிந்தவர்

ஏனெனில் நன்மைகள் என்பவை அதன் வெளித் தோற்றத்தை வைத்தோ அதன் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை வைத்தோ மதிப்புப் பெறுவதில்லை. அது உள்ளத்திலுள்ள ஈமானுக்கு ஏற்பவே மதிப்புப் பெறுகிறது. தோற்றத்தில் ஒன்றாக வேறுபாடின்றித் தெரியும் இரண்டு நன்மைகளை மதிப்பிட்டால் அவற்றுக்கிடையே வானத்துக்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள வித்தியாசம் இருக்கும்.

ஒரே வரிசையில் அடுத்தடுத்து நின்று தொழுது கொண்டிருக்கும் இருவரின் தொழுகைக்கும் வானத்துக்கும் பூமிக்கும் இருப்பதைப் போன்ற வித்தியாசம் இருப்பதுண்டு. (நூல் : மதாரிஜுஸ் ஸாலிகீன், பாகம்–1, பக்கங்கள் : 329–331)

ஆக ஈமான் என்ற இறை நம்பிக்கைதான் வேர். கொள்கைதான் வேர், நற்செயல்கள் அதன் கிளைகள், கிளைகளை சீர் செய்வதற்கு முன்னர் வேரை சீராக வைத்திருக்க வேண்டும். கிளைகளை விட வேர்களுக்கே முன்னுரிமை தர வேண்டும்.

ராவுத்தர் குமாரசாமி கோயில்




செய்நன்றி என்பது அரிதாகிப்போன இந்த உலகத்தில் நூற்றாண்டுகளுக்கு முன்பு செய்த உதவிக்காக, முஸ்லிம் மக்களுக்கு நன்றி சொல்லும் விதமாய் கோயில் கட்டி கும்பிட்டுவருகிறது கொங்குச் சமூகம்.

கொங்கு நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி வட்டத்தில் சிவகிரி அருகே

# கொங்கு நாட்டில்

# மத நல்லிணக்கக் குறியீடு!

இருக்கிறது காகம் என்ற கிராமம். இந்தக் கிராமத்தில் கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தினர் இன்றளவும் வழிபட்டுவரும் தெய்வத்தின் பெயர் ராவுத்தர் குமாரசாமி. மசூதியா, கோயிலா என்று பிரச்சினை நடந்துவரும் நமது நாட்டில்தான் இப்படியோர் இணக்கத் தலம் காகம் கிராமத்தில் உள்ளது. எப்போதோ தங்களது மூதாதையர் பட்ட நன்றிக் கடனுக்காக இப்போதும் முஸ்லிம்களைத் தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள் கொங்குச் சமூகத்தினர்.

திருமுருகன்பூண்டி சிற்பங்கள், மருதமலை முருகன், திருமூர்த்திமலை சிவன் எனக் கொங்கு மண்டலத்தின் பெருமையை நினைவு கூரும் வகையில் பல ஆன்மிகத் தலங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம்விட ஒருபடி மேலாகத்தான் தெரிகிறது மத நல்லிணக்கத்துக்கு அடையாளமாக விளங்கும் ராவுத்தர் குமாரசாமி கோயில்.

பொதுவாகத் தமிழகக் கோயில்களில் முக்கியமாகக் கருப்பையா, சுடலை மாடன், அய்யனார் போன்ற சிறு தெய்வக் கோயில்களில் வண்ணமயமான குதிரைகள் மீது தெய்வங்கள் காவலுக்குச் செல்லும் வகையிலான சிற்பங்கள் அமைந்திருக்கும். குதிரைகள் மீது அமர்ந்திருப்பது அய்யனார் உள்ளிட்ட தெய்வங்கள் மட்டுமே. ஆனால் காகம் என்னுமிடத்தில் அமைந்துள்ள ராவுத்தர் குமாரசாமி கோயிலில் உள்ள குதிரையின் மீது முஸ்லிம் ராவுத்தர் கத்தியை ஏந்தியவாறு அமர்ந்திருப்பது மத நல்லிணக்கத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

காகம் பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயம், கொங்கு வெள்ளாள கவுண்டர் சமுதாயத்தின் கண்ணன் கூடத்தைச் சேர்ந்த ஒரு பகுதி. இந்தக் கோயிலில் சிறு சிறு தூண்களும் ஒரு கோபுரமும் விமானமும் இருக்கின்றன. நுழைவாயிலில் தொடங்கிக் கோயில் முழுவதும் ராவுத்தர்களின் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோயிலில் கருவறையின் வாயிற் கதவு மீது லுங்கி உடுத்திய ராவுத்தர் சிலை ஒன்று புகைபிடிப்பது போல் உள்ளதைக் காண முடியும். கருவறையில் உள்ள குமாரசாமி சிலைக்கு அருகே ராவுத்தர் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்க கோயிலில் துலுக்க நாச்சியார், ஐயப்பன் கோயிலில் வாவர் சாமி, மேலச்சூர் திரௌபதி அம்மன் கோயிலில் முத்தல ராவுத்தர் எனத் தொன்மை காலம் தொட்டே இந்துக் கடவுள் ஸ்தலங்களில் முஸ்லிம் காவல் தெய்வங்களைக் கொண்டாடும் கலாச்சாரம் உள்ளது.

தமிழ் முஸ்லிம்களான குதிரை வியாபாரம் செய்துவரும் ராவுத்தர்கள், கொங்கு வெள்ளாள கவுண்டர் சமுகத்தின் காவல் தெய்வமாக எப்படி

ஆனார்கள் என்று காகம் கிராமத்திலேயே சில பெரியவர்களிடம் விசாரித்தோம்.

“முந்நூறு, நானூறு ஆண்டுகளுக்கும் முன்னாடி எங்க மூதாதையர் கூட்டம் அரவக் குறிச்சி பக்கத்துல இருக்குற கன்னிவாடியில வாழ்ந்துக்கிட்டிருந்தாங்க. இப்ப அது கரூர்ல இருக்குங்க. அப்ப அங்கே ஏதோ பெரிய சண்டை வந்து எங்க மூதாதையரெல்லாம் ஆபத்துல இருந்தாங்களாம். அங்க இருந்த முஸ்லிம் ராவுத்தர்களாம் சேர்ந்து எங்க மூதாதயர்களை உசுரைக் காப்பாத்தி வெளியூருக்கு அனுப்பி வெச்சாங்களாம். அப்போ கன்னிவாடியிலேர்ந்து கிளம்பினவங்க ஈரோடு பக்கம் சிவகிரி வந்து செட்டிலாயிட்டாங்க. உசிரைக் காப்பாத்தி வாழ்க்கை கொடுத்த நன்றிக் கடனுக்காகத்தான் இங்க குலதெய்வக் கோயிலோடயே ராவுத் தருக்கும் சிலை வெச்சிருக்காங்க.

எங்க மூதாதையர்களோட உசிரைக் காப்பாத்தினாலதான் இன்னிக்கும் நாங்க தலைமுறை தலைமுறையாக இங்க வாழ முடியுது. அப்படிப்பட்ட நல்ல காரியத்தை செஞ்ச ராவுத்தர்களுக்கு நாங்க நன்றி செலுத் தணும் இல்லீங்களா? அதனாலதான் பரம்பரை பரம்பரையா நானூறு, ஐந்நூறு வருசமா இந்த ராவுத்தர் வழிபாட்டை விட்டுடாம வெச்சிருக் கோமுங்க'' என்று சொல்லி நம்மை ஆச்சரியப் படுத்தினார்கள்.

வெள்ளையம்மாள் காவியத்தில் கவிஞர் கண்ணாடி பெருமாள் இந்தத் தகவலை குறிப் பிட்டுள்ளார் என்பதையும் அவர்கள் பெருமை யோடு நினைவுகூர்கிறார்கள்.

“15ஆம் நூற்றாண்டில் தமிழ் புலவர் அருணகிரி நாதர் முருகனை ராவுத்தர் முருகன் என்று வர்ணிக்கிறார். ராவுத்தராக மாறிய முருகன் சுறா என்ற அசுரரைக் கொன்றதாகக் கூறப்படுகிறது, அசுரரைக் கொன்ற ராவுத்தர் என்றும் அழைக்கப்படுகிறார். அதன் பின்னர் அவர் மயில் ஏறிச் செல்வதால் மாமயிலேறும் ராவுத்தர் என்றும் அழைக்கப்படுகிறார்.

கண்ணன் கூட்டத்தினர் முருகனை அபிஷேக மூர்த்தி என்று அழைக்கின்றனர். பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவருக்காகப் பாரம்பரிய முறையில் கோயில் கட்டப்பட்டது. கோயில் கட்டுவதற்கு முன்பு ராவுத்தர் குமாரசாமி ஒரு கூரையின் அடியில் வைக்கப்பட்டிருந்தார். அங்கு வைக்கப்பட்ட ராவுத்தர் சிலைகள் வேங்கை மரத்தால் செதுக் கப்பட்டவை.. வேங்கை போர்க்குணம் மிக்க வன விலங்காகும். அபிஷேக மூர்த்தியின் கோபத்தைக் குளிர்விக்க வேண்டும் என்பது அவசியமாக இருந்தது. எனவே வேங்கை மரத் தால் சிலைகள் வடிவமைக்கப்பட்டன” என்று கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவரும் கோயிலின் பூசாரியுமான மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கோயிலின் வழிபாட்டு முறை களைப் பற்றி விசாரித்தபோது மேலும் சில சுவாரஸ்யமான தகவல்கள் கிடைத்தன.

“திங்கட்கிழமை வெள்ளிக்கிழமைன்னு வாரத்துக்கு ரெண்டு நாள் பூசைங்க. அமாவாசையான பூசை விசேஷமா இருக்கும். மூணு வருசத்துக்கு ஒருமுறை திருவிழா வரும். அப்ப ராவுத்தருக்குப் பொங்க வெச்சு குறைஞ் சது 500 கிடா வெட்டுவோமுங்க. இப்பல்லாம் அப்பப்ப எங்க கூட்டத்துலேர்ந்து வெளியூர்ல செட்டிலானவங்க வந்து ஆடு வெட்டி பூசை நடத்திட்டும் போறாங்க'' என்கிறார்கள் ஊர்க்காரர்கள்.

கோயில் சந்நிதியில் பொதுவாகப் பழங் களும் மலர்களும் மட்டுமே தெய்வங்களுக்குப் படைத்துவந்த நிலையில், ஆடு வெட்டி, மது வகைகளை வைத்துப் படைப்பது கிராமிய சிறுதெய்வ வழிபாட்டு முறையின் தாக்கமாகவே கருதப்படுகிறது.

காகம் கோயிலைப் பற்றி அலைபேசியில் விசாரித்த நம்மிடம், “ஈரோடு பக்கம் வந்தீங் கன்னா சொல்லுங்க. நாங்களே வந்து உங்களை அழைச்சு வர்றோம். நம்ம கோயிலுக்கு நீங்கள் வாரோணுமுங்க'' என்று அன்பைக் கொட்டு கிறார்கள் கிராமத்தினர்.

ஒருமுறை விசாரித்ததற்கே இப்படி அன்புகாட்டும் இவர்கள், மூதாதையர்களின் உயிர்களைக் காப்பாற்றிய ராவுத்தர்களுக்குக் கோயில் கட்டிக் கும்பிடுவதில் ஆச்சரியம் இல்லைதான்.

**- கவிபிரியா**

**நன்றி - மின்னம்பலம்.காம், 28, ஜூன் 2018**

இது போன்ற சமூக நல்லிணக்க குறியீடுகளை கண்டறிந்து அங்கே கள ஆய்வுகளை அதிகப் படுத்தி அங்குள்ள மக்களுக்கு இஸ்லாத்தை பற்றி தெளிவு படுத்துவது இன்னும் பலன் பல பயக்கும்

**இராவுத்தர் சாமி..?**

"கொங்கு மண்டலத்தில் இஸ்லாத்தையும் உண்மையான இறைவன் அல்லாஹ்வே என்பதையும் அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்லிடப் பயன்படும் ; வழி வகுக்கும் இதுபோன்ற ஆய்வுகள்.

இரண்டொரு ஆண்டுகளுக்கு நமது தாருல் இஸ்லாம் சார்பில் கொங்கு மண்டலத்தில் பெருநாள் சந்திப்பு ஒன்றை நடத்தி அந்த மக்களுக்கு இஸ்லாத்தை விரித்துரைத்தோம். இஸ்லாத்தின் பக்கம் அழைத்தோம். அப்போது இந்த தகவல்கள் கிடைத்திருந்தால், அந்த மக்களின் நெஞ்சங்களைத் தொட அன்றைக்கு இராவுத்தர்கள் செய்த பெரிய சேவைகளைத் தொட்டுக்காட்டி இருக்கலாம். நெருங்கி வந்திருப்பார்கள்.

வணங்க வேண்டியவர்கள் இராவுத்தர்கள் அல்ல, அல்லாஹ் ஒருவன்தான். ஏனெனில் ராவுத்தர்களே வணங்கியது அல்லாஹ்வைத் தான் என்பதை தெளிவுபடுத்தி இஸ்லாத்தின் பக்கம் அந்த மக்களை அழைக்கலாம். குறைந்தபட்சம் அவர்களை இந்துத்துவவாதிகள் முஸ்லிம்களுக்கெதிராக திருப்பி விடாமல் தடுக்கலாம். இந்துத்துவ பாசிசம், அங்கே படர்ந்திடாமல் தடுக்க இந்த ஆக்கம் நிச்சயம் பயன்படும். இன்ஷா அல்லாஹ்.

இதுபோன்ற கள ஆராய்ச்சிகள் அதிகமதிகம் தேவைப்படும் காலம் இது.

*குறிப்பு : 2016-ஆம் ஆண்டு நமது "வேர்கள்" பதிப்பகம் புகழ்பெற்ற வழக்கறிஞர் "லஜபதிராய்" அவர்கள் எழுதிய "நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?" என்றொரு நூலை வெளியிட்டது.*

*இந்த நூல் நாடார் சமூகத்தினடரிடம் இஸ்லாத்தை எடுத்துச் சென்றிட மிகவும் உதவியது என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.*

## மதுரையில் தாருல் இஸ்லாம் மாணவரணி சார்பாக கல்லூரி மாணவர்களுக்காக நடைபெற்ற ஈத்மிலன் நிகழ்ச்சி





*மதுரையில் தாருல் இஸ்லாம் மாணவரணி சார்பாக கல்லூரி மாணவர்களுக்காக நடைபெற்ற ஈத்மிலன் நிகழ்ச்சி. இதில் சிறப்பு தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தப்பட்டது. அதில் 1. இஸ்லாம் ஓர் அறிமுகம், 2. இஸ்லாமியர்களையும் மாற்று மதத்தினரையும் பிரிக்கும் சூழ்ச்சிகள், 3. இளைஞர்களின் இன்றைய நிலை என்ன?, 4. எதை நோக்கி இளைய சமுதாயம் செல்கின்றது? இதை சீர்த்திருத்தம் செய்வது எப்படி போன்ற தலைப்புகளின் கீழ் உரைகள் நடத்தப்பட்டது. இவையனைத்தும் நாம் ஒன்றாய் பயணித்து சரி செய்வது எப்படி? என்று சுமார் 3 மணிநேர கலந்துரையாடல் நடைபெற்றது.*

**- யாசர் அரஃபாத்**

மகளிர் மன்றம்

# ஷாஃபாஸின் சாதனை!

குடும்ப வாழ்வில் சிக்கனம் வேண்டும், வரவுக்குள் செலவை நிறுத்திட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

அந்தச் சீரிய கொள்கையைக் கடைப் பிடித்து வீட்டில் பணச் சிக்கல்களையும் அதனால் வரும் மனச் சிக்கல்களையும் தவிர்த்திட வேண்டும் என்றும் குறிப்பிட்டி ருந்தோம்.

இவையெல்லாம் இஸ்லாம் என்ற இலட்சிய வாழ்க்கையை நோக்கி நம்மை இட்டுச் செல்ல வேண்டும்.,

நமது குடும்ப அமைப்புகள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் பல்கலைக் கழகங்களாகத் திகழ்ந்திட வேண்டும்.

நமது மேலைநாடுகளில் பெண்கள் தாம் அதிகமாக இஸ்லாத்திற்கு வருகின்றார்கள்.

ஆம்!

இன்று மேலை நாடுகள்தாம் இஸ்லாத்தை அதிகமாக வெறுக்கின்றன. இந்த மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது பல்வேறு தாக்குதல்களையும் நடத்தி வருகின்றன. அப்படி இஸ்லாத்தின் மீது அவர்கள் தொடுத்திடும் தாக்குதலுக்கு மிகவும் அதிகமாகப் பயன்படுத்துவது பெண்கள், பெண்களின் உரிமை என்பவற்றைத்தான்.

ஆனால் அங்கே இஸ்லாத்தை நோக்கி வருபவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் தாம்.

அண்மையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அமெரிக்க சகோதரி ஒருத்தி சொல்வதைக் கேட்போம் ;

**எனது பெயர் டயா ரிச்சர்ட்சன்**

வாழ்க்கை என்பது எனக்குக் கேளிக்கை, கும்மாளம், இந்தக் கேளிக்கைகளின் கூடாரங்கள்தான் (கிளப்கள்) நான் காலத்தைக் கழிக்கும் இடங்கள். நான் மட்டுமல்ல, என்னைப் போன்றவர்களெல்லாம் எதற்கெடுத்தாலும் இந்தக் கேளிக்கைக் கூடாரங்களை நோக்கித்தான் ஓடுவார்கள்.

இங்கே எங்கள் நண்பர் ஒருவருக்கு நன்றி தெரிவிக்கும் நாள் ஒன்றுக்கு - அதாவது எல்லோரும் மகிழ்ந்திருக்கும் நிகழ்ச்சி ஒன்றுக்கு - ஏற்பாடு செய்திருந்தோம். அதற்காக ஆட்டம், கொண்டாட்டம். இதற்கும் அதே கேளிக்கை அரங்கையே தேர்ந்தெடுத்திருந்தோம்.

அந்தக் கிளப்பில் என் மாமா என்னைச் சந்தித்தார். அவர் என்னை சந்தோசப்படுத்த நினைத்தார்.

அவர் என்னிடம் "நீ எவ்வளவு குடிப்பாய்? எனக் கேட்டார். என்னால் முடிந்த அளவு குடிப்பேன்" என்றேன்.

நன்றி செலுத்தும் கூட்டத்தில் நாங்கள் எல்லோரும் குடித்துக் கும்மாளம் போட்டோம். அரங்கையே கபளீகரப்படுத்தி னோம். கூட்டம் முடிந்த பின் என்னுள் ஏனோ ஒரு மனக் கலக்கம்.

எனக்கொரு முஸ்லிம் தோழி. அவளது பெயர் ஷாஃபாஸ். அவள் நட்புக்கு நல்ல தொரு இலக்கணமாய் வாழ்ந்தவள். நெருடல் வரும்போது நான் அவளை நெருங்குவேன். ஒருமுறை அவள் ஒரு திருமணத்திற்கு என்னை அழைத்தாள். திருமணம் பள்ளிவாசலோடு இணைந்த ஒரு மண்டபத்தில் நடைபெற இருந்தது.

அங்கே நான் வழக்கமாக அணிந்திடும் பாதி ஆடையோடு செல்ல முடியாது

என்பதை நான் நன்றாக அறிவேன். இதனை அவளும் அறிவாள். ஆகவே என்னை முழுமையாக மறைத்திடும் ஆடையொன்றைப் பெற்றுத் தந்தாள்.

ஷாஃபாஸ் எனக்காகத் தந்த ஆடையை அணிந்தேன். நிலைக் கண்ணாடி முன்னால் நின்றேன். என்னுள் ஒரு புதுத் தோற்றம் - இவ்வளவு அழகான தோற்றம் மறைத்து கிடந்ததை கண்டேன்.

திருமணத்திற்குச் சென்றேன். அங்கே நிலவிய அமைதியான சூழ்நிலை என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஆட்டம், பாட்டம், கபளீகரங்கள்... இவை இல்லை.

அங்கே ஒலித்த பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற சொற்றொடருக்கு என்ன பொருள் என்று என் தோழியைக் கேட்டேன். அதற்கவள், "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால்" எனப் பதில் சொன்னாள்.

அதேபோல் "அல்லாஹூ அக்பர்" என்பதன் பொருள் என்ன? எனக் கேட்டேன். "இறைவன் பெரியவன்" எனப் பதில் சொன்னாள். அங்கே நிலவிய அமைதியான ஆனந்தம் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

நான் கிடைக்க முடியாத ஒரு பெரும் ஆத்மீக அமைதியைப் பெற்றவளாய் அங்கிருந்து திரும்பினேன். என் கையில் பிரார்த்தனைகளின் தொகுப்பு என்ற நூலைத் தந்தாள் எனது தோழி. வீட்டுக்குப் போய் விட்டேன். அவற்றைப் படித்துக் கொண்டிருந்தேன்.

இந்நிலையில்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது...

*2001* செப்டம்பர் *11*-ஆம் நாள் நிகழ்வுதான் அது. அமெரிக்காவின் மிக முக்கியமான இரண்டு கட்டடங்கள் தாக்கப்பட்டன.

முஸ்லிம்கள்தாம் அவற்றைத் தாக்கினார்கள், தகர்த்தார்கள் எனக் கடுமையான செய்திகள்.

எல்லோரும் முஸ்லிம்களை கொடூரக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தார்கள்.

முஸ்லிம் ஆண்களும், பெண்களும் தாக்கப்பட்டார்கள். முஸ்லிம் பெண்கள் தங்களை முஸ்லிம்களாக அடையாளம் காட்டும் பர்தாவை அணிந்து கொண்டு நடக்க முடியாது என்றொரு நிலை. ஷாஃபாஸுடைய அண்டை வீட்டார் பலர் ஷாஃபாஸிடம் "நீ கலவரங்கள் காலம் கடக்கும் வரை இஸ்லாமிய முறைப்படி ஆடைகளை அணிய வேண்டாம்" எனக் கேட்டுக் கொண்டார்கள்.




ஆனால் அவளோ இஸ்லாமிய ஆடைகளை அணியாமல், குறிப்பாக "தலையை மறைக்காமல் வெளியே போகமாட்டேன்" எனச் சொல்லிவிட்டாள்.

என்ன செய்வது? இப்போது நான் ஷாஃபாஸின் மெய்க்காப்பாளியாக மாறினேன். அவளை யாராவது முறைத்தாள் நான் இடை மறிப்பேன்.

நான் ஷாஃபாஸையும் அவள் சார்ந்த இஸ்லாமிய சமுதாய அமைப்பையும் நன்றாக அறிவேன். அவர்கள் அமைதியானவர்கள், அன்பானவர்கள். இதை நான் பல நேரங்களில் பலருக்கும் சொன்னேன்.

ஷாஃபாஸ் தன்னை முழுமையாக மறைத்துக் கொண்டுதான் அந்த நெருக்கடியிலும் நடந்தாள், வாழ்ந்தாள்.




அவளிடம் எந்தக் கலவரமுமில்லை. இவையெல்லாம் என்னை மிகவும் கவர்ந்தன. அவள் தந்த பிரார்த்தனை நூலை நான் அடிக்கடி படித்தேன். வழக்கம்போல் ஒரு நாள் ஷாஃப்பாஸிடம் எனக்காகக் காத்திருக்கச் சொல்லிவிட்டு அவள் வீட்டுக்குச் சென்றேன்.

கதவைத் திறந்தாள்...

"வா" என்றாள். "உன்னோடு வாழ்ந்திட வந்தேன் நான் சாட்சியம் சொல்ல வந்தேன்" என்றேன்.

அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதர் எனச் சாட்சியம் சொல்ல வந்தேன் என்றேன்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது தான் எத்துணை எளிதாக இருக்கின்றது.

இப்போது நான் எனது இரண்டாவது பர்தாவையும் வாங்கிக் கொண்டேன்.

புகைப் பிடிப்பது, குடிப்பது, கூத்தாடுவது, கிளப்களில் பேயாட்டம் ஆடுவது இவற்றை விட்டு விட்டு அமைதியாக வாழ ஆரம்பித்துள்ளேன். இஸ்லாத்தை வாழ்க்கையை வழி நடத்தும் கொள்கையாக ஆக்கிக் கொண்ட பின்னர்தான் ஷாஃப்பாஸ் என்ற எனது தோழியைப் பற்றிய ஓர் உண்மை தெரிய வந்தது. அது இருபது வருடங்களுக்கு முன் அவள் "ஜோவாஸ் சாட்சி" என்ற பிரிவிலிருந்து இஸ்லாத்திற்கு வந்தாள் என்பது.

சகோதரிகளே...

மேலை நாட்டு வாழ்க்கை முறை மனிதர்களை மனிதர்களாக வாழ வழிகாட்டவில்லை. குடி, கேளிக்கை இவற்றைத்தான் அது வாழ்க்கையாக வழங்குகின்றது. மனிதர்களுக்குத் தேவைப்படும் வழிகாட்டுதல்களை இஸ்லாம் நிறைவாகவே வழங்குகின்றது. அதுதான் இஸ்லாத்தின் இப்போதைய பலம்.

ஷாஃப்பாஸ் என்ற சகோதரி தன் தோழியை இப்படி நரகத்திலிருந்து காப்பாற்றி, சொர்க்கத்தை நோக்கி இட்டுச் சென்றுள்ளாள்.

ஆரவாரமில்லாமல் இந்த அழகிய பணியை அனைவரும் செய்யலாமே..

**- எம்.ஜி.எம்.**



# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் -<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு<br>- மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் -<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் -<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை -<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.